விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை (04.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## மூதாட்டியின் காதை அறுத்து தோட்டை எடுத்த கொள்ளையர்கள்

### யாழ். கோப்பாய் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மூதாட்டியின் காதை அறுத்து தோட்டை எடுத்ததுடன் தொலைபேசிகள் மற்றும் பத்தாயிரம் ரூபாய் அளவிலான பணம் என்பவற்றையும் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது..

யாழ்.கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை இனந்தெரியாத சிலர், வீட்டில் தனிமையிலிருந்த வயோதிபத் தம்பதிகளை கடுமையாகத் தாக்கி அங்கிருந்து நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

கொள்ளையர்கள் வீட்டின் புகைக்கூடு வழியே உட்புகுந்த 15

## சைக்கிள் மீது ஆட்டோ மோதியதில் முதியவர் பலி

### வல்லை வெளியில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லைவெளியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேலைமுடித்து வல்லை வீதியால் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் மீது முச்சக்கர வண்டி மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளதாகவும், இந்த நிலையில் சைக்கிளில் பயணித்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதா 15

### அனைத்து பட்டதாரிகளுக்கும்

## ஆறு மாத காலத்தில் வேலை வழங்கப்படும்

### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டிருந்த நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் இரண்டுமாத காலப் பகுதியில் நடத்தப்பட்டு, நாட்டிலுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை அடுத்த ஆறுமாத காலப்பகுதியில் நடைமுறை 16

### வட மாகாணத்தில் போதை தொடர்பில்

## யாழ்.ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் விவாதம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் போதைப்பொருட்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும்,அது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாகவும் யாழ்.மாவட்ட 15

## வலி. வடக்கு மயிலிட்டியில் அடிப்படை வசதிகள் இல்லை

### ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மயிலிட்டியின் ஒரு பகுதி மக்களின் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட போதும், அங்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட வசதிகள் இல்லாமையால் மக்கள் மீள்குடியமர முன்வருகிறார்கள் இல்லை. 15

## பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

### தொடர்பில் அடுத்த வாரம் கலந்துரையாடல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தேசிய அரசாங்கத்திற்கும் எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் தீர்மானம் எடுக்க ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் கட்சித் தலைவர்கள் அடுத்த வாரம் கூடவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ 15

# வடக்கில் உள்ள அனைத்து மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இரு ஆணைக்குழுக்கள்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



**(மட்டக்களப்பு) வடக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கும், அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கும் இரண்டு ஜனாதிபதி சிறப்புச் செயலணிகள் அமைக்கப்பட உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் 15

## யாழ். வீதிகளை அலங்கரித்த மிக பழைமையான கார்கள்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு விண்டேஜ் கார் உரிமையாளர்கள் சங்கத்தின் 30வது ஆண்டு நிறைவைக் 16

### 60 மில்லியன் பெறுமதியான

## 403 கிலோ கஞ்சா நீர்கொழும்பில் மீட்பு

60 மில்லியன் பெறுமதியான 403 கிலோகிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பில் பொலிஸ் விஷேட அதிரடி படையினர் மற்றும் கடற்படையினர் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பின் போது குறித்த கஞ்சாத் தொகை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம)

### ஆதாரங்களை வழங்கிய போதும்

## ஜனாதிபதி உறவுகளை மீட்டுத் தரவில்லை!

### காணாமல் போனவர்களின் உறவினர் விசனம்

(திருகோணமலை)

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான ஆதாரங்களை வழங்கிய போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது உறவுகளை மீட்டுத் தர மறுத்து விட்டதாக திருகோணமலை மாவட்டத்தில் ஒரு வருடமாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட் 02

## யாழ்.கோட்டையை ஒப்படைத்தால் பொதுமக்களின் காணிகள் விடுவிப்பு

### இராணுவம் அறிவித்ததாக அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டையை வழங்கினால் இராணு முகாம்களை அங்கு நகர்த்திவிட்டு மக்களின் காணிகளை விடுவிக்க முடியும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட 15

மகாராஜா பொதிகள் சேவை
GTY Express Sri Lanka
11kgக்கு மேல்
01kgக்கான கட்டணம்
ParcelLk

| கனடா | லண்டன் | ஜேர்மனி | சுவிஸ் |
| --- | --- | --- | --- |
| Rs.900/= | Rs.600/= | Rs.650/= | Rs.900/= |

இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4338, 021 205 5024
இல.25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 493 0200, 076 690 8961
கந்தசாமி கோவில் முன்பாக, ஏ9 வீதி, கிளிநொச்சி. 021 493 0330

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் புத்தூர் வீதியில் ஈவினை, வாகையடியில் அமைந்துள்ள தோட்டக் காணி 19 பரப்பு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 0757469919**

(3109)

## புலமைப்பரிசில்-2018

தரம் 5 மாணவர்களுக்கான

**“புலமைச்சிட்டு”**

(நாவலர் வெளியீடு) மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**1 ஆவது பரீட்சை- 04.03.2018 இன்று**

- ஞாயிறு தோறும் பரீட்சை
- வெளி மாணவர்களும் பரீட்சை எடுக்க முடியும்.
- அதிகூடிய புள்ளி பெறுவோருக்கு சிறப்பு பரிசில்கள்

தொடர்பு

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்

T.P:-0774598440

(3110)

## சைவ உணவகம் வாடகைக்கு

பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் சைவ உணவகம் வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: 0778449752, 0771777479**

(3108)

## 45,000 – ஒரு இலட்சம்

வரை வருமானம் + OT + கமிஷன் உடன் 200க்கு மேற்பட்ட டுபாய் வேலைவாய்ப்பு

விற்பனை ஊக்குவிப்பாளர் (Merchandisers)
காட்சிப்படுத்தல் உதவியாளர் (Shelf Stockers)
துப்பரவுப் பணியாளர் (Cleaners) ஆண்/பெண்
தொழிலாளர்கள் (Labourers)

இலவசம் அதிதுரித வர்த்தக - சந்தைப்படுத்தல் பயிற்சி

குறிப்பு: கம்பனி பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம் அறவிடப்படும்

விபரங்களுக்கு 0777 324 004

TGL Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 221 - 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

(சி-1781)


## ஜனாதிபதி உறவுகளை...

டோர்களை கண்டறிவதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட அலுவலகம் தொடர்பில் நம்பிக்கை இல்லையெனவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் போரின் இறுதி நாட்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்தும் உறவுகளால் நேரடியாக கையளிக்கப்பட்ட நிலையிலும் கைதுசெய்யப்பட்டும், கடத்தப்பட்டும் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இந்த நிலையில் தமது உறவுகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில், திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்களது சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து நேற்று சனிக்கிழமையுடன் ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளது.

ஒரு வருட நிறைவை முன்னிட்டு திருகோணமலை ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக மாபெரும் கண்டன போராட்டத்தை நேற்று சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பொது அமைப்புக்கள் உட்பட பல அமைப்புக்களும் கலந்து கொண்டனர்

குறித்த போராட்டத்தின் முடிவில் ஆளுநர் செயலகத்திலிருந்து திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலைய சுற்று வட்டத்திற்கு கண்டனப் பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் திருகோணமலை மாவட்ட தலைவி நாகேந்திரன் ஆசா ஊடகத்தின் மீது தாம் மிகப்பெரும் நம்பிக்கை வைத்துள்ளதாக தெரிவித்தார்.

அத்தோடு அரசியல் வாதிகளை தவிர்த்து தங்களது மகஜரினை ஊடகவியலாளர் சார்பில் சிரேஷ்ட ஊடகவியலாளரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பொ.சற் சிவானந்தத்திடம் கையளிப்பதாகவும் தெரிவித்தார். (ம)


## Spoken English

கிழமை நாட்களில் மாலை நேர ஆங்கில பாடநெறி !
16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்!

**Diploma In English**
( SPOKEN ENGLISH )

காலம்: 06 மாதங்கள்
புதிய பிரிவு ஆரம்பம்

**05.03.2018 மாலை 4.30 மணி**
(திங்கள் மற்றும் புதன் தினங்களில் மாலை 04.30 - 06.00 மணி வரை இடம்பெறும் )

**E-CITY COLLEGE OF ENGLISH**
இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். ( வீரகாளிஅம்மன் கோவில் அருகில்)

Tel : 0212217106 / 0770610271 / 0774924166

web: ecitycollege.lk

(சி-1779)


## இன்று பொன்விழா காணும் நாயகிக்கு “திருவாசகக்குயில்” விருது வாழ்த்துக்கள்



**“திருவாசகக்குயில்” லீலாவதி இராசரத்தினம்**

இன்று 50ஆவது பிறந்த நாளில் பொன்விழா காணும் “திருவாசகக்குயில்” காரை லீலாவதி இராசரத்தினம் அவர்களுக்கு எமது கலாமன்றத்தினரால் 01.03.2018 அன்று நடத்தப்பட்ட கலாமன்ற ஸ்தாபக தின நிகழ்வில் “திருவாசகக்குயில்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்கும் பொன் விழாவுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வதுடன் மேலும் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-1778)


| கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்-யாழ்.கிளை | நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் |
|---|---|

# மரண அறிவித்தல்

## அமரர் பொன்னுச்சாமி காங்கேயநாதன் (J.P)

ஓய்வுநிலை மின்பொறியியலாளர், அறங்காவலர் செந்தில் முருகையா திருக்கோயில், முன்னாள் வலி மேற்கு பிரதேச சபை உறுப்பினர், முன்னாள் கலைநகர்- நேருஜி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்)

பிறப்பு 08 - 06 - 1940



இறப்பு 28 - 02 - 2018

வட்டு வடக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பொன்னுச்சாமி காங்கேயநாதன் அவர்கள் 28.02.2018 புதன்கிழமை காலையன்று குகபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-ஆச்சிமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற விமலராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வீரபத்திரர்-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பொன் சண்முகானந்தசிவம் (J.P) (ஓய்வுநிலை மின்பொறியியலாளர், தவிசாளர்-வலிமேற்கு மத்தியஸ்தர் சபை), பொன்.பத்மநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பத்மஸ்ரீ (பிரான்ஸ்), Dr.கண்ணன் (சிரேஷ்ட விரிவுரையாளர்-கணித புள்ளி விபரவியற் துறை, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக் கழகம்), சசி (UK), குருபரன் (பிரான்ஸ்), கமலன் (விற்பனை நிறைவேற்று அதிகாரி-செலிங்கோலைஃப்), உமையாள் (ஜேர்மனி), தனுசா ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநடேசன் (பிரான்ஸ்), லதா (ஆசிரியை-அராலி இந்துக் கல்லூரி), காண்டீபன் (UK), அனுரதி (பிரான்ஸ்), மதுசூதனி (வட பிராந்திய காரியாலயம்-இ.போ.ச), நீலவண்ணன் (ஜேர்மனி), கேதீசன் (ஆசிரியர்-வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌதமன், சாளினி, கபிலன், பவித்திரன், நிருயனா, திவியனா, கௌசிக், சுகிர்தா, வேதன், பவிதா, சாம்பவி, மிதுயா, பவனா, லஸ்வினியா, நிலா, நிலவன், நிலவினி, நிலாவிழி, யதுர்சனா, கவியாசினி, தர்மிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:குடும்பத்தினர்
Dr.K.Kannan-0773241932
Mr.K.Kuruparan-0778341073
Mr.K.Kamalan-0776203884

(3105)


## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



**Spoken English**
Veta Fluency Diploma

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 8 : 00 a.m Sat, Sun 9.30 a.m. | Mon,Wed,Fri 10:00 a.m Sat, Sun 3:00 p.m. | Sat, Sun 8.00 a.m | Sat, Sun 2.30 p.m. Tue,Thu 10 : 00 a.m | Sat, Sun 10.00a.m. |

12-03-2018 முன்னர் பதிவு செய்வோருக்கு 20% கட்டணக்கழிவு

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

**IELTS** IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்

http://www.itdmi.com/lifeskill-tamil.html


DMI COMPUTER EDUCATION


(சி-1774)

# DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

## ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து
# மட்டு.மங்களராமய விகாராதிபதி கறுப்புக்கொடி கட்டிப் போராட்டம்







(ஏறாவூர்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த நிலையில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனதேரர் கறுப்புக்கொடி கட்டி போராட்டம் நடத்தியுள்ளார்.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 385 பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, ஜனாதிபதி மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ள பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது.


இந்நிலையில் மட்டக்களப்பில் உள்ள பௌத்த விகாரை, கிறிஸ்தவ தேவாலயம், பள்ளிவாசல் ஆகியவற்றுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாமல் அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு மட்டும் செல்வாரானால் அதனை தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும், இதற்கு எதிர்ப்பு நடவடிக்கையினை மேற் கொள்வதாகவும் மங்களராமய விகாரை வாசல் கோபுரத்தில் ஏறி கறுப்புக் கொடியினை பறக்கவிட்டு விகாராதிபதி அம்பிட்டிய சுமனதேரர் எதிர்ப்பினை தெரிவித்துள்ளார். (இ-7-10)

## கிழக்கிலும் நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தி
# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆளுநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பு தங்களது சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது.

இதனை முன்னிட்டு திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் கண்டனப் போராட்டத்தை நேற்றுக் காலை மேற்கொண்டனர்.



இதில் கடத்தப்பட்டும் கையளிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் திருகோணமலை மாவட்ட தலைவி நாகேந்திரன் ஆசா ஊடகவியாளர்களுக்கு கருத்து வெளியிட்டார்.

ஊடகத்தின் மீது தாம் மிகப்பெரும் நம்பிக்கை வைத்துள்ளதாகவும் அதனால் அரசியல்வாதிகளை தவிர்த்து தங்களது மகஜரினை சிரேஷ்ட ஊடகவியலாளரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பொ.சற்சிவானந்தத்திடம் கையளிப்பதாக தெரிவித்தார்.

பொது அமைப்புக்கள் உட்பட பல அமைப்புக்கள் இணைந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். (இ-7)

# ரத்துபஸ்வல வேறு தம்புத்தேகம வேறு
## மகிந்தவின் விளக்கம் இது

(கொழும்பு)

ரத்துபஸ்வலவில் சுத்தமான குடிநீர் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கும் தம்புத்தேகம சம்பவத்திற்கும் மிகப் பெரிய வித்தியாசம் உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம மோதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரத்மலான சொர்ணமாலி விகாரையில் நேற்றுக் காலை சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த சமய நிகழ்வுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள், தம்புத்தேகமவில் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது மேற்



கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம விவசாயிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றேன். கைது செய்யப்பட்ட நபர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் செயற்பட வேண்டும். இப்படியான சம்பவங்களின் போது பொலிஸாரின் ஊடாக அடக்குமுறையை கையாண்டு மக்களின் கருத்துக்களைக் கூறும் உரிமையை தடுக்க முடியாது. இது அநாவசிய தாக்குதலாகவே நாங்கள் பார்க்கின்றோம். ரத்துபஸ்வல சம்பவத்துடன் ஒப்பிடுகையில் தம்புத்தேகம சம்பவத்தில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது வெலிவேரிய - ரத்துபஸ்வல பகுதியில் தொழிற்சாலைக் கழிவினால் நிலத்தடி குடிநீர் மாசமடைவதை எதிர்த்தும் சுத்தமான குடிநீரைக் கோரியும் 2013 ஆம் ஆண்டு பொது மக்களால் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தைக் கலைப்பதற்காக இராணுவம் குவிக்கப்பட்டதோடு பொது மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தையும் நடத்தினர்.

இதன்போது மாணவர்கள் இருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மண்டபம் முகாமிலுள்ள ஈழ அகதியை
# பொலிஸார் பின்தொடர்ந்து கண்காணிக்கக்கூடாது
## மதுரை உயர் நீதிமன்றக்கிளை உத்தரவு

(மதுரை)

தமிழகம் மண்டபம் முகாமிலுள்ள ஈழ அகதி ஒருவரின் கணவரை, முகாம் பொலிஸார் பின்தொடர்ந்து கண்காணிக்கக் கூடாது என உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

தமதுகணவர்தயாபரராஜை முகாம்பொலிஸார் பின் தொடர்ந்து கண்காணிப்பதாக அவரின் மனைவி உதயகலா உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தமது கணவரை, அகதிகள் முகாம் பொலிஸார் சட்டவிரோதமாக தனிமைப்படுத்தி வைத்துள்ளனர் என்றும், எங்கு சென்றாலும் பின்தொடர்ந்து கண்காணிக்கின்றனர் என்றும் அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், தங்களது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தமது கணவரை முன்னிலைப்படுத்த கியூ பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் குறித்த ஈழ அகதி தமது மனுவில் கோரியுள்ளார். இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்த நீதிபதிகள் மனுதாரரின் கணவர், இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாரத்தின் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முன்னிலையாக வேண்டும்.

அத்துடன், அவரது தொலைபேசி இலக்கத்தை பொலிஸாரிடம் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸார் அவரை பின்தொடர்ந்து கண்காணிக்கக்கூடாது என்றும் நவீன கருவிகள் மூலம் கண்காணிக்கலாம் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். (இ-7)

# ஐ.தே.கவை சேர்ந்த எவரும் ரணிலை எதிர்க்கவில்லை
## அமைச்சர் கிரியெல்ல சமாளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த எவரும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கவில்லை என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டு வரப்படும் எந்தவொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடையாது எனவும் அவர் திட்டவட்டமாக கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.


குறிப்பாக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவினால் கொண்டு வரப்பட உள்ளதாகக் கூறப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை, கட்சியின் நிலைப்பாடு கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




இதேவேளை, அந்த யோசனைக்கும் எவரும் ஆதரவளிக்க மாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சினைகளை கட்சிக்கு உள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானது எனவும், இந்தப் பிரச்சினைகளுக்கு வெளியில் சென்று தீர்வு பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இனப்படுகொலையைக் கண்டித்து மலையகத்தில் நேற்று போராட்டம்





(லிந்துலை)

சிரியாவில் நடைபெறும் படுகொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மலையகத்தில் லிந்துலை பகுதியில் நேற்று மதியம் கண்டனப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் லிந்துலை நாகசேனை நகரப் பகுதியில் இளைஞர், யுவதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சில வாரங்களாக சிரியா நாட்டில் பச்சிளம் குழந்தைகள் மற்றும் பெண்கள், அதிகபடியாக படுகொலை செய்யப்பட்டனர். இந்த இனப்படுகொலைக்கு எதிராகவும், பச்சிளம் குழந்தைகளை கொல்வதை ஐ.நா. பார்த்துக் கொண்டிருப்பதை கண்டித்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 2009 இல் இதேபோன்ற அழிவை ஈழத்தமிழினமும் சந்தித்திருந்தது. அந்த வகையில் மலையக மக்கள் சார்பில் சிரிய மக்களுக்காக போராடுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகள் தெரிவித்தனர். அத்தோடு யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகுவர்த்திகளை ஏற்றி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

**வேலையாட்கள் தேவை**

தமிழ், ஆங்கிலம் விரைவாக ரைபிங் செய்யக்கூடியவர்கள்.
**(Speed Typing)**

ரூபிரகபி கிராபிக் டிசைனர்ஸ்

இல.1219 பூநாறி மடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7776, 0717939246

# முத்தரப்பு தொடர்: சகிப் விலகல்

முத்தரப்பு 'ரி20' தொடரில் இருந்து பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன், காயம் காரணமாக விலகியுள்ளார்.

கொழும்பில் முத்தரப்பு 'ரி20' தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கின்றன.

இத்தொடருக்கான பங்களாதேஷ் அணியின் அணித் தலைவர் சகிப் அல்ஹசன், கை விரலில் காயம் காரணமாக விலகியுள்ளார். இவருக்கு, கடந்த ஜனவரி மாதம் டக்காவில் நடந்த இலங்கைக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான லீக் போட்டியின் போது காயம் ஏற்பட்டது.

இதனால் இவர், அடுத்து நடந்த டெஸ்ட் மற்றும் 'ரி20' தொடரில் பங்கேற்கவில்லை. தற்போது காயம் முழுமையாக குணமடையாத காரணத்தினால், முத்தரப்பு 'ரி20' தொடரில் இருந்து விலக வேண்டியதாயிற்று.

சகிப் அல் ஹசனுக்கு மாற்று வீரராக லிட்டன் தாஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணைத் தலைவர் மகமதுல்லா, அணியை வழிநடத்துவார் என, பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

KING STAR TRAVELS & TOURS

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
*King Star travels & tours*
நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்)
வயதெல்லை 19 -22.
05.03.2018 திங்கட்கிழமை நேர்முகப் பரீட்சை காலை 10.00 மணி முதல் 2.30 மணிவரை நடைபெறும்.
மேலும் Air Ticketing வகுப்புக்களும் நடைபெறும். (இருபாலாரும்)
இரண்டு மாத வகுப்புக்கள் முடிவில் வேலைவாய்ப்புகளும் வழங்கப்படும்.
**076 943 6777, 076 904 6777**
(C-1771) **# 223, Stanley Road, Jaffna.**

**பணியாளர் தேவை**



யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு
உயர்தரத்தில் சித்தியடைந்த கணக்கியல் படித்த
பெண் வேலையாள் தேவை
தொடர்பு:- **சன்சக்தி ரேடர்ஸ் (தனியார் கம்பனி)**
**077 552 7099, 021 221 7994**
email: info@sunsakthy.com/www.sunsakthy.com
SUNSAKTHY TRADERS PRIVATE LIMITED
<<WE WILL DO IT>>
(3112)

**வெற்றிடம்**

முன்னனி கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு..

**COURSE COORDINATOR**
**RECEPTIONIST**
**English Teacher**
Full Time / Part time
Sent cvs within one week through email
**BRITISH COLLEGE**
23, Kachcheri nallur Rd, Jaffna.
Email.: britishcollegekandy@gmail.com

## கண்ணீர் அஞ்சலி




### திருமதி உமாராணி விக்னேஸ்வரன்

எமது சங்க உறுப்பினராகிய வைத்திய கலாநிதி திருமதி **உமாராணி விக்னேஸ்வரன்** அவர்கள் 02.03.2018 வெள்ளிக்கிழமையன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அகில இலங்கை அரச சித்த**
**வைத்திய அதிகாரிகள் சங்கம். கைதடி.**

(3100)

## மரண அறிவித்தல்



### கந்தையா செட்டியார் ஆறுமுகம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் உடையார் லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செட்டியார் ஆறுமுகம் அவர்கள் நேற்று (03.03.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செட்டியார் - வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் கணவரும் பஞ்சாட்சரம், காலஞ்சென்றவர்களான கதிரவேல், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் மற்றும் சண்முகதாஸ் (கனடா) தேவராசா, காலஞ்சென்ற மாலினியின் தந்தையும் தனலட்சுமி (கனடா), மகேந்திரராசா (இளைப்பாறிய அதிபர் - ஒஸ்மானியா கல்லூரி), ரூபினி (ஆசிரியை - யா/காங்கேசன்துறை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாகீசன், சாயினி, சாகீரன், றொசான் (பல்கலைக்கழகம் வவுனியா வளாகம்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி தெற்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

(3111)

**Anchor**

அங்கரின் புதிய அறிமுகமான **அங்கர் றிங்கிங்** (Drinking Yoghurt) யோகட் தற்போது மங்கோ பெசன் (75 ரூபாய்) மற்றும் வனிலா (70 ரூபாய்) சுவைகளில் அறிமுகமாகியுள்ளது. உங்களின் விசேட நிகழ்வுகள் மற்றும் மங்கல நிகழ்வுகளுக்கு தேவைப்படும்போது மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.




**மங்கோ பசன்**
**75 ரூபாய்**

**வனிலா**
**70 ரூபாய்**

தொடர்பு கொள்ள வேண்டிய எமது தொலைபேசி இலக்கம்
**நீரோசன் - 077 735 0490, 021 222 2991**
அங்கர் உற்பத்திகளின் யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

S.V. முருகேசு,
இல, 154, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

(3106)

# FLORENCE NIGHHTINGAALE

School of Nursing

- ✓ தாதியராக தொழில் புரிய ஆசைப்படுகின்றீர்களா?
- ✓ ஒரு வருட தாதியர் பயிற்சிப் பாடநெறி
- ✓ 3மாத தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள் பின் நிரந்தர வேலை வாய்ப்புகள்
- ✓ பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.

அலுவலக கடமை நேரம்:
8.00-4.00 வரை

தகைமைகள்:
- ✓ O/L ஆறு பாடம் சித்தி.
- ✓ வயது 18-35 வரை
- ✓ 10.03.2018 அன்று வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.
- ✓ அதற்கு முன் தங்கள் முற்பதிவுகளை மேற் கொள்ளுங்கள்.




தொடர்புகளுக்கு: 077 718 6438

K.K.S. Road,maruthanarmadam
fnightingale.com

(3095)


## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்மணற் காடு தேவிகும்பநாயகி முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் இன்று காலை சங்காபிஷேகத்துடன் புகழ் பூத்த சர்வபோத சின்னராசாவின் புதல்வர்களின் தவில், நாதஸ்வர கச்சேரியுடன் திருவிழா நடைபெறும். (இ-7)


யாழ்ப்பாணத்தில் ஆண், பெண் இருவருக்குமான

**நிரந்தர வேலைவாய்ப்பு**

- ○ வீட்டு வேலை செய்யக்கூடியவர்கள் (பெண்).
- ○ தோட்ட வேலை தெரிந்தவர்.
- ○ உணவு பரிமாறுபவர்கள்.
- ○ வான், ஓட்டோ சாரதிகள். (40 வயதுக்கு மேற்பட்டோர்)
- ○ இடியப்பம், ஏனைய சமையலறை) வேலை தெரிந்தவர்கள்(பெண்கள்).
- ○ தேநீர் தயாரிப்பாளர்.
- ○ பாதுகாப்பு உத்தியோகத்தர்.

தொடர்புகளுக்கு:
7/4, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
077 791 7753.
075 530 4521.
021 222 2373.

(3094)


# மரண அறிவித்தல்

## திருமதி. சத்தியசீலன் ஆனந்தநாயகி (ஜெயா)



மலர்வு: 1975.07.12
உதிர்வு: 2018.03.02

வரணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தநாயகி சத்தியசீலன் அவர்கள் 02/03/2018 அன்று மாலை கொழும்பில் அன்னாரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் திரு.சத்தியசீலன் (கொள்வனவு முகாமையாளர், ஸ்ரீமுத்துமாரி அம்மன் றேடர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் யசிதா(Good Shephered Girls Maha Vidyalayam) அவர்களின் அன்புத் தாயும் காலம்சென்ற வேலுப்பிள்ளை, வள்ளியம்மா ஆகியோரின் அன்பு மகளும் திரு.திருமதி பரமநாதன் தவயோகா தம்பதியரின் மருமகளும் வேலாநந்தன்-canada, நவாநந்தன் (யாழ்ப்பாணம்), பவாநந்தன்- Swiss, முருகானந்தன் France ஆகியோரின் அன்புச் சகோதரியும் உதயசீலன் France, சந்திரகுமார், பரமேஸ்வரி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் வரணி இல்லத்தில் இடம்பெற்று 04.03.2018 இன்று பிற்பகல் 2 மணியளவில் கொடிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவா றேடிங் கம்பனி,
89, ஆட்டுப்பட்டிதெரு,
கொழும்பு-13.

தகவல்:
ப.சத்தியசீலன் (சீலன்)
தொ.இல: 077 763 4092,
077 722 2536

# பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1939 - 01 - 30

மறைவு
2003 - 02 - 19

## அமரர். கா.சந்திரராசா (S.L.A.S)

(ஓய்வுநிலை பிரதேச செயலர், வலி. மேற்கு, சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, UNHCR நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்)

திதி: திருதியை 04.03.2018

அன்பாலும் பண்பாலும் ஆதரவு மொழியாலும்
உன்னதப் பணிதனை உவப்புடனாற்றியே
உயரிய செயலர் என ஊர்போற்ற வாழ்ந்து
உம் மக்கள் எம்மையும் உயர்வாக வாழ வைத்து- அப்பா
எமை விட்டுச் சடுதியாய் ஏகினீரே இறைவனிடம்
ஈரைந்து ஆண்டுகள் ஆனாலுமுமை மறவோமே
நாமுங்கள் சாந்திக்காய் நாரணனைத் துதிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
பொன்னாலை, சுழிபுரம்.

(இ-7768)

## இராசி பலன்

**மீனம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி கைகூடும்.

**இடபம்:** அருமையான நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வேலைச்சுமை கூடும், போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | | | |
| சூரி | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி | | |
| சனி | குரு.செவ் | | சந் |

**04.03.2018**

மாசி 20, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
திருதியை பின்னிரவு 3.59 மணிவரை
அத்தம் முன்னிரவு 10.49 மணிவரை
சுபநேரம் 9.26-10.56 மணிவரை
இராகுகாலம் 4.56-6.26 மணிவரை

வளவன்

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டி நாள், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, உறவினர்களின் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கன்னி:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

# சிரியா படுகொலையை நிறுத்தக்கோரி முள்ளிவாய்க்காலில் நேற்று கண்டனப் போராட்டம்





வடக்கு மாகாண இளைஞர்களின் ஏற்பாட்டில் சிரியாவில் இடம்பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப் படுகொலையை கண்டித்து வலிசுமந்த மண்ணான முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதியுத்தத்தில் மாபெரும் அழிவுகளை சந்தித்த முள்ளிவாய்க்காலில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

சிரியாவில் இடம்பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப்படுகொலையை கண்டிக்கும் வகையில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிரியாவில் குழந்தைகள் முதல் அனைவரும் படுகொலை செய்யப்பட்ட மற்றும் அவர்களின் துன்ப துயரங்களை எடுத்துக் காட்டுகின்ற புகைப் படங்களை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். குறித்த போராட்டத்தில் இளைஞர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். போராட்டத்தின் முடிவில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

சிரியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரை உடனடியாக நிறுத்தி, போரினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்க ஐ.நா. தலையிட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைனுக்கு முகவரியிடப்பட்டு, கொழும்பிலுள்ள ஐ.நா மனிதவுரிமை ஆலோசகர் அலுவலகத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்ட மகஜரிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது. அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு,

உள்நாட்டுப் போர் ஒன்றினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற வகையில், அதன் வலிகளையும், வேதனைகளையும் பட்டுணர்ந்தவர்களாகிய நாங்கள் நேற்று, 03.03.2018 அன்று, முல்லைத்தீவு மாவட்டம், முள்ளிவாய்க்காலில் நடத்திய அடையாள கவனயீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் பின்வரும் விடயங்களைத் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டுவருகிறோம்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை உலகின் மிக மோசமான இனப்படுகொலை எமது மண்ணில் - இதே இடத்தில் நடந்தேறியது. போரில் நேரடியாகப் பங்கெடுத்தவர்கள் - பங்கெடுக்காதோர் என்ற பேதம் எதுவுமின்றி சர்வதேச யுத்தவியல் சாசனங்களுக்கு முரணாக, ஆண்கள் - பெண்கள் - அப்பாவிக் குழந்தைகள் என பல இலட்சக் கணக்கான பொதுமக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டிருந்தனர்.

போரின் போது காயமடைந்தவர்கள் உடல்களில் வடுவேந்தி நிற்க, அந்தக் கொடிய கணங்களின் சாட்சிகளாக இன்றும் மனங்களில் மாறாத வடுவோடு நடைபிணங்களாக எம்மில் பலர் வாழ்ந்து வருகின்றோம். கொடிய போரும் - அதன் பின்னரான தாக்கங்களும் எவ்வளவு பாரதூரமானவை என்பதை நாம் அறிவோம்.

எங்கள் துயரத்தை ஒத்ததாகவே, இப்போது சிரியாவிலும் மாபெரும் மனிதப் படுகொலைகள் அரங்கேறிக் கொண்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். குறிப்பாக பச்சிளங்குழந்தைகள் போரில் கொல்லப்படுவதையும், காயங்களுக்கு உட்படுத்தப்படுவதையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உடனடியாகப் போர் நிறுத்தமொன்றினை ஏற்படுத்தி, போர் இடம்பெறும் பகுதிகளினுள் சிக்குண்டுள்ள அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கும், அகதிகளாக - நிர்க்கதியாக்கப்பட்டுள்ள மக்களுக்கான மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை ஆவன செய்யுமாறும், சர்வதேச குற்றங்கள் சம்பந்தமாக உறுப்பு நாடுகள் உலகளாவிய நியாயாதிக்கத்தையும் உபயோகிக்க வேண்டும் என்றும் தங்களை வேண்டி நிற்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281-9)




## 12 மணித்தியாலங்களில் வெவ்வேறு இரு குற்றச்சம்பவங்களில் தடயப்பொருட்களுடன் நான்கு பேர் கைது



(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 12. மணி நேரத்தில் இரண்டு வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது தடயப் பொருட்களுடன் நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ண தெரிவித்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியில் இருந்து நேற்று சனிக்கிழமை அதிகாலை மூன்று மணி வரையான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வனாந்தரக் காட்டுப் பகுதிகளில் நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட அதிரடிப் படையினர் விசேட உளவுப் பணியில் ஈடுபட்டிருந்த போது தருமபுரம் கல்லாறுக் காட்டுப் பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த ஒரு உழவு இயந்திரத்தையும் மற்றும் ஒரு டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தருமபுரம் குடியிருப்பினுள் புகுந்த இரண்டு திருடர்கள் வெவ்வேறு வீடுகளில் மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக வளர்ந்து வந்த 9 கோழிகளைத் திருடிக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட போது விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த தருமபுரம் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு இரண்டு குற்றச் சம்பவங்களின் போதும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்களை தடயப் பொருட்களுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

## தற்கொலைகள் அதிகரிப்பதைத் தடுக்க நேற்று வவுனியாவில் துண்டுப்பிரசுரம் விநியோகம்



(குருமன்காடு)

வவுனியாவில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் தற்கொலைகளை கருத்தில் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

"கை கொடுக்கும் நண்பர்கள்" எனும் அமைப்பு வவுனியா பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததுடன் நகரப் பகுதியிலும் விநியோகித்திருந்தனர்.

மனதில் கவலை, வெறுப்பு, வாழ்வில் துயரம் போன்றன இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் உங்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உறுதுணையாக கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பு இருக்கும் என்று துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளதுடன் இலவசமாக சேவைகளை வழங்குவதாகவும் தயக்கம் இன்றி எம்மை தொடர்பு கொள்ளுமாறும் இரகசியங்கள் பாதுகாக்கப்படும் என்றும் அத்துண்டு பிரசுரத்தில்கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் கடந்த வாரம் 5 பேர் தற்கொலை செய்துள்ள நிலையில் இவ்வாறு துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன அழுத்தம் காரணமாக தற்கொலை முடிவு எடுப்பவர்களை காப்பாற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவ் அமைப்பானது மன அழுத்தத்தில் உள்ளவர்கள் தனிமையில் பிழையான முடிவுகளை எடுக்காமலிருப்பதற்காக 024-324 44 44 என்கிற தொலைபேசி இலக்கத்தையும் அறிமுகம் செய்துள்ளது. (2-250-281)

# யோசிதவின் பாட்டி டேசி ஆச்சி வெளிநாடு செல்ல தற்காலிக அனுமதி

(கொழும்பு)

யோசித ராஜபக்‌ஷவின் பாட்டியான டேசி ஆச்சி என்றழைக்கப்படும் டேசி பொரஸ்ட் விக்கிரமசிங்க வெளிநாடு செல்ல நீதிமன்றம் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவின் இரண்டாம் புதல்வரான கடற்படை அதிகாரி யோசித ராஜபக்‌ஷ, கல்கிசையில் சர்ச்சைக்குரிய காணி கொள்வனவுக் குற்றச்சாட்டொன்றை எதிர் கொண்டுள்ளார்.

சுமார் 34 மில்லியன் ரூபா பெறுமதியான காணியொன்றை இவருக்கு 24 மில்லியன் ரூபாவுக்கு டேசி பொரஸ்ட் விக்கிரமசிங்க விற்பனை செய்திருந்தார்.

இந்தக் கொடுக்கல்-வாங்கலில் முறைகேடு நடந்திருப்பதாக தெரிவித்து ஆட்சி மாற்றத்தின் பின்னர் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக யோசித மற்றும் டேசி இருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், டேசி விக்கிரமசிங்க வெளிநாடு சென்று வருவதற்கு தற்காலிக அனுமதி கோரி விண்ணப்பித்த மனுவை கல்கிசை நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தது.

இதன்போது மார்ச் 3ஆம் திகதி தொடக்கம் மார்ச் 24ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அவருக்கு வெளிநாடு சென்று வருவதற்கான அனுமதி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)


## மணமகள் தேவை

பிறப்பு-1983, நட்சத்திரம்-அச்சுவினி, கி.பா-74 3/4, இடம்-யாழ்ப்பாணம், தொழில்-சொந்த தொழில் (வெல்டிங்), உயரம்-5"-6" (3092)

தொடர்பு: 0779309738



25வது குருத்துவ வெள்ளி விழா காணும்

"மந்திர கிரியா சுரபி" "வைதீக ஞான திலகம்"

## சிவஸ்ரீ குமார.சரவணபவக்குருக்கள் J.P

அவர்களுக்கு

எமது ஆலயத்தின் சார்பாக வாழ்த்துவதுடன்

அவர் பணி மேன்மேலும் சிறக்க ஆஞ்சநேய பெருமானை வணங்குகின்றோம்.



சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்

ஆதீனகர்த்தா, அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில், மருதனார்மடம்.

(769)



ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

"மந்திர கிரியா சுரபி", "வைதீக ஞான திலகம்"

## சிவஸ்ரீ குமார. சரவணபவக்குருக்கள் JP

(இணுவில் பவாக்குருக்கள்) அவர்களின்

## குருத்துவ வெள்ளிவிழா



நாள்:- 04.03.2018 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- பிற்பகல் 3.30 மணி

இடம்:- இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபம்

- சிறப்புப் பாராட்டு விழா
- சிறப்பு நூல் வெளியீடு
- சமூக நிறுவனங்கள் சிலவற்றுக்கான நன்கொடை நிதி வழங்கல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு:- மேற்படி வெள்ளிவிழாவை முன்னிட்டு இரத்ததான முகாம் நேற்று 03.03.2018 சனிக்கிழமையன்று இணுவில் சிவகாமி அம்மன் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வண்ணம்,
வெள்ளி விழாக்குழு.

(3081)



உ

ஸ்ரீ ராம ஜெயம்

இணுவில் திருப்பதி

## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய

## இலட்சார்ச்சனை விழா-2018

### 05-03-2018-14-03-2018 வரை

**கோவிந்தன் அடியார்களே!**

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோவில் கொண்டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நிகழும் ஏவிளம்பி வருடம் மாசித் திங்கள் 21ஆம் நாள் (05-03-2018) தொடக்கம் மாசித் திங்கள் 30ஆம் நாள் (14.03.2018) வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தியான எம்பெருமானுக்கு பத்து அந்தண ஆச்சாரியார்கள் ஒன்றுகூடி எம் பெருமானுக்கு இக் கைங்கரியம் நடைபெறவுள்ளதால் அடியார்கள் யாவரும் இவ்வாலயத்திற்கு வந்து இந்த அர்ச்சனையிலும் தினமும் நடைபெறும் மகாயாகத்திலும் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.

**01ம் நாள் (05.03.2018)** மஹா சுதர்சன சக்கர ஹோமம் - வீரம் பெறவும் மற்றும் சகல வித தடை விலகவும்

**02ம் நாள் (06.03.2018)** கயக்கிரீவ ஹோமம்/ மேதாசூக்த ஹோமம்-சிறந்த கல்வியைப்பெற

**03ம் நாள் (07.03.2018)** தன்வந்திரி ஹோமம்/ ஆயுஷ்ய ஹோமம்-நோய் நொடி நீங்க

**04ம் நாள் (08.03.2018)** இலக்ஷ்மி நரசிம்ம ஹோமம்-தீய சக்திகளில் இருந்து விலகி இலக்ஷ்மி கடாட்சம் பெற

**05ம் நாள் (09.03.2018)** சந்தான கோபால ஹோமம் - பிள்ளைப் பாக்கியம் பெறுவதற்கு

**06ம் நாள் (10.03.2018)** இலட்சுமி ஹோமம்/ தன ஆகர்ஷண லக்சுமி ஹோமம்-ஸ்ரீ சூக்த ஹோமம்-செல்வம் பெறுவதற்கு

**07ம் நாள் (11.03.2018)** நாராயண சூக்த ஹோமம்/புருஷ சூக்த ஹோமம்-சர்வசித்தி

**08ம் நாள் (12.03.2018)** சம்பரண சூக்த ஹோமம் - நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க

**09ம் நாள்(13.03.2018)** விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம்-சர்வ சித்தி

**10ம் நாள் (14.03.2018)** பகவத் கீதா ஹோமம் -சர்வசித்தி பெறல், மகா பூர்ணாகுதி, தாரா ஹோமம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஹோமங்கள் இக் காலத்தில் நடைபெறவிருப்பதால் அடியவர்கள் தங்களுக்கான பரிஹார ஹோமத்தைத் தேர்வு செய்து முற்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு:** விஷேட ஹோமங்கள் நடைபெறுவதால் அடியார்கள் தங்களின் வேண்டுதலுக்கேற்ப ஹோமத் திரவியங்களை ஆலயத்திற்கு சமர்ப்பிக்க முடியும். தொடர்புக்கு ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

(3069)

தொலைபேசி இல: 021 224 2300 ஆலய தர்மகர்த்தா ச.கனேசலிங்கம்



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 RC<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: மின் பொறியியலாளர்(அரச)<br>தொ.இ: B/7565 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6718 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/7571 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 26 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: AAT, B.COM<br>தொ.இ: G/6735 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/7572 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6738 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7574 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ:• G/6747 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# அம்பாறை தாக்குதல் சந்தேகநபர்கள் விடுவிப்பு சம்பந்தப்பட்ட பொலிஸாரின் மீது நடவடிக்கை

## பிரதமர் உறுதி



(கொழும்பு)

அம்பாறையில் பள்ளிவாசல் மீதும், முஸ்லிம்களின் சொத்துக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களோடு தொடர்புபட்ட சந்தேகநபர்களுக்கு பொலிஸார் பிணை வழங்க உடந்தையாக இருந்தமை மற்றும் அவர்களின் பாரபட்ச நடவடிக்கைகள் குறித்தும் விசாரணை மேற்கொண்டு, அம்பாறை பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் உறுதியளித்தார்.

இது குறித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில், பொலிஸார் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த அமைச்சர்களான றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், கபீர் ஹாஷிம் ஆகியோர் அம்பாறை சம்பவம் தொடர்பில் கடுந்தொனியில் சுட்டிக்காட்டிய போது பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது பொலிஸ்மா அதிபரும் உடனிருந்தார்.

சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸார், சட்டத்திலே வேண்டுமென்றே ஓட்டைகளை ஏற்படுத்தி குற்றவாளிகளைத் தப்பிக்கச் செய்துள்ளதாக சுட்டிக்காட்டிய முஸ்லிம் அமைச்சர்கள், இந்த நிலை நீடித்தால் சட்டம் மற்றும் ஒழுங்கு கேலிக்கூத்தாகி விடும் என்று பிரதமரிடம் தெரிவித்தனர்.

"திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த சதிகார செயல்களுக்கு அம்பாறை பொலிஸார் பக்கபலமாக இருந்தது மாத்திரமன்றி, முஸ்லிம்களை பாரபட்சமாகவும் நடத்தியுள்ளனர்.

பொலிஸார் மீது இப்போது சிறுபான்மைச் சமூகம் நம்பிக்கை இழந்து வருகின்றது. இது நல்லாட்சிக்கு நல்லதல்ல" என அமைச்சர் றிசாத்பதியுதீன் இதன்போது பிரதமரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தாம் அம்பாறைக்கு விஜயம் செய்து, சேதமடைந்த பள்ளிவாசல் மற்றும் கடைத்தொகுதிகளை பார்வையிட்ட போது, பொலிஸாரின் பாரபட்சத்தை அறிந்து கொண்டதாகவும் அமைச்சர் றிசாத் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் பூரணமான விசாரணை நடத்தி, பொலிஸார் மற்றும் நாசகாரச் செயலில் ஈடுபட்டோர், இதன் பின்னணியில் இயங்கியோர் அனைவர் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால் சட்டத்தின் மீதும், நீதியின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து விடுவர் என அமைச்சர்கள் மூவரும் வலியுறுத்தியிருந்தனர். (7-10)

# மகிந்த- மைத்திரி இரகசிய சந்திப்பு





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரது இல்லத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்த இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் இது வரை தகவல் வெளியாகவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றை பின்தள்ளி முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பல சபைகளைக் கைப்பற்றி சாதனை படைத்தது.

இந்த அரசியல் அதிர்வலையை தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியை நீக்கி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் பதவியிலிருந்து விலக்கிவிட்டு, மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து சுதந்திரக் கட்சியின் ஆட்சியை அமைக்கும்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வந்தது.

இது தொடர்பிலான பல சுற்றுப் பேச்சுக்களும் நடத்தப்பட்ட போதிலும் இறுதியில் தோல்வியிலேயே முடிவடைந்தது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சந்திப்பில் ஒன்றிணைந்த எதிரணியிலுள்ள இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (7-10)

# ஜனாதிபதியும் பிரதமரும் 10வீத வாக்குறுதிகளை நிறைவேற்றினால் நிலைமை சீராகும் - ஜே.வி.பி.

(கொழும்பு)

ஜனாதிபதியும் பிரதமரும் கடந்த 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் 10 வீதத்தையாவது எஞ்சிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த முற்படுவார்களாயின் நாடு முகம் கொடுத்துள்ள ஸ்திரமற்ற நிலை ஓரளவுக்கு நீங்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி காரணமாகவே நாட்டில் ஸ்திரமற்ற ஒரு அரசியல் நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளை மிகச் சரியாக புரிந்து



கொண்டு இருவரும் சேவையாற்ற முன்வர வேண்டும்.

தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பெற்ற வெற்றி என்பது அவர்கள் தவறு செய்தவர்கள் அல்ல என்பது கருத்தல்ல. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கு அளித்த வாக்குகள் ஊழலுக்கு எதிரானவை. இவற்றை எடுத்துக் கொண்டு ஊழலுடன் தொடர்புபட்ட இரு கட்சிகளுடனும் கூட்டுச் சேர ஜே.வி.பி. ஒருபோதும் உடன்படுவதில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

# 5500 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

ஒரே பாடசாலையில் 10 வருடங்கள் சேவையாற்றிக் கொண்டிருக்கும் 5500 ஆசிரியர்களுக்கு மார்ச் மாதம் நடுவில் இடமாற்றம் வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 2017 ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை ஒரே பாடசாலையில் 10 வருடங்களை அடைந்துள்ள ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்துக்கு கருத்தில் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் இரு கட்டங்களில் முறையான கட்டமைப்பின் கீழ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இம்மாத நடுவில் முன்னெடுக்கப்படும் இடமாற்றம் 3 ஆவது கட்டமாகும் என்வும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (7-10)

# பெண்களை பெயரிடத் தவறும் அரசியல் கட்சிகளின் பெயர்கள் வர்த்தமானியில் வெளிவராது!

## மகிந்த தேசப்பிரிய தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

குறிப்பிடப்பட்ட பெண்களின் பிரதிநிதித்துவத்தை பெயரிடாத அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கு 25 சதவீத பெண்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளூராட்சி சபைகளில் நியமிப்பது கட்டாயமானதாகும்.

இந்த நிலையில், அரசியல் கட்சியோ அல்லது சுயாதீன குழுவோ, கட்டாயமாக்கப்பட்டுள்ள பெண்களின் பிரதிநிதித்துவத்தை நியமிக்காவிட்டால், அவற்றின் பெயர்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

ஏதாவது ஒரு கட்சியினாலோ அல்லது சுயாதீன குழுவினாலோ ஆறு பேரின் பெயர் அனுப்பப்படும் போது, நான்கு பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட வேண்டும். எனினும், இதன்போது, குறித்த தரப்பினரால், 3 பெண்கள் மற்றும் 3 ஆண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், 3 பெண்களின் பெயரையும், ஆண்களின் மூன்று பேரில் பட்டியலில் முதலில் உள்ள இருவரின் பெயர்கள் மாத்திரமே வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

ஒருவரின் பெயர் வெற்றிடமாக வைக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்து அரசியல் கட்சிகளுக்கு பாரிய பொறுப்பு உள்ளதாக உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் பெயரிடப்படவேண்டிய எண்ணிக்கையை பெயரிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய முறைமையின் காரணமாகவே சில பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், அவற்றைத் தீர்க்க சில காலம் எடுக்கும் என்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 62 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 55 | 70 | 80 | 60 |
| தக்காளி | 30 | 20 | 25 | 40 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 50 | 60 | 80 | 70 |
| கரட் | 80 | 100 | 95 | 90 | 160 | 70 |
| பூசணி | 60 | 40 | 40 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 60 | 35 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 130 | 100 | 90 | 130 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 90 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | — | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 100 | 100 | 90 |
| லீக்ஸ் | 140 | 180 | 135 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 40 | 30 | 30 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 70 | 1100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 500 | 800 | 600 |
| போஞ்சி | 100 | 160 | 80 | 90 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 50 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 30 | 50 | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 40-90 | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 140 | 130 | 160 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 70 | 120 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 80 | 30 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 40 | — | 80 | 80 | 80 |

# அம்பாறையில் பள்ளிவாசல் மீது தாக்குதல்; அரசாங்கத்திற்கு பதிலடி கொடுப்போம்

## விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் ஹரீஸ் எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு விரைவில் அதிர்ச்சி வைத்தியம் காத்திருப்பதாக விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பிணையில் விடுதலை செய்து, நல்லாட்சி அரசாங்கம் முஸ்லிம்களுக்கு கொடுமை செய்துவிட்டதாக தெரிவித்த பிரதியமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ், மிகவிரைவில் அரசாங்கத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்படுமெனவும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், அம்பாறையில் அதிகாரமிக்க சிங்கள அரசியல்வாதிகளின் ஆதரவுடன், பொலிஸாரின் நெறிப்படுத்தலின் கீழ், அம்பாறை பள்ளிவாசலைத் தாக்கிய பௌத்த சிங்கள இனவாதிகள் இருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நல்லாட்சியை நம்பிய, முஸ்லிம்களுக்கு வழாங்கப்பட்ட தண்டனையாகவே இதனை நோக்குகிறேன்.

அம்பாறை மாவட்ட தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம்கள் பொறுமையாகவும், நிதானமாகவும் காணப்பட்டனர்.

எனினும் ஒரு சிறிய இனவாத கூட்டத்தை திருப்திப்படுத்துவதற்காக முஸ்லிம்களுக்கு கொடுமைசெய்து, பள்ளிவாசல் தாக்குதலுடன் தொடர்புடையவர்களை அரசாங்கம் மறைகரமாக நின்று விடுதலை செய்துள்ளது.

முஸ்லிம்களை அரசாங்கம் ஏமாற்றியுள்ளது. மிகவிரைவில் அரசாங்கம் இதன் பயனை நுகரும். நாம் அரசாங்கத்திற்கு நிச்சயம் அதிர்ச்சி வைத்தியம் கொடுப்போம்.

எனது மாவுட்ட முஸ்லிம் இளைஞர்கள் கொதித்துப் போயுள்ளனர். அவர்களை நானும், பள்ளிவாசல் நிர்வாகங்களும் பொறுமைப்படுத்தி வைத்திருக்கிறோம்.

ஆயுதங்களின் முன்னால் கூட அஞ்சாத நானும், எனது மாவட்ட மக்களும் பௌத்த இனவாத குழுக்களுக்கு அஞ்சப் போவதில்லை.

இன்றைய நவீன உலகில் சி.சி.டி.வி. கமரா துணையுடன் பள்ளிவாசலை தாக்கியவர்களை மிக இலகுவில் கைது செய்திருக்கலாம். கைது செய்தவர்களை சிறையில் அடைத்திருக்கலாம். எனினும் அவர்களை சிறை வைக்காது சுதந்திரப் பறவைகளாக பறக்கவிட்டுள்ளனர்.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தை பௌத்த சிங்கள இனவாதிகளே வழிநடத்துகின்றனர்.

அதனால்தான் முஸ்லிம் விவகாரங்கள் பின்னுக்கு தள்ளப்படுகின்றன. எனது கட்சியின் ஏனைய எம்.பி.க்களுடன் பேசி அடுத்தகட்ட நடவடிக்கையை விரைவில் அறிவிப்போம்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் முஸ்லிம்கள் என்னுடன் தொடர்பு கொண்டனர். அவர்களின் ஆவேசத்தில் நியாயமுள்ளது.

அதனை தான் புரிந்து கொள்வதாகவும் பிரதியமைச்சர் ஹரீஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2002ம் ஆண்டு ரணிலின் ஆட்சியின் போது வாழைச்சேனையில் இரண்டு முஸ்லிம் இளைஞர்களின் சடலம் எரிக்கப்பட்ட விவகாரத்திலும் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இதுபோன்ற எச்சரிக்கையொன்றை அரசாங்கத்துக்கு விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7-10)

# தனிப்பட்ட தேவைகளுக்காக பிரதமரை பதவிவிலக்க முடியாது விஜேபால தெரிவிப்பு



(கொழும்பு)

எவரினதும் தனிப்பட்ட தேவைக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக சில தரப்பினர் செய்து வரும் பிரசாரங்களால் எவ்வித பயனும் கிடையாது.

19ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் எவரினதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு அமைய பிரதமரை பணி நீக்கிவிட முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அரசாங்கத்தில் விரிவான ஓர் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# சிரியா மனித குலத்திற்கெதிரான போரை நிறுத்த நல்லாட்சி அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும்

## பிரதியமைச்சர் அமீர் அலி வேண்டுகோள்



(கொழும்பு)

சிரியாவில் குழந்தைகள் முதல் மனித குலத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் யுத்தத்தினை நிறுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டுமென கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் அமீர் அலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித குலத்திற்கு எதிராக சிரியாவில் இடம்பெற்று வரும் சம்பவம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

சிரியாவில் முன்னெடுக்கப்படும் அரச படையெடுப்பினால் தினமும் பல குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் இறக்கும் நிலையேற்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதியில் மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் மௌனமாக இருக்காமல் சிரியாவின் குழந்தைகள் மற்றும் பொது மக்கள் கொல்லப்படுவதனை நிறுத்தி அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனித குலத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் யுத்தத்தினை நிறுத்துவதற்கு அனைவரும் குரல்கொடுக்க முன்வர வேண்டுவதுடன், இந்த நல்லாட்சி அரசாங்கம் இதில் கூடிய கவனம் செலுத்தி இதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சிரியாவில் நடைபெறும் மனிதகுல படுகொலைக்கு நீதி வேண்டி அனைத்து மக்களும் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், மற்றையவர்களின் நலனுக்காகவும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு தங்களை அன்பாக வேண்டிக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக உறுப்பினர்கள் சுயாதீன எண்ணத்தை கொண்டவர்கள் அல்லர்

## விஜேதாஸ ராஜபக்ஷ குற்றச்சாட்டு



(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களுக்காக செயற்படுபவர்களே காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மற்றும் ஐரோப்பாவின் யோசனைக்கு அமைய, புலம்பெயர் தமிழர்களின் தேவைகளை நிறைவேற்றும் நடவடிக்கையே முன்னெடுக்கப்படுகிறது.

காணாமற்போனோர் தொடர்பான அலுவலக சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும், குறித்த அலுவலகத்துக்காக சுயாதீன எண்ணம் கொண்டவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தாம் எதிர்பார்த்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், குறித்த அலுவலகத்துக்காக நியமிக்கப்பட்ட ஆணையாளர்களுள் பெரும்பாலானோர், புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புடையவர்களாவர்.

இலங்கைக்கு எதிராக உலகம் முழுவதும் கருத்து தெரிவித்தவர்களும், சிங்கள, பௌத்த மக்களுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களுமே இந்த அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும். அந்த ஆணையாளர்கள் சுயாதீன எண்ணத்தை கொண்டவர்கள் அல்ல. சுயாதீன எண்ணம் கொண்டவர்களை நியமிக்க வேண்டும்.

இந்த நிலையில், நல்லிணக்கம் என்ற பெயரில் சிங்கள, பௌத்த சமூகத்தை அழிக்க இடமளிக்கப்போவதில்லை என விஜேதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# அம்பாறை கலவர சூத்திரதாரிகளை சந்திக்க ஜனாதிபதி மைத்திரி மறுப்பு

(கொழும்பு)

அம்பாறையில் மேற்கொண்ட தாக்குதலின் பின்னணியில் இருப்பதாக நம்பப்படும் "திஹே கல்லிய" இனவாத அமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திந்து பேச மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. குறித்த பேரினவாத அமைப்புக்கு பக்கபலமாக பொதுபல சேனா அமைப்பு இருந்து வருவதாக தெரியவருகிறது.

அம்பாறையில் கைது செய்யப்பட்ட "திஹே கல்லிய" அமைப்பைச் சேர்ந்தவர்களை விடுவிக்கும் நோக்கிலும், மேலும் கைதுசெய்யப்படவிருப்பவர்களை தடுக்கும் நோக்கிலும் ஜனாதிபதியின் அம்பாறை ஒருங்கிணைப்பாளர்களில்ஒருவரும், மொட்டு அணி உறுப்பினர் ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரும் நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்திக்க பொலநறுவைக்கு சென்றுள்ளனர்.

ஜனாதிபதி பொலநறுவை சென்றதை அறிந்த குழுவினர், நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை அவரை சந்திப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும், ஜனாதிபதியின் வாயிற்கதவு திறக்கப்படவில்லை. இதனால் ஏமாற்றம்டைந்த நிலையில் குறித்த குழுவினர் திரும்பி சென்றுள்ளனர்.

இதேவேளை, பொதுபல சேனாவின் முக்கியஸ்தர்கள் பலரும் தற்போது அம்பாறை மாவட்டத்தில் மையம் கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மாயக்கல்லி மலை சிலை வைப்பு விவகாரத்தில் குறித்த "திஹே கல்லிய" பேரினவாத அமைப்பு பின்னணியில் இருந்து செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறமையும் குறிப்பிடத்தக்கது. (7-10)

# குருத்துவ வெள்ளிவிழா காணும் சிவஸ்ரீ குமார.சரவணபவக்குருக்கள்



வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிதுசால உயர் சிவஞானத்தாலே போழிள மதியினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே என சிவஞான சித்தியார் எமக்குணர்த்தும் உண்மைக்கு ஏற்ப முற்பிறவியிலேயே செய்த புண்ணியத்துக்கு ஏற்ப ஆதி சிதம்பர திருஉத்தர கோசமங்கை பூஜா கைங்கர்ய சிவாச்சார்ய வம்சத்தில் வந்துதித்த அந்தண மரபில் நலன்புரியாளராக திகழ்பவர் குமார. சரவணபவக் குருக்கள் அவர்கள். குருக்களின் குருத்துவ வெள்ளி விழா என்பது இறை ஆற்றுப்படுத்தலின் அருள் விழா.

இப்பெருவிழாவில் குருக்களை வாழ்த்தி வணங்குவதில் பெருமை கொள்கின்றோம். எமது சிறுவயதிலிருந்தே அந்தண குலத்தின் அருமை பெருமைகளை அறிவாலும் அனுபவத்தாலும் பெறும் வாய்ப்புக்கிடைத்தது என்பது இறையருள் என எண்ணி வியக்கிறோம். தந்தையார் சிவஸ்ரீ சா.குமாரசுவாமிக் குருக்களுக்கு (சர்மாசேர்) ஏற்ற தனயனாய் தன்னைத்தானே புடம் போட்டு ஆரம்பகல்வி முதல் ஆச்சார்ய அபிஷேகம் என பரிணமித்து குருத்துவப்பணியை ஆரம்பித்தவர் குமார.சரவணபவக் குருக்கள் அவர்கள்.

தனது பதினொருவயதில் உபநயனம் பெற்றது முதலாக இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தாணு. மகாதேவக் குருக்கள் அவர்களது குருகுலத்தில் வேத ஆகமக் கல்விகளை ஆரம்பித்து பின்னாளில் இன்னும் மேலதிகமாக ஆறு வருடங்கள் வைதிக மந்திரக்கிரியா பாவனைகளும் கற்று முதன்மை மாணாக்கராக திகழ்பவர்.

அந்த வித்யா குருவினாலேயே 1993.02.18 அன்று இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் வைத்து ஆச்சார்ய அபிஷேகம் செய்விக்கப்பட்டு குருத்துவப்பணி ஆரம்பித்தது முதல் பல ஆலயங்களில் நித்திய நைமித்திய கிரியைகளை ஆற்றி வருவதுடன் இருநூறுக்கும் மேற்பட்ட கும்பாபிஷேகங்களில் சாதகாச்சார்யராக, ஆச்சார்யராக என பல வகைகளில் பங்கெடுத்தும் பல மஹோற்சவங்கள் மற்றும் இலட்சார்ச்சனைப் பெருவிழாக்கள் என்பவற்றுடன் வைதிக திருமணங்கள், உபநயனங்கள், அந்தணர்க்குரிய பல சம்ஸ்காரங்களை ஆற்றுப்படுத்தும் திறமை வாய்ந்தவராக காணப்படுவது அவரின் தனிச்சிறப்பாகும்.

எல்லோரையும் அன்பு பாராட்டி அரவணைத்து ஆற்றுப்படுத்தும் ஆளுமை கொண்டதன் தன்மையால் எல்லோரும் பவக்குருக்கள் என உரிமை பாராட்டும் நேசத்துக்குரியவராய் திகழ்பவர்கள் நமது குருக்கள் ஐயா அவர்கள்.

அவரது ஆன்மீகப்பணிகள் இலங்கையையும் தாண்டி இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா,ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், அவுஸ்திரேலியா என கடல் கடந்த நாடுகளையும் சென்றடைந்தமை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

இவைகளைக் கடந்தும் இவரது குருத்துவ வெள்ளி விழா மேலும் சிறப்புறக் காரணம் குருக்கள் ஐயா அவர்கள் தமது பணிகளை ஆன்மீகத்துடன் மட்டுமன்றி சமூக சேவைப்பணிகளிலும் தன்னை கணனி வரை கலைப் பணி செய்தல், தொகுத்தல் என பலவகைகளில் நூல் வெளியீடுகளுக்கு முக்கிய காரணமாய் அமைந்ததுடன் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் அறியப்பட்டவர்.

சிறுகதைத்தொகுதியும் வெளியிட்டு அதில் தனது சமூகப்பார்வைகளைப் பதிவு செய்தவர். சமயத்துறை, சமூகசேவை, குடும்பநலம் என்பவற்றிலும் அன்புநிறை மனைவி மற்றும் பண்புடைப் பிள்ளைகள் என நிறைவான வாழ்வின் முன்னோடியாக இவரை நாம் காணலாம். காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம் எனும் வள்ளுவ வாக்குப் போல சாந்தம் தவழும் முகம், நெற்றிநிறை விபூதி, திலகம், உடல்நிறை ருத்திராட்சம் கடும் சொல்லறியா நாக்கு கிரியைகளிலே தூய்மை நிதானம் அடியவர்களை அணுகும் பாங்கு, விருந்தினர்களைப்பேணும் தன்மை, சுறுசுறுப்பு, நன்னடத்தை என செந்தண்மை பூண்டவராய் எங்கள் பவக்குருக்கள் மக்கள் நேசிப்பிற்குரியவராய் திகழ்ந்து ஏனைய இளம் சிவாச்சாரியார்களுக்கு வழிகாட்டுவது இன்னும் சிறப்பிற்குரியதாகும்.

அந்தணமை பூண்ட அருமறை அந்தத்துச் சிந்தை செய் அந்தணர் சேரும் செழும் புவி நந்துதல் இல்லை நரபதி நன்றாகும் அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே எனும்படி திருமூலர் அருளியது போல ஆன்மீகப்பணியின் தனித்துவமாம் தன்மை பெற்று இறையருளை அனைவர்க்குமாய் பிரார்த்திக்கும் குருவாக திகழ்வது மண்ணுக்கும் மக்களுக்கும் செய்யும் மாபெரும் தொண்டாகும்.

இவ்வகையில் குமார. சரவணபவக் குருக்களது குருத்துவ வெள்ளி விழா நிகழ்வை முன்னிட்டு இரத்த தான முகாமும், விழாவிலே சமய விழுமிய நூல் வெளியீடுகளும், சமூக நிறுவனங்களுக்கான நிதிக் கொடைகளும் வழங்குவது கூட ஒரு முன்மாதிரியான செயற்பாடு என்றால் மிகையில்லை.

அந்த வகையில் குருத்துவ வெள்ளி விழாக்காணும் குருக்கள் அவர்களது பணிகள் மென்மேலும் சிறந்து விளங்கவும் அவரது குடும்பத்தினரும் சகல இன்பம் பெற்று வாழவும் குறிப்பாக அவரது சமய, சமூகப் பணிகள் இன்னும் விரிவடையவும் எல்லாம் வல்ல பரம் பொருளை அனைத்து அடியவர்கள் சார்பிலும் வேண்டிப்பணிகிறேன்.

சைவப்புலவர். சண்முகலிங்கம் முகுந்தன்
ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி.

# கைது செய்யப்பட்ட விவசாயிகளை விடுவிக்க வேண்டும்

## எஸ்.எம்.சந்திரசேன வலியுறுத்தல்

(கொழும்பு)

தடுத்துவைக்கப்பட்டுள்ளதைமையில் கைது செய்யப்பட்ட விவசாயிகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் மீதான தாக்குதலுக்கு தற்போதைய அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் அருகே ஆரம்பிக்கப்படவுள்ள நீர்வழங்கல் திட்டத்தை மீளாய்வு செய்ய எதிர்பார்ப்பதாக அநுராதபுர மாவட்ட செயலாளர் ஆர்.எம். வன்னிநாயக தெரிவித்துள்ளார். (7-10)



# பொலிஸார் மீது தாக்குதல் 6 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

ஆனமடுவ பிரதேசத்தில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சந்தேகநபர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் மதுபான உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நபர்களை பிடிப்பதற்காக சென்றிருந்த பொலிஸார் மீது நேற்று முன்தினம் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சம்பவத்தில் புத்தளம் பிரதேச ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூன்று பேர் காயமடைந்திருந்தனர்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின் மேலதிக சிகிச்சைகளுக்காக புத்தளம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

## 12 பேர் படுகாயம்



(கொழும்பு)

எஹெலியகொட பிரதேசத்தில் இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

எஹெலியகொட தொரணகொட பிரதேசத்தின் இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எம்பிலிபிட்டியவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்துகள் இரண்டே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பில் எஹெலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-10)

# பலாக்காய் விவகாரம் முதியவர் படுகொலை

(கொழும்பு)

பலாக்காயை வெட்டுவதற்காக கத்தியை கொடுக்காமையால் அடுத்த வீட்டில் வசித்து வந்த தனது பெரிய தந்தையை கத்தியால் வெட்டிக்கொன்ற சம்பவமொன்று மாவனல்ல வெலிகல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை போயா தினத்தில் இடம்பெற்றதாகவும் 60 வயதான நெவில் செனவிரத்ன என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தனது தோட்டத்தில் பறித்த பலாக்காயை வெட்டுவதற்காக கொலையுண்டவரிடமும் அவருடைய மகனிடமும் சந்தேக நபர் கத்தியை கேட்டுள்ளார்.

அதனை வழங்க மறுத்தமையால் இருதரப்புக்களுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கொலையில் முடிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-10)

# இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர பொலிஸாரால் மீட்பு

இலங்கை மீனவர்கள் சிலர் இந்திய கடற்பகுதியில் காயமடைந்த நிலையில், இந்திய கடலோர பொலிஸாரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களான ஐந்து பேர் கடந்த மாதம் 14ஆம் திகதி படகு ஒன்றில் இலங்கையிலிருந்து புறப்பட்ட நிலையில், கொழும்பிலுள்ள கடல் வழி மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திலிருந்து கிடைக்கப்பட்ட தகவலுக்கமையவே, இந்திய கடலோர பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை படகுடன் காப்பாற்றப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகமொன்று தகவலை வெளியிட்டுள்ளது. மேற்படி படகில் காயமடைந்த நிலையில் இருந்த மீனவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-10)

# அர்ஜூன் மகேந்திரனின் மனைவியை சிங்கப்பூரில் சந்தித்தார் பிரதமர் ரணில்

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பியுள்ளார். கொழும்பு பங்குச் சந்தையினால் ஏற்பாடு செய்திருந்த இன்வெஸ்ட் லங்கா மாநாட்டில் பங்கேற்பதற்காக சிங்கப்பூருக்கு பிரதமர் சென்றிருந்தார்.

இந்நிலையில் நேற்று முற்பகல் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்றில் பிரதமர் நாடு திரும்பியதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனின் மனைவியை சந்தித்துள்ளார் என கூட்டு எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-7)

# அம்பாறை வன்முறையை அனுமதிக்க முடியாது

## சந்திரிகா அறிக்கை

(கொழும்பு)

அம்பாறை நகரில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தை எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறித்த சம்பவத்துக்கு பொறுப்பானவர்களை காலதாமதமின்றி சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவர் என்ற வகையில் குறித்த சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பல்லினம் மற்றும் பல கலாசாரம் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையர்கள் தேசிய ஒற்றுமையுடன் ஒவ்வொருவரினதும் வேறுபட்ட தன்மையை மதித்து, பாராட்டி நாட்டுக்கும் உலகத்துக்கும் வழங்கி வரும் முன்மாதிரியை எந்தவிதத்திலும் சேதப்படுத்தாமல் இருப்பதற்கு அனைத்து சமூகங்களும் உறுதிகொள்ள வேண்டும்" தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமாகிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிரிய இனப்படுகொலையைக் கண்டித்து காத்தான்குடியில் கண்டனப் பேரணி






(ஏறாவூர்)

சிரியா நாட்டில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்தும் அதற்கு எதிராக ஐ.நாவை நடவடிக்கை எடுக்க கோரியும் நேற்று முன்தினம் காத்தான்குடியில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றுள்ளது.

தேசிய சுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம் மற்றும் காத்த நகர் அரசியல் களத்தின் ஏற்பாட்டில் ஜூம்ஆ தொழுகையின் பின்னர் காத்தான்குடி மீரா பெரிய ஜூம்ஆ பள்ளிவாசல் முன்றலிலிருந்து ஆரம்பமான இந்த கண்டன பேரணி காத்தான்குடி பிரதேச செயலகம் வரை சென்றுள்ளது.

கண்டன பேரணியில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி நினா பிராண்ட்ஸ்ட்ராபுக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜர் ஒன்றையும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதரிடம் கையளித்துள்ளார்.

"சிரியா நாட்டில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும். முஸ்லிம் நாடுகள் அனைத்தும் சிரியா யுத்தத்தை நிறுத்த ஐ.நாவுடன் இணைந்து செயற்படல் வேண்டும்" என குறித்த மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (7-10)

# திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர் நாடாளுமன்றம் இன்று

திருமறைக் கலாமன்றம் நடைமுறைப்படுத்தும் 'சிறுவர்கள் சமூக இணக்கப்பாட்டின் முகவர்களாகிறார்கள்' என்னும் தலைப்பிலான சிறுவர் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக சிறுவர் நாடாளுமன்ற நிகழ்வு இரண்டாவது தடவையாக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் பிராந்திய மன்றங்களைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளதோடு திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் 35 பேர் சிறுவர் தொடர்பான பிரச்சினை, சமூக ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றில் தமது பங்களிப்பு மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் அனுபவம், சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் சமவாயம் என்பன தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர். கடந்த ஆண்டிலும் இத்தகைய சிறுவர் நாடாளுமன்றம் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


பெண்களே

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு கவர்ச்சிகரமான சம்பளம்



இங்கிலாந்தின் Terra Blu செவிலியர் சேவையின் இணை நிறுவனமாகிய இலங்கையின் வரையறுக்கப்பட்ட இங்லிஸ் நர்ஸிங் கெயா சர்விசஸ் தனியார் நிறுவனத்தின் பெருமிதமிக்க உறுப்பினராவதற்கு உங்களுக்கோர் வாய்ப்பு.

புனித மரியாள் ஆலயம் (யாழ்ப்பாணம் Bishop House அருகில்) வருகின்ற 07, 08, 09ஆம் திகதிகளில் நேர்காணலிற்கு வருகை தரவும். மேலதிக விபரங்களுக்கு மார்ச் 06 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு பிறகு தொடர்பு கொள்ளவும் 0775573739

சமூக செவிலியர் உதவியாளர்கள்

- வயது 18 முதல் 60 இடைப்பட்ட ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பானவர்கள். க.பொ.த சா/தரம் வரையில் கல்வி பயின்றோர் அல்லது
- தனியார் செவிலியர் பயிற்சி பெற்றவர்கள் அல்லது செவிலியர் சேவையில் முன் அனுபவமிக்கோர்.

பிரதிபலன்கள்

- இலவசமாக வழங்கப்படும் உயர் தரத்திலான செவிலியர் பயிற்சி.
- ஆங்கில மொழிப்பயிற்சி இலவசம்
- அடிப்படை சம்பளம் ரூ. 15,000/- மேலதிகநேர, கொடுப்பனவு மற்றும் வருகைக்கான ஊக்கத் தொகைகளுடன் ரூ. 30,000/- அதிகமான சம்பளம்.
- ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு வழங்குதல்
- உயர் தரத்திலான தங்குமிட வசதி பொழுதுபோக்கு அம்சங்களுடன்
- இலவசமாக வழங்கப்படும் சீருடை
- உங்கள் பிள்ளைகளுக்கு உதவித் தொகைகள்
- மாதத்தில் சிறந்த சேவையாளரை தெரிவு செய்தல் மற்றும் பரிசுகள் வழங்குதல்

வரையறுக்கப்பட்ட இங்கிலிஸ் நர்ஸிங் கெயா சர்விசஸ் தனியார் நிறுவனம்.

விலாசம் 15, வித்தியாலய மீவேஸ், ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி : 077 557 37 39

மின்னஞ்சல் : [illegible]@englishnursing.com

(அ-189)



# இங்கிலிஷ் தாதியர் சேவை கொழும்பில் அங்குரார்ப்பணம்

வீட்டு மருத்துவ பராமரிப்பு சேவைகளின் தர ஒப்பீட்டு நியமமாக மாறும் இலக்குடன், English Nursing Care Services நிறுவனம் அண்மையில் கொழும்பில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு-10 இல் அமைந்துள்ள English Nursing Care Services வீட்டிலேயே தரமான பராமரிப்பிற்கு இடமளிக்கும் வகையில் தாதியர் மேற்பார்வையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வீட்டு மருத்துவ சேவை வழங்கல் நிறுவனமாகத் திகழ்கின்றது.

English Nursing Care Services ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிச்சர்ட் கௌல்ட் " எமது நிறுவனம் இலங்கையில் உயர் தரத்திலான கருணை மிக்க மருத்துவ பராமரிப்பு சேவை தொடர்பில் புதிய தர நியமத்தை ஏற்படுத்தவுள்ளது. நோயாளர்களுக்கு அவர்களுடைய இல்லங்களிலேயே தொழில்சார் ரீதியாக முகாமைத்துவம் செய்யப்படுகின்ற நம்பகமான மருத்துவ பராமரிப்பு சேவையை வழங்க வேண்டும் என்பதே எமது அவா. தாதியர் மேற்பார்வையுடனான எமது சேவையின் கீழ் முதியோர் பராமரிப்பும் அடங்கியுள்ளதுடன் நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டுள்ளவர்களுக்கு ஏனைய விசேட தாதியர் சேவைகளையும் நாம் வழங்குகின்றோம்" என்றார்.

மருத்துவத்துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமையால் மக்கள் நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. எனினும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கு மருத்துவப் பராமரிப்பு தேவைப்படுகின்றது. கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் உலகெங்கிலும் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் காரணமாக வீட்டில் முதியோரைப் பராமரிப்பதற்கு போதிய நேரமின்றி குடும்பங்கள் சிரமப்படுகின்றன. மேலும் தாம் வழங்கி வருகின்ற சேவைகளின் திறனை உச்சப்படுத்துவதில் வைத்தியசாலைகள் பெரும் அழுத்தத்தை எதிர்நோக்குகின்றன. மேற்குறிப்பிட்ட காரணங்களால் உயர் தரத்திலான நம்பகமான கருணைமிக்க வீட்டு மருத்துவ பராமரிப்பு தேவையாக உள்ளது என்றார்.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள தாய் நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமாக இது காணப்படுவதுடன் இலங்கையில் சமூக மருத்துவ சேவை மற்றும் பராமரிப்புத் துறையை



விருத்தி செய்வதற்கு ஐக்கிய இராச்சியத்தின் நிபுணத்துவத்தை அறிமுகப்படுத்தும் இப்புதிய வீட்டு மருத்துவ பராமரிப்புச் சேவை இலங்கைக்கு ஏற்ற விதத்தில் விசேடமாக வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**புனித மரியாள் ஆலயம் (யாழ்ப்பாணம் Bishop House அருகில்) வருகின்ற 07, 08, 09 ஆம் திகதிகளில் நேர்காணலிற்கு வருகைதரவும். மேலதிக விபரங்களுக்கு**



**மார்ச் 06 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு பிறகு தொடர்பு கொள்ளவும். 077 557 3739**

# சிரியா இனப்படுகொலைக்கு எதிராக மன்னாரில் நேற்று கண்டனப் போராட்டம்

## ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளருக்கு மகஜர்







(பனிக்கன்குளம்)

சிரியாவில் இடம் பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப்படுகொலையை கண்டித்து நேற்று சனிக்கிழமை முற்பகல்10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கண்டனப் போரராட்டம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சிரியாவில் இடம் பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப் படுகொலையை கண்டிக்கும் வகையில் இடம் பெற்ற குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிரியாவில்குழந்தைகள்முதல்அனைவரும் படுகொலை செய்யப்பட்ட மற்றும் அவர்களின் துன்ப துயரங்களை எடுத்துக்காட்டுகின்ற புகைப்படங்களை ஏந்தியவாறு கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் மூர்வீதி ஜும்மா பள்ளி வாசல் மௌலவி எம்.அசீம், மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன்,மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப்பட்ட மகஜர் வாசிக்கப்பட்டு உரிய அதிகாரிகளினூடாக அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிரியாவில் நடைபெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப்படுகொலையை உடன் நிறுத்த வேண்டும். மனித உரிமையை பாதுகாக்க வேண்டிய ஐக்கிய நாடுகள் சபை வெறும் பார்வையாளர் ஆகி விட்டதா?என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இனப்படுகொலையை நிறுத்துவதற்கு இதுவரை எதுவித காத்திரமான நடவடிக்கைகளும் எடுக்காதது ஏன்? மனிதவுரிமைகள் ஆணையகம் வெறும் பெயரளவில் தானா இயங்குகிறது எனும் சந்தேகம் சாமானியர்களுக்கே எழுகிறது.

இனப்படுகொலையை நிறுத்த வல்லமை இல்லாத ஐக்கிய நாடுகள் சபை படுகொலை எண்ணிக்கையை கணக்கிடுவதுடன் மட்டுப்படுத்திக் கொள்கிறீர்களோ? எனும் சந்தேகம் எழுகிறது. உலகத்திற்கே மனச்சாட்சி மரணித்து விட்டதா? இனக் குழுமத்தை பார்க்காமல் அவர்களும் மனிதர்கள் என்று உங்கள் மனவுணர்வை வெளிப்படுத்துங்கள். சதிகார கனவான்களே பர்மா,சிரியா என உங்கள் அருகில் நடப்பதை கண்டு கொள்ளாமல் அமெரிக்க ஏகாதிபதியத்திற்கு அடி பணிந்து அமைதி காக்கும் நீங்களா? முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதி பெற்று தருவீர்கள் என நம்பினால் அதைவிட முட்டாள்தனம் வேறொன்றும் இருக்க முடியாது என்றே தோன்றுகின்றது.

நாமும் இனப்படுகொலைக்கு உள்ளான இனம் என்பதால் அதன் வேதனையும் வலியும் புரிகிறது.

உலகில்மனித உரிமையை பாதுகாக்க தவறும் நீங்கள் எதற்காக வருடத்துக்கு இரண்டு தடவை ஒன்று கூடுகிறீர்கள் வெறுமனே அறிக்கையிடும் ஐ.நா சபையாகவே தற்போது காணப்படுகிறது என்பதே வேடிக்கையான உண்மை.

உங்கள்பொறுப்பற்ற செயற்பாட்டையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிரியா மக்களுக்கு அமைதி மீளவும் திரும்ப வழிவகுப்பதுடன் உண்மையைக் கண்டறிந்து நியாயம் கிடைக்க வழிவகுக்க வேண்டும் என கேட்டு கொள்கின்றோம் என அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-4-281)




# மாணவர்களுக்கு இலவச பேருந்து சேவை கோரி வவுனியா இளைஞர்களின் மலைப்பயணம் நேற்று ஆரம்பம்



(குருமன்காடு)

நாட்டிலுள்ள பாடசாலை சீருடை தரித்த அனைத்து மாணவர்களுக்கும் இலவச போக்குவரத்து சேவையை வழங்க வேண்டும் என கோரி வவுனியாவில் இருந்து இரு இளைஞர்கள் பீதுறுதாலகால மலை நோக்கி மோட்டார் சைக்கிள் பயணத்தை ஆரம்பித்துள்ளனர். வவுனியா இளைஞர்களான த.பிரதாபன்ம.இமையவன் ஆகிய இரு இளைஞர்களுமே இவ்வாறு சாதனைப்பயணமொன்றினை காலை 9.30 மணியளவில் வவுனியா வைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாக இருந்து ஆரம்பித்தனர்.

656 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கவுள்ள இவர்கள் பீதுறுதாலகாலமலையில் கொடியொன்றினை நாட்டி மாணவர்களுக்கான இலவச பேருந்து சேவையை இலங்கை அரசு ஏற்பாடு செய்து வறிய மாணவர்களின் கற்றலுக்கு மேலும் ஊக்குவிப்பு வழங்க வேண்டும் என கோரிக்கையை முன்வைப்பார்கள்.

கலாநிதி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற பயண ஆரம்ப நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ப. சத்தியலிங்கம், எம். தியாகராசா, தமிழருவி த. சிவகுமாரன் உட்பட பலரும் கலந்துகொண்டு வழியனுப்பி வைத்திருந்தனர். (2-250)

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு கிளிநொச்சியில் செயலமர்வு



(பரந்தன்)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலின் மூலம் கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை பத்து மணிக்கு கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற இச் செயலமர்வில் உள்ளூராட்சி முறைமையும்,நல்லாட்சியை உறுதிப்படுத்தலும்எனும்தொனிப்பொருளில் மக்கள் கௌரவத்திற்கும் உரிமைக்குமான நிறுவகம் ஏற்பாடு செய்திருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்குஅனைத்துக் கட்சிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் இச் செயலமர்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் முல்லைத்தீவில் கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தலைமையிலான பெண்கள் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள சுனாமி நினைவாலய வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

வன்னிக்குறோஸ்பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்மற்றும்சர்வதேச பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகளை வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் பெண்கள் அமைப்பு ஊடாக முன்னெடுக்கும் முகமாக இந்த கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இதில் கரைதுறைப்பற்று ,புதுக்குடியிருப்பு ,ஒட்டுசுட்டான் பிரதேசத்தை சேர்ந்த பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு கிராமங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்கள்.

இந் நிகழ்வில் பெண்கள் தொடர்பான கருத்துக்களை வடக்கு மாகாண பெண்கள் பேரவை இணைப்பாளர் திருமதி மதினி நெல்சன்,வடக்கு மாகாண பெண்கள் பேரவை இணைப்பாளர் தீபா சிறீதரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.சிவமோகன் ஆகியோர்கலந்து கொண்டு கருத்துரைகளை நிகழ்த்தியுள்ளார்கள். (2-281)

# திருவள்ளுவர் குருபூசை தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு



(குருமன்காடு)

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உலக பொது மறையான திருக்குறளை அருளிய திருவள்ளுவரின் குருபூசை தினம் நேற்று வவுனியா நகர சபை மற்றும் சமூக ஆர்வலர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வவுனியா வைத்தியசாலைக்கு முன் அமைந்துள்ள திருவள்ளுவரின் சிலையடியில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவு பேருரைகளும்நிகழ்த்தப்பட்டது. மலர் மாலை அணிவித்த மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. இதன்போது தமிழருவி த.சிவகுமாரன், வடமாகண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், தமிழ் விருட்சத்தின் தலைவர் செ.சந்திரகுமார், சிறுவர் மேம்பாட்டு அதிகாரி. ஜெ.ஜெயகெனடி, நகரசபை ஊழியர்கள்என பலரும்கலந்து கொண்டிருந்தனர். (2-250)

நன்றி உணர்வில் கிடைப்பது போன்ற ஆனந்தம் வேறெதிலும் கிடைப்பதில்லை!
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வீடற்றவர்களுக்கு வீடு காணியற்றவர்களுக்கு காணி

ஓர் இனத்தின் வாழ்வியல் என்பது பல தளங்களைக் கொண்டது. அதில் முதன்மையானது அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் என்பனவாகும்.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத எவரும் எதனையும் பொருட்படுத்த மாட்டார்கள்.

*இதனால்தான் வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்* என்றான் பாரதி.

பாரதியின் இத்தகைய மனிதநேயமே அவனை மக்கள் கவிஞனாக மண்ணில் வாழ வைக்கின்றது.

ஆக, தேவையைப் பூர்த்தி செய்தல் என்பது ஒரு வகை. மக்களின் தேவை என்பதை இனம் காணுதல் இன்னொரு வகை என்றவாறு மனித தேவை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அந்த வகையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம் இனத்தின் வாழ்வியல் பற்றி நாம் சிந்திப்போமாக இருந்தால், எங்கள் சிந்தனைச் சிதறல் பல கிளைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

அதாவது இந்நாட்டில் உரிமையுடனும் சுதந்திரத்துடனும் தமிழ் மக்கள் வாழுதல் என்பதைக் கவனிக்கின்ற அதேநேரத்தில்,

மக்களின் அடிப்படைத் தேவைகள், தொழில் முயற்சிகள், சமூகக் கட்டுமானங்கள், கல்வி, கலாசாரம் எனப் பல தளங்கள் சமாந்தரமாக கவனிக்கப்படவும் கட்டியெழுப்பப்படவும் வேண்டும்.

எனினும் எங்கள் மக்கள் சமூகத்தில் அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்தப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதுடன் அதுவும் உருப்படியாக கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எனவே மக்களின் பிரச்சினைகள் அவர்களின் தேவைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் பொருத்தமான செயற்றிட்டங்களை வகுத்து அதனை அமுலாக்குவது தொடர்பிலும் பொது அமைப்புகள் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

அந்த வகையில் காணியற்றவர்களுக்கு காணி; வீடற்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் என்ற பணியை நிறுவனமயப்படுத்தி முன்னெடுப்பது மிகவும் அவசியமானதாகும்.

காணி அற்றவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கான செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தி அதனை அமுலாக்கும்போது, பலரும் அதற்கான உதவிகளை வழங்க முன்வருவர்.

இத்தகைய பணிகளை நிதி வசதியுள்ள ஆலயங்கள் கூட ஆரம்பிக்க முடியும். அவ்வாறு ஆலயங்கள் ஆரம்பித்தால் அதை ஒரு பெரும் தர்ம காரியமாக நினைத்து மக்கள் தம்மாலான உதவிகளை வழங்குவர்.

எனவே காணி அற்றவர்களுக்கு காணி; வீடற்றவர்களுக்கு வீடு என்ற திட்டத்தை செயலுருப்படுத்த சமூகசேவையாளர்கள் முன்வர வேண்டும்.

# நாடு முழுவதும் சட்டவரையறையின்றி 354 மதுபானசாலைகள் காணப்படுகின்றன

## யாழ்.மாவட்ட உதவி மதுபானசாலை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும், உரிய சட்ட வரையறைகளுக்கு உட்படாமல் 354 மதுபான சாலைகள் காணப்படுவதாக யாழ்.மாவட்ட உதவி மது பானசாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டமானது யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விவாதம் இடம்பெற்ற போதே மேற்படி கருத்தானது தெரிவிக்கப்பட்டது.

இதன்படி கடந்த 2016 ஆம் ஆண்டு உரிய தூர இடைவெளிக்குள் இல்லாத மதுபானசாலைகளை கண்டறிவது தொடர்பாக ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போதே நாடு முழுவதும் இவ் எண்ணிக்கையிலான மதுபானசாலைகள் காணப்படுவது கண்டறியப்பட்டது.

மேலும் இவற்றில் 08 மதுபானசாலைகள் யாழ்ப்பாணத்தில் காணப்படுவதாகவும் அவற்றில் நான்கு தொடக்கம் ஐந்து வரையான மதுபானசாலைகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழில் எத்தனை மதுபானசாலைகள் உள்ளன என்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வினவியிருந்தார். அதற்கு யாழில் 64 மதுபானசாலைகள் இருப்பதாக குறிப்பிட்டார்.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், யாழில் 6 இலட்சம் மக்கள் காணப்படும் நிலையில் இவ் மதுபானசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டதாக குறிப்பிட்டதுடன் 50 ஆயிரம் மக்களுக்கு ஒரு மதுபானசாலைகள் வீதம் காணப்பட்டால் போதுமானதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார். (ம-4)

# கிளிநொச்சி பொதுச்சந்தையில் ரவுடிக் கும்பல் வெட்டியதில் ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் ரவுடிக் கும்பல் ஒன்று திடீரென சந்தையில் உள்ள மரக்கறி கடைக்குள் புகுந்து மரக்கறி கடை உரிமையாளர் ஒருவரை வெட்டியுள்ளது.

வெட்டுகாயங்களுக்கு உள்ளான உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சந்தைக்குள் வந்து வெட்டியவர்களை சந்தை வியாபாரிகள் துரத்திக் கொண்டு சென்ற போது ஒருவர் மாத்திரம் அவர்களிடம் மாட்டிக் கொண்டார்.

ஏனையவர்கள் ஓடிவிட்டனர். அவரை வியாபாரிகள் தாக்கியதில் அவர் காயமுடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இது போன்ற சம்பவங்கள் பல தடவைகள் கிளிநொச்சி சந்தையில் நடைபெற்று வருவதனால் சந்தையில் வியாபாரிகள் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் சந்தைக்குள் வருகின்ற முதியவர்கள், கர்ப்பிணி பெண்கள், பெண்கள், குழந்தைகள் என பலதரப்பட்ட மக்கள் வருகின்ற இடத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றமையினால் மக்கள் நாளாந்தம் சந்தைக்கு அச்சத்துடன் வருகின்றனர். (ம-271,312)

# அமைச்சரவை மறுசீரமைப்பு மேலும் தாமதமாகலாம்

(கொழும்பு)

மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை மறுசீரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் தாமதமாகலாம் என அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஆளும் கட்சிகளுக்கிடையில் இன்னமும் கருத்தொருமைப்பாடு ஏற்படாததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எதிர்பாராத வெற்றியை பெற்று 223 உள்ளூராட்சி சபைகளில ஆட்சியை கைப்பற்றியது.

இதனால் படுதோல்வியை சந்தித்த ஆளும் தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் - ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்து தேசிய அரசாங்கத்தின் எதிர்காலம் கேள்விக்குறியானது.

இதனையடுத்து பல சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் தேசிய அரசாங்கத்தை நீடிப்பது என இணக்கம் கண்ட இரு தரப்பினரும் அமைச்சரவையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த இணங்கினர்.

எனினும் அறிவிக்கப்பட்டதற்கு அமைய இந்த அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இடம்பெறாது என்று தெரிவித்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான அமைசசர் எஸ்.பி.திஸநாயக்க மேலும் சில வாரங்கள் செல்லும் என்றும் கூறியுள்ளார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிடையே இன்னமும் இணக்கம் காணப்படாமையே இதற்கு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)


## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்



**வீடு கட்டவும் கிரகப் பிரவேசம் செய்யவும் கூடாத மாதங்கள் எவை?**

இராசி- சூன்ய மாதம்
மேசம்- சித்திரை
ரிஷபம்- வைகாசி
மிதுனம்- ஆனி
கடகம்- ஆடி
சிம்மம்- ஆவணி
கன்னி- புரட்டாதி
துலாம்- ஐப்பசி
விருச்சிகம்- கார்த்திகை
தனுசு- மார்கழி
மகரம்- தை
கும்பம்- மாசி
மீனம்- பங்குனி

மேற்கண்ட இராசிகளில் பிறந்தவர்கள் அவர்களுக்குரிய சூன்ய மாதத்தில் வீடு கட்டுதல், கிரகப் பிரவேசம் செய்தல் கூடாது.


# யாழ்.மீசாலை பகுதியில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் மீசாலைப் பகுதியில் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சோதனையின் போதே 20 வயதுடைய இளைஞர் ஒருவர் 200 கிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# மட்டக்களப்பு வெல்லாவெளி பகுதியில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 39ஆம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாதவர்களினால் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அன்று இரவு 39ஆம் கிராமத்தில் வாய்க்கால் வீதியால் வந்துகொண்டிருந்தவரை இடைமறித்தவர்கள் கத்தியால் கடுமையான முறையில் வெட்டியுள்ளனர்.

வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது கூடவந்ததாக கருதப்படும் இளைஞரும் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது படுகாயமடைந்த 39ஆம் கிராமத்தினை சேர்ந்த 49 வயதான எம்.கமலேஸ்வரன் என்பவர் மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் இடையிலேயே அவர் உயிரிழந்ததாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் சாஸ்திரிகூழாங்குளம் பிரதேசத்தில் மின் தடைப்படும். (இ-9)

# 112 ஆவது வடக்கின் போர் வெள்ளிக்கிழமை ஆரம்பம்

'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம்சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும். இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டிவரும்8ஆம்திகதிவியாழக்கிழமை ஆரம்பமாகி 3 நாட்கள் நடைபெறுகின்றது.




112ஆவது இன்னிங்ஸ் போட்டியான இது இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

போட்டி யின் பாதுகாப்பு இரண்டு கல்லூரி களின் சமூகத்தாலும் பொலி ஸாரிடம் வழங்கப்பட்டுள்ளது. போதையில் அடாவடியில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர் என கூறப்பட்டுள்ளது.

மதுபோதை அல்லது போதைப்பொருள்கள் பாவனையுள்ள எவரும் போட்டியைப் பார்க்க அரங்குக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கல்லூரி சீருடையுடன் எந்த ஒரு மாணவனும் வீதிகளில் உலாவருதலோ அல்லது பணம் சேகரித்தலில் ஈடுபடுவோரோ பொலிஸாரால் பொறுப்பேற்கப்படுவர்.

போட்டி நடைபெறும் நாட்களில் மைதானத்தின் எல்லைக்கோட்டுக்குள் இரு கல்லூரி வீரர்கள், நடுவர்கள், மாணவர் தலைவர்கள், மருத்துவ ஆலோசகர்கள் தவிர்ந்த ஏனையோர் அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க)

## BATTLE OF THE BLUES

# சாகித்தியன் சிறந்த வீரராக தெரிவு

இரட்டைச் சத வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2ஆவது ஆண்டாக நடத்தும் 3 ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி கடந்த வியாழக்கிழமை ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஹாட் லி யைற்ஸ் அணி, யாழ் சென்றல் அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 42.4 ஓவர்களில் 236 ஓட்டங்களை பெற்றனர். பாலேந்திரா- 37, மில்லர்- 49,லதுஸன்-23, ரஜீவ்குமார்-16,கவி-39ஓட்டங்களை பெற்றனர். பிரதீப் - 2, சாகித்யன்-4, நிஸாந்தன்-1 அஜந்தன்-2 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 47.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது. சாகித்தியன் -47, மணிமாறன் - 50, பிரதீப்-13 புருஷோத்மன்-10, நிதர்ஸன் ஆட்டமிழக்காது 43, கீர்த்திகன்-29 ஓட்டங்களை பெற்றனர். கிரிசாந் -2,லதுஸன் -1,மாதுஸன் -01,தீபன் -02, சவிஸ்ரன்-01 இலக்கினை கைப்பற்றினர்.



இப்போட்டியில் சாகித்தியன் 47 ஓட்டங்களையும் 5.4 ஓவர்களில் 26 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளை கைப்பற்றி சிறந்த பெறுபேற்றைபெற்றுக்கொண்டமையால்சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். 2ஆவது போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஹாட்லி கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும். (க)

# விளையாட்டு துறைசார் பட்டப்படிப்பியல் நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

சப்ரகமுவ பல்கலைக் கழக பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களின் ஏற்பாட்டில் சப்ரகமுவ , ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகங்களில் நடைபெற இருக்கும் விளையாட்டுத் துறைசார்ந்த பட்டப்படிப்பியல் நுழைவு பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருக்கின்றது.

சப்ரகமுவ, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் விளையாட்டு விஞ்ஞான முகாமைத்துவம், உடற்தொழில் பட்டப்படிப்பியல் நுழைவு பரீட்சைக்கு தோற்ற இருக்கும் வட மாகாண மாணவர்களை கலந்து பயன் பெறுமாறு சப்ரகமுவ பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீட தமிழ் சமூகம் கேட்டுக் கொள்கின்றது.

மேலும் பயண,தங்குமிட ஏற்பாடுகள்தொடர்பான கலந்துரையாடல்களும் அன்றைய தினம் நடைபெற இருக்கின்றது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க)



குப்பிளான் ஞானகலா விளையாட்டுக்கழகம் நடத்திய வடமாகாண ரீதியில் 40 கழகங்களை உள்ளடக்கிய மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை வென்று வெற்றி மகுடத்தை தன்வசமாக்கியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி. (க)

# மலிங்கவை அணியில் சேர்க்க தானாகச் சேர்ந்த கூட்டம்

இலங்கையில் நடக்கவிருக்கும் இருபது-20 முத்தொடரில் லசித் மலிங்க அணியில் சேர்க்கப்படாததற்கு ரசிகர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதும் சுதந்திரக் கிண்ண இருபது-20 தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து இலங்கை அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டு வரும் மலிங்க இந்த தொடருக்கான அணியிலும் சேர்க்கப்படவில்லை.

தற்போது நடைபெற்று வரும் உள்ளூர் இருபது-20 போட்டிகளில் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தி வரும் மலிங்க அணியில் சேர்க்கப்படாமல் உள்ளது இலங்கை ரசிகர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்காக டுவிட்டரில் #Bring BackMalinga என்ற டேக்கில் மலிங்கவை அணியில் சேர்க்க வலியுறுத்தி ரசிகர்கள் பதிவிட்டு வருகின்றனர். (க)

# அவளை நினைத்து பெருமைப்படுகிறேன் அனுஷ்கா சர்மாவை புகழ்ந்த கோலி

மனைவி அனுஷ்கா நடிப்பில் சமீபத்தில் வெளியான படத்தைப் பார்த்து கோலி அவரை புகழ்ந்து தள்ளியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான கோலி, தன்னுடைய நீண்ட நாள் காதலியான நடிகை அனுஷ்கா ஷர்மாவை சமீபத்தில் திருமணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் ரோசிட்ராய் இயக்கத்தில் அனுஷ்கா சர்மா நடிப்பில் உருவாகியுள்ள படம் பரி என்ற திரைப்படம் வெளியாகியுள்ளது.

திருமணத்திற்கு பின் அனுஷ்கா சர்மா நடிப்பில் வெளிவரும் முதல் படம் இது என்பதால், கோலி பரி படத்தைப் பார்த்துள்ளார்.

இது குறித்து டுவிட்டர் பக்கத்தில் கோலி, பரி படத்தை பார்த்தேன். இது தான் என் மனைவியின் சிறந்த படமாக கருதுகிறேன்.

நீண்ட நாட்களுக்கு பின் ஒரு சிறந்த படத்தை பார்த்துள்ளேன். எனக்கு கொஞ்சம் பயமாகவே இருந்தது. ஆனால் அனுஷ்காவை நினைத்தால் பெருமையாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார். (க)

# 99 வயது முதியவர் நீச்சல் போட்டியில் சாதனை

அவுஸ்திரேலியாவில் நடந்த கொமன்வெல்த் நீச்சல் போட்டிக்கான சோதனை போட்டியில், 99 வயது வீரர் ஒருவர் பங்குபற்றி புதிய சாதனை படைத்துள்ளார்.



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஜார்ஜ். கோரோன்ஸ். 99 வயதாகும் இவர், குயின்ஸ்லாந்தில் கொமன்வெல்த் நீச்சல் போட்டிக்கான சோதனை போட்டியில் பங்குபற்றினார்.

இது 100 - 104 வயது வயதையவர்களுக்கான போட்டியாகும். எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் தனது 100வது வயதை எட்ட உள்ள ஜார்ஜ், இந்த சோதனை போட்டியில் 50 மீற்றர் ஃப்ரீ ஸ்டைலில் பங்கேற்று 56.12 விநாடிகளில் போட்டி தூரத்தை எட்டினார்.

இதன்மூலம், கடந்த 2014ஆம் ஆண்டு கனடா வீரர் 50 மீற்றர் தூரத்தை 1 நிமிடம் 31 விநாடிகளில் கடந்து படைத்த சாதனையை, ஜார்ஜ் முறியடித்துள்ளார்.

போட்டி முடிந்ததும் ஜார்ஜ் கூறுகையில், அனை வருக்கும் நன்றி. உங்கள் கைதட்டல்கள் என்னை உற்சாகப்படுத்தின. நான் சிறு வயதிலிருந்தே நீச்சல் பயிற்சி எல்லாம் எடுக்கவில்லை.

80 வயதில் தான் நீச்சலில் ஆர்வம் அதிகரித்தது. ஒன்றைக் கற்றுக்கொள்ள வயது தடையில்லை என தெரிவித்துள்ளார். (க)

# டிக்வெல்ல நீக்கப்பட்டது தவறு சுட்டிக்காட்டிய முன்னாள் வீரர்

முத்தரப்பு தொடருக்கான இலங்கை அணியில் டிக்வெல்ல நீக்கப்பட்டிருப்பது கவலையாக இருப்பதாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் குருசின்ஹா கூறியுள்ளார்.



இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு தொடர் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்நாள் இந்திய அணி, பங்களாதேஷ் அணி முன்னரே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இலங்கை அணி சற்று தாமதமாக அறிவித்தது.

முதலில் 20 பேர் கொண்ட அணியை அறிவித்த இலங்கை கிரிக்கெட் வாரியம், அதன் பின் இறுதியாக 15 பேர் கொண்ட அணியை அறிவித்தது.

இதில், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டிக்வெல்ல அணியில் இல்லாத காரணத்தினால் ரசிகர்கள் உட்பட முன்னாள் வீரர்கள் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இது குறித்து கூறியுள்ள இலங்கை அணியின் முன்னாள் வீரர் அசன்கா குருசின்கா,

முத்தரப்பு தொடருக்கான இலங்கை அணி பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டத் தில் சிறந்த வீரர்களை கொண்ட பலம் பொருந்திய அணியாக இருந்தாலும், டிக்வெல்ல எந்த காரணமும் இன்றி அணியில் இருந்து விலக்கப்பட்டுள்ளது வேதனையை தருகிறது என்று கூறியுள்ளார். (க)

## யாழ்.கோட்டையை...

ஒருங்கிணைப்புக் கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இராணுவம் மற்றும் பொலிஸார் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பான கோரிக்கை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இதன்போதே மாவட்டச் செயலர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவம் வசமிருக்கும் பல இடங்கள் விடுவிக்கப்படும் என்று அரசால் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவை இன்னும் விடுவிக்கப்படவில்லை.

எனவே அவற்றை விடுவிப்பது பற்றிப் பேசுவதற்கு இராணுவத்துடனான கூட்டம் ஒன்றை மாவட்டச் செயலாளர் ஒழுங்கமைக்க வேண்டும். அதுதொடர்பில் அரசுடனும் நாம் பேச்சு நடத்துவோம் என்று இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டார்.

மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரின் தலைமையில் அண்மையில் கூட்டம் இடம்பெற்றது. விடுவிப்பதாக அறிவித்த பகுதிகளிலிருந்து இராணுவ நிலைகளை நகர்த்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

விரைவில் அந்தப் பகுதிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்றும் இராணுவத்தினர் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன், பருத்தித்துறை-பொன்னாலை வீதியும் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் இராணுவத்தால் கூறப்பட்டது.

மேலும் தொல்பொருள்கள் திணைக்களத்திடமிருக்கும் யாழ்ப்பாணம் கோட்டையை இராணுவத்துக்கு வழங்கப்படுமாயின் அங்கு இராணுவ முகாங்களை மாற்றிவிட்டு, பெரும்பாலான பகுதிகளை விடுவிக்க முடியும் என இராணுவ அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்தப்படவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் கோட்டையை இராணுவத்தினருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை தான் முன்னெடுத்துள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடந்த ஆண்டு தெரிவித்திருந்தார்.

தொல்பொருள் திணைக்களத்தால் தற்போது பராமரிக்கப்படும் யாழ்ப்பாணம் கோட்டை சுற்றுலாத் தளமாக உள்ளது. அத்துடன், கோட்டையை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டால் அதற்கு அருகாமையிலுள்ள பண்ணை சுற்றுலாக் கடற்கரையும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

## யாழ்.ஒருங்கிணைப்பு...

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக புகையிலை மற்றும் மதுபானசாலைகளுக்கு அனுமதி கொடுப்பது தொடர்பாகவே இவ் விவாதமானது இடம்பெற்றிருந்தது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது இணைத்தலைவர்களான வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையில் நேற்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது, குடாநாட்டில் காணப்படும் மதுபானசாலைகளின் அதிகரிப்பு தொடர்பாகவும், அவற்றை குறைக்க வேண்டும் என்பது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மதுபானசாலைகளின்அனுமதிக்காக பருத்தித்துறை பிரதேச செயலகம் அனுமதி கோரியிருப்பதாக குறிப்பிட்டார்.

இதற்கு பருத்தித்துறை பிரதேச செயலர், குறித்த நான்கு மதுபானசாலைகளும் புதிதாக திறப்பதற்கு அனுமதி கோரவில்லை எனவும் ஏற்கெனவே இயங்கி வரும் மதுபானசாலையின் வருடாந்த அனுமதி நீடிப்புக்கான அனுமதியே கோரப்பட்டுள்ளதாகவும் அதற்கு அனுமதி கொடுக்கலாம் என ஏற்கெனவே பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இருந்த போதிலும் வடமாகாண அவைத் தலைவர் சிவஞானம் குறித்த அனுமதி வழங்குவத்றகு தாம் நிராகரிப்பதாக குறிப்பிட்டார். இதனை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வழிமொழிவதாக குறிப்பிட்டார்.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். அதாவது குறித்த மதுபானசாலைக்கு அனுமதி வழங்குவதற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தீர்மானம் எடுத்துள்ள நிலையில் தற்போது மாவட்ட ஒருங்கிணைப்பு குழு நிராகரித்தால் இனி மேல் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தேவையில்லையா என வினாவியிருந்தார்.

மேலும் ஏற்கெனவே இயங்கி கொண்டிருந்த இவ் மதுபானசாலைக்கு எதிராக எந்தவொரு கருத்துக்களும் முன்வைக்கப்படாத நிலையிலேயே அதற்கான அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து அவ் மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று புகையிலை விற்பனையாளர்களிடம் இருந்து பொதுசுகாதார பரிசோதகர் அதனை பறித்து சென்று வழக்கு தாக்கல் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் குறிப்பிட்டார். அத்துடன் புகையிலை உற்பத்தி செய்வதனை தடுக்காமல் ஏன் அதனை விற்பவர்களை தடுக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் வினாவியிருந்தார்.

இதற்கு உதவி மதுவரி ஆணையாளர், தற்போது புகையிலையை விடுத்து மாற்று பயிர்ச் செய்கைக்கு செல்வதற்காக 2020 ஆம் ஆண்டு வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் புகையில்லா புகையிலையை விற்கத்தடை என குறிப்பிட்டார். அதாவது புகையிலை மெல்வதற்கு விற்கத் தடை என குறிப்பிட்டார்.

இதனையடுத்து சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தது. இருந்த போதிலும் வடக்கு மாகாணத்தில் புகையிலை மெல்லுவதால் ஏற்படும் பாதிப்பானது அதிகமாகவுள்ளதாலேயே தாம் வடக்கில் இதனை கடுமையாக அமுல்படுத்துவதாக வடமாகாண சுகாதார பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இறுதியில் இவ் மதுபான, புகையிலை பாதிப்புக்கள் தொடர்பான எந்த விதமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படாமலேயே அனைவரும் ஒவ்வொரு கருத்துக்களை கூறிவிட்டு அத்தீர்மானம் நிறைவேற்றும் யோசனை கைவிடப்பட்டது. (ம-4)

## பிரச்சினைகளை தீர்க்க...

போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீண்டகாலமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவந்த போரின் காரணமாக பின்னடைந்திருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்க வகையில் முன்னெடுப்பதற்கு சிறப்பு ஜனாதிபதி செயலணிகள் இரண்டை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளின் உதவியை எதிர்பார்த்துள்ளேன்.

மேலும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துவது குறித்து ஆராயப்படும் என்றார்.

இதேவேளை, மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, அம்பிட்டியே சுமணரத்ன தேரரைச் சந்தித்து அவரது சுகதுக்கங்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்க ஈஸ்வரர் கோயிலுக்கு சென்ற ஜனாதிபதி அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கோயிலுக்கு அருகாமையிலுள்ள மாமாங்க குளத்தை பார்வையிட்ட ஜனாதிபதி அதன சீரமைப்புப் பணிகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஆளுநரிடம் தெரிவித்தார். (ம)

## பிரதமர் ரணிலுக்கு...

தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

தமது தரப்பினரால் கொண்டு வரப்பட எதிர்பார்க்கப்படும் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏனைய தரப்பினரால் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிப்பது தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மூதாட்டியின் காதை...

துடன் வீட்டில் இருந்த வயோதிப தம்பதிகளை கட்டி வைத்து தாக்கியதாகக் கூறப்படுகிறது. வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடிய பின் கொள்ளையர்கள் குறித்த மூதாட்டியின் காதை அறுத்து தோட்டை எடுத்ததுடன் தொலைபேசிகள் மற்றும் பத்தாயிரம் ரூபா அளவிலான பணம் என்பவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## சைக்கிள் மீது...

கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விபத்தினை ஏற்படுத்திய முச்சக்கரவண்டி வீதியில் புரண்டு விழுந்துள்ளதுடன், சாரதி தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் விபத்தினை ஏற்படுத்திய சாரதியை தேடும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் 60 வயதுடைய முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## வலி வடக்கு...

இவ்வாறு மயிலிட்டி மக்கள் சார்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

மயிலிட்டி மீனவர்கள் தொழிலுக்குச் சென்று வரும் கடலுணவுகளை விற்பனை செய்வதற்குரிய போக்குவரத்து வசதி அங்கு செய்யப்படவில்லை எனவும் எடுத்துக் கூறப்பட்டது. (ம-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

3 - 6 மாத ஹொட்டேல் பயிற்சியுடன்
சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து செல்லும் ஏற்பாடு!



ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பலில்
வேலைவாய்ப்பு
எந்தவொரு நாட்டுக்குமான
என்ன வகை விசாவையும் வெல்ல
அழையுங்கள் 077 36 16 798
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின் வீதி)
021 221 9 221 www.sikaram.lk
(சி-1781)

## என்றும் மறவோம்



**அமரர் கு. சிவகுலசிங்கம் அண்ணன் (G.S)**

**அவர்களுக்கு எமது அஞ்சலிகள்!!!**


தங்க.முகுந்தன்
முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் (TULF)

(C-1782)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சத்தியவாகேஸ்வரன்

(துரை அண்ணை - ஓய்வுநிலை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)



*திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சத்தியவாகேஸ்வரன் (துரை அண்ணை - ஓய்வுநிலை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்) கடந்த (01.03.2018) வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் நாகலிங்கம் - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சின்னையா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், அம்பிகாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், சுஜீவன், றஜீவன், கவிதா (பிரான்ஸ்), சுகிர்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாங்கினி (ஆசிரியை - யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), திலீபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுமணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வியாக்கிரபாதர், மாணிக்கவாசகர் மற்றும் நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரோஜிதா, சாமகானன், தருஷனன், காயத்திரி, ஹரிணி, திரிசாளினி, சமரன், சோழன் ஆகியோரின் பேரனும், அன்னமுத்து, அகிலாண்டேஸ்வரி, ஜெயசிங்கம், கைலாசபதி, கௌரிதேவி, பாலசுப்பிரமணியம், நடேசமூர்த்தி, சாம்பசிவமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 171, இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (05.03.2018) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**171, இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(3114)

அறிமுகம் - Rs. 250/=
**சிக்கன் பிரியாணி**
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
**Fried Chicken - Rice & Bites**
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

**சாரதிகள் தேவை**
யாழ்ப்பாணத்தில் வாகனங்கள் ஓடுவதற்கு சாரதிகள் தேவை.
தொடர்பு : சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-1761)

**பிரத்தியேக வகுப்பு**
கணக்கீடு - A/L
2018, 2019 and Repeat Batch
0750464388, 0774927490 (C-1776)

**பௌதிகவியல்**
2018 A/L சடப்பொருளின் இயல்புகள்
Mon, Wed : 4.30 - 6.00
2019 A/L அலைகளும் அதிர்வுகளும்
Tue, Thu : 4.30 - 6.00
ஆசிரியர் Ramanan
(B.Sc (Hons) in Physics)
வெலிங்டன் சந்தி,
லிங்கன் கூல்பார் அருகாமை
077 297 9763 (C-1777)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
கனடா - 1050*/= Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-1727)

**SB Travels and Tours Pvt Ltd**
Air Ticketing இல் அனுபவமுள்ள வேலை ஆட்கள் தேவை.
இல.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 021 222 9555
Email: sbtravelsjaffna@gmail.com (C-1764)

**வீடு வாடகைக்கு**
பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ள புதிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
077 069 0275 (2561)

**காணி விற்பனைக்கு**
நெல்லியடி நகருக்கு மிக அருகாமையில் கணேஸ் அறிவாலய வீதியில் உள்ளது. (3068)
0750472533

**காணி விற்பனைக்குண்டு**
பெரியமதவடி, அளவெட்டி மேற்கு அளவெட்டி என்னும் முகவரியில் 3 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
0774907091, 0772240970 (3098)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
EXPRESS Courier Service
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை (C-1751)

சைவம், அசைவம்
**ஒடியல் கூழ்**
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
**Fried Chickan - Rice & Bites**
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress (A-1760)

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழ் போதனா வைத்தியசாலைக்கு எதிரில் SINGER காட்சியறைக்கு மிக அருகில் உள்ள ஆரோக்கியமான இரசாயன கலப்பற்ற பழங்கள், உடனடி பழ இரசங்கள், காலை, மதியம், மாலை சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் தரமான விற்பனை நிலையத்துக்கு திறமையான, ஆர்வமுள்ள, சுகாதாரத்தில் அக்கறையுள்ள பணியாளர்கள் தேவை. முன்னனுபவம் அவசியம் இல்லை. (ஆண், பெண் இருபாலாரும்) தொடர்பு: 0770780240
நேர்முகத் தேர்வு: 03.04 பங்குனி 2018
572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3048)

**ரிப்பர் வாகனம் மாத வாடகைக்கு தேவை**
கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கல் ஏற்றுவதற்கு மாத வாடகைக்கு ரிப்பர் வாகனம் தேவை. (3102)
தொடர்பு: 0770774441

**FLC FRENCH LANGUAGE CENTRE**
**FRENCH** வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 10.03.18 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :12.03.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (A-1749)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு யமஹா வழங்கும் மாபெரும் வாகன சந்தை 2018**
எவ்வகையான உங்கள் பழைய மோட்டார் சைக்கிளையும் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு உரிமையாளர் ஆகுங்கள்.



பழையதை கொடுத்து புதியதை எடுத்து செல்லுங்கள்
கிளிநொச்சி டிப்போ சந்தி அருகாமை
மார்ச் 02,03,04
021 228 5253
071 315 9891
முல்லைத்தீவு டிஜிற்றல் யமஹா காட்சியறை முன்றலில்
மார்ச் 09,10,11
077 779 5800
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
Yamaha Garden
No.31, A9 Road, Karadippokku, Kilinochchi.
077 755 5115
எம்மிடம் லீசிங் மூலம் பெற்றுக் கொள்பவர்களுக்கு 15 லீற்றர் பெற்றோல், SLS ஹெல்மற்-01 இலவசம்
Digital Electronics
Main Street, Mullaitivu.
077 662 3824
(சி-1753)

**Canadian Pre-University Programme**
» Fast-Tract to University (1 year)



» Admission Requirements
GCE(A/L) or GCE(O/L)
» No IELTS (conditions Apply)
ICS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
Appointment - 070 3903060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06 (C-1748)

**SB Travels and Tours Pvt Ltd**
01. Chennai - 19,800/= (SL airlines)
02. Chennai - 18,400/= (onwards)
03. Bangalore - 23,500/= (SL airlines)
04. Kochi - 36,500/=
05. Trichi - 34,800/=
06. Mumbai - 36,600/=
07. Delhi - 46,800/=
08. Doha - 34,000/= (o/w)
09. London - 107,000/=
10. Malaysia - 31,800/=
11. Singapore - 31,800/=
12. Bangkok - 41,000/=
13. Toronto - 154,000/=
14. Narita - 83,000/=
15. Paris - 98,300/=
16. China - 75,000/=
17. Melbourn - 109,000/=
18. Auckland - 164,000/=

Visa / Master / American Express Card accepted
*Condition Apply
Our Services
• India & Bangkok Visa arrangement
• Travel Insurance
• Hotel Reservation
Hotline
Jaffna - Kasthuriyar Road. 0212229555, 0212
Jaffna - Nallur - 0212227566
Colombo 13 - 0112530280 / 0112540111
Colombo 13 - 0112333322 / 0112334470
Colombo 06 - 0112059625 / 0112361713
Email: sbtravelsjaffna@gmail.com (C-1764)


## யாழ். வீதிகளை...

கொண்டாடும் விதமாக, பிரித்தானிய காலத்து மிக பழமையான கார்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வந்தடைந்திருந்தன.

கடந்த முதலாம் திகதி கொழும்பில் இருந்து ஆரம்பித்த பழமை வாய்ந்த பதினெட்டு கார் வகை வாகனங்களும் இரண்டு மோட்டார் சைக்கிளும் பேரணியாக அநுராதபுரம் வந்தடைந்து அங்கிருந்து மீண்டும் நேற்று முன்தினம் மாலை யாழ். நகரை வந்தடைந்தன.

நேற்று காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கோட்டை ஊடாக நல்லூர் வீதி வழியாக பேரணியாக சென்ற கார்கள், மீண்டும் அநுராதபுரம் ஊடாக கொழும்பு சென்றடையவுள்ளன.

நேற்று காலை வாகன பேரணி யாழ். கோட்டையை வந்தடைந்த போது வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் றோசான் பெனாண்டோ பேரணியாக வந்த வாகனங்களினை பார்வையிட்டார். மிகவும் பழமை வாய்ந்த வாகன பேரணியை பெருமளவிலான பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். (ம)

## ஆறு...

ப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 156

வள்ளுவர் ஆண்டு 2048 | 04.03.2018 | தொலைபேசி : 021 222 3378



# பேரவையை யாராலும் அசைக்க முடியாது

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**சாத்திரியார்:** நேற்றுப் பார்த்தியளோ கடும் வெயில். பங்குனி மாதத்தில பகல் வழி போறவர்களைப் பார்க்கிறதும் பாவம் எண்டு நம் முன்னோர்கள் சும்மாவா கூறினவியள்.

**மூப்பர்:** மரங்களை நடுங்கோ எண்டாலும் நாங்கள் கேட்கமாட்டம். இனி வெயில் எங்களைச் சுட்டெரிக்கப் போகுது.

**பண்டிதர்:** அது சரி தமிழ்மக்கள் பேரவைக்குள்ள குழப்பம் எண்டு சில ஊடகங்களில செய்தி வந்திருக்குது. என்ன சங்கதி?

**வாத்தியார்:** தமிழ் மக்கள் பேரவை பெரிய அமைப்பாக- மக்கள் இயக்கமாக முழுமை பெற்று விட்டது என்பது தான் பொருள்.

**பண்டிதர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** ஒருவரை நாங்கள் அதிகமாகக் கதைக்கிறம் எண்டால் அவர் பிரபல்யமாகி விட்டார் என்பது தானே பொருள்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. தமிழ் மக்கள் பேரவையின்ர வளர்ச்சி கண்டு சிலர் அதிர்ச்சியடைந்திருக்கினம். அதால பேரவையை வீழ்த்த வேணும் எண்டு படாப்பாடுபடுகினம்.

**கங்காணி:** அப்ப பேரவைக்குள்ள ஒரு குழப்பமும் இல்லையோ.

**வாத்தியார்:** கங்காணியார் பேரவை ஒரு மக்கள் இயக்கம். அதில சில தீர்மானங்களை முன்வைக்கின்ற பொழுது சில பல கருத்துக்கள் ஏற்படவே செய்யும். இது தவிர்க்க முடியாதது. இத்தகைய கருத்துக்கள் எழுவது கட்டாயமானது. தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் அமைப்பு. அதில கட்டமைப்பு மாற்றங்களைச் செய்யும் பொழுது அது தொடர்பில வெவ்வேறுபட்ட கருத்துக்கள் இருக்கவே செய்யும்.

அந்தக் கருத்துக்கள் தொடர்பில கலந்துபேசி அவையள் ஒரு முடிவுக்கு வருவினம். இதை விட்டிட்டு பேரவைக்குள் குழப்பம், பேரவை இரண்டாகப் பிரிந்து விட்டது, முதலமைச்சர் தன் னிச்சையாகச் செயற்படுகின்றார் எண்டால், இவ்வாறு சொல்லுறவர்களின்ர நோக்கம் என்ன?

**விதானையார்?:** தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கம். அந்த அமைப்பை உருவாக்கியவர்கள், அதில அங்கம் பெற்றிருப்பவர்கள் ஒவ்வொருவரினதும் நினைப்பு தமிழ் மக்கள் வாழ வேணும் என்பதுதான்.

வன்னிப் போரிலும் கடந்த 30 வருட கால விடுதலைப் போரிலும் உயிரிழந்த எங்கள் உறவுகளின் இழப்புகளுக்கு உரிய நீதி கிடைக்க வேணும். இந்த மண்ணில தமிழ் இனம் சகல உரிமைகளுடனும் வாழவேணும். இது தான் தமிழ்மக்கள் பேரவையின்ர நினைப்பு. அதால தமிழ்மக்கள் அந்த அமைப்புக்கு பூரண ஆதரவு வழங்குகினம்.

ஆகையால தமிழ் மக்கள் பேரவையை யாராலும் எதுவும் செய்ய முடியாது.

**மூப்பர்:** வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர தலைமையில ஆரம்பித்த தமிழ்மக்கள் பேரவையில் தமிழ்மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கினம்.

என்னைப் பொறுத்த வரை யாரும் எவரும் தங்கள் தங்கள் சுயநலன் பற்றிச் சிந்திக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் பேரவையில அந்தச் சிந்தனைக்கு இடம்கொடுக்கக் கூடாது.

**வாத்தியார்:** ஆலடி மாநாட்டில நான் ஒன்றைச் சொல்லுறன். எங்கட தமிழ்மக்கள் மிகவும் விழிப்பானவர்கள், நிதானமானவர்கள். அவர்கள் உரிய நேரத்தில் சரியான முடிவை எடுப்பார்கள்.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. எங்கட மக்கள் இதுவரை காலமும் எடுத்த அத்தனை முடிவுகளும் சரியானவை. இனியும் அவர்கள் சரியான முடிவை எடுப்பினம். ஆனால்...

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா என்ன ஆனால் எண்டு இழுக்கிறியள்.

**பண்டிதர்:** சாத்திரியார் சில ஊடகங்கள் ஊகங்களின் அடிப்படையில அப்படி நடக்கலாம், இப்படி நடக்கலாம் எண்டு எழுதிறதுதான் பெரிய வேதனையாக இருக்குது.

**வாத்தியார்:** உண்மைதான் தமிழ்மக்கள் பேரவை பற்றி ஒரு இணையத்தளத்தில பெண் எழுத்தாளர் ஒருவர் எழுதினதை வாசித்தன்.

அந்த எழுத்தாளர் பேரவையில இருக்கிற பலரையும் அடித்து நொருக்கி அநாகரிகமாக எழுதியிருந்தார். எப்படியெல்லாம் எங்கட அரசியல் விளையாடு என்பதை நினைக்கத் தான் நெஞ்சு பொறுக்குதில்லை.

**விதானையார்:** வாத்தியார் கவலைப்படாதிங்க. வெற்றியும் பதவியும் கிடைக்க கிடைக்க பணிவு தான் வரவேணும். இறுமாப்பு வந்தால் அது எங்கேயோ கொண்டு போய் விட்டுப் போடும். இதை மட்டும் தான் நான் சொல்லுவன்.

**கங்காணி:** அதுசரி கடந்த முறையும் இந்த இடத்தில கதைத்தனாங்கள். வடக்கில அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில நடக்கிற பொதுப் போட்டிப் பரீட்சைகள் தொடர்பில கொழும்பு அதிருப்தி கொண்டிருக்குதாம்.

கணக்காளர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெற்றதில யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகச் சித்தியடைந்தனர் என்றவுடன் அந்தப் பரீட்சையை இரத்துச் செய்யும் அளவிலதான தென்பகுதி நிர்வாகம் இருக்குது.


**வாத்தியார்:** தமிழ் மக்களை எப்படியும் ஓரங்கட்டவேணும் என்பது அவர்களின்ர நினைப்பு. கணக்காளர் பதவிக்கான போட்டிப் பரீட்சையை திரும்ப நடத்தின போது கொழும்பில இருந்து ஏழு பேர் கொண்ட குழுவினர் பரீட்சைத் திணைக்களத்தில இருந்து வந்தவியளல்லோ.

**வாத்தியார்:** அது மட்டுமே அண்மையில நடந்த கமத்தொழில் திணைக்களத்திற்கான பதவி வெற்றிடத்தை நிரப்புகின்ற போட்டிப் பரீட்சையில சிங்களமொழி மூலப் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணத்தில பரீட்சை எழுதியிருக்கினமாம்.

**பண்டிதர்:** இதென்ன கதை. யாழ்ப்பாணத்தில சிங்கள மொழி மூலத்தில பரீட்சை எழுதுறது எண்டால் அதெப்படிச் சாத்தியமாகும்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா இதுதான் ஊடுருவல். வடபுலத்தில இருக்கிற அரச அமைப்புக்கள் அனைத்திலும் சிங்கள உத்தியோகத்தர்களை நியமிக்கிறதுதானே நோக்கம். அதுக்கு வசதியாக சிங்களப் பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில போட்டிப் பரீட்சைக்குத் தோற்றக்கூடியதான ஏற்பாடுகள் நடக்குது. வருங்காலத்தில சிங்களவர்கள்தான் எங்கட கந்தோர்களில அதிகமாக இருப்பினம்.

**விதானையார்:** உண்மைதான். தங்கட இனத்தை எப்படி வடபகுதியில ஊடுருவச் செய்வது என்று அவர்கள் சிந்திக்கினம். ஆனால் எங்களைப் பலவீனப்படுத்துவதிலேயே நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறம்.



## தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கம்

அடுத்தன்

# தமிழர்களுடன் ஒன்றுசேர முஸ்லிம்கள் முன்வர வேண்டும்

## அம்பாறைத் தாக்குதல் சம்பவம் முஸ்லிம்களுக்கு சொல்வது என்ன?





இலங்கையில் சிறுபான்மை இனமக்களின் உரிமைசார் விடயத்தில் இன்னமும் உருப்படியான முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்பதில் இரு வேறு கருத்திற்கிடமில்லை.

இவ்வாறு சிறுபான்மை இன மக்களின் உரிமைப் பிரச்சினைகள் நீண்டு நிலைப்பதற்கான காரணங்களில் சிறுபான்மை இன மக்களிடையே ஒற்றுமையின்மை என்பது மூலகாரணமாகவுள்ளது.

அதிலும் குறிப்பாக இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள போதிலும் சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து தங்களுக்கான வசதி வாய்ப்புக்களைத் தேடிக்கொள்ளவேண்டும் என்பதைத் தமது இராஜதந்திரமாகக் கொண்டுள்ளனர்.

அதிலும் தமிழ்மக்களும் சிங்கள மக்களும் முரண்பட்டுக் கொண்டிருக்கையில், அத்தகைய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளவேண்டும் என்பது முஸ்லிம் மக்களின் நிலைப்பாடாகவுள்ளது. இலங்கை சமாதான நாடாக இருந்தால் மட்டுமே இங்கு அனைத்து மக்களும் நிம்மதியாக வாழ முடியும் என்ற உண்மையை மறந்து; தமிழ் மக்களும் சிங்களத் தரப்பும் மோதிக்கொள்ளட்டும் நாங்கள் அதனைப் பயன்படுத்தி எம்மை நிலைப்படுத்திக் கொள்வோம் என்பதான முஸ்லிம் அரசியல் தரப்பின் நிலைப்பாடு குறுங்காலத்திற்குப் பொருத்தமானதாக இருந்தாலும் நீண்ட காலத்தில் அந்த நினைப்பே முஸ்லிம் தரப்பிற்கு ஆபத்தாக முடியும் என்பதை அவர்கள் உணரவில்லை.

விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட அத்தனை அராஜக நடவடிக்கைகளையும் கண்டிருந்த சாட்சிகள் என்றால் முஸ்லிம் மக்களே. நடுநிலையோடு உண்மையைக் கூறக்கூடிய தகைமையில் இருக்கக்கூடிய முஸ்லிம் தரப்பினர் எந்தச் சூழ்நிலையிலும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை என்பதே உண்மை.

பேரினவாதமும் படைத்தரப்பும் தமிழ்மக்களை வன்னியில் கொன்றொழித்தபோது தமக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுபோல முஸ்லிம் அரசியல் தரப்பினர் நடந்து கொண்டமை ஒருபோதும் மறக்கக்கூடியதன்று.

இதுதவிர, கிழக்கு மாகாணத்திலும் மன்னார் மாவட்டத்திலும் திட்டமிட்ட முஸ்லிம் குடியேற்றங்கள் நடந்தவண்ணமுள்ளன.

ஆக, இலங்கையில் சிங்கள மற்றும் முஸ்லிம் தரப்புக்களால் பாதிக்கப்படுகின்ற ஓர் இனமாகத் தமிழர் இருப்பது வேதனைக்குரியது. இத்தகைய நிலைமையைத் தமிழ்மக்கள் மாற்ற நினைத்தால் அது ஒரு கணப்பொழுதில் சாத்தியமாகும்.

அதாவது சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ்மக்கள் செல்வார்களாக இருந்தால், முஸ்லிம் மக்களின் அனைத்து அஞ்சவுகளும் அப்படியே நின்று போகும். எனினும் தமிழ் மக்கள் எப்போதும் உரிமை என்ற விடயத்தையே சிந்திக்கின்றனர்.

இந்த உரிமை என்பது தனித்து தமிழ் இனத்திற்கானது மட்டு மல்ல. மாறாக முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை இனத்திற்குமானது.

எனவே, முஸ்லிம் மக்களின் ஆக்கிரமிப்புக்களை உடனடியாகத் தகர்த்தெறிவதென்பது தமிழ் மக்களுக்கு அவ்வளவு கடினமானதல்ல.

எனவே இங்குதான் தமிழ், முஸ்லிம் என்ற சிறுபான்மை இனங்கள் தமக்குள் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும். தமிழ்- முஸ்லிம் மக்களிடையே ஏற்படக்கூடிய ஒற்றுமை என்பது இலங்கைத் தீவில் சிறுபான்மை இன மக்கள் உரிமையுடன் வாழ்வதற்கு வழிவகுக்கும். இதுபற்றி முஸ்லிம் அரசியல் தரப்பினர் சிந்திக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் கூட, வடக்கு- கிழக்கு இணைப்பு என்ற விடயத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ்மக்களுடன் ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற அதேநேரம் தமிழ்- முஸ்லிம் அரசியல் தரப்புக்கள் வடக்கு- கிழக்கு இணைப்புக்குள் தமக்கான உரிமைகளையும் அதிகாரங்களையும் நிர்ணயித்துக் கொள்ள முடியும்.

இத்தகையதொரு நிலைப்பாடுதான் சிறுபான்மை இனமக்களுக்கான பாதுகாப்பைத் தரும். எனினும் இந்த உண்மையை முஸ்லிம் சகோதரர்கள் இன்னமும் உணராத போதிலும் அண்மையில் அம்பாறையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் சிங்களத் தரப்பு மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்கள் முஸ்லிம் மக்களுக்கு ஓர் அனுபவப் படிப்பைத் தந்துள்ளது எனலாம்.

அதாவது சிங்களத் தரப்புக்களின் அடுத்த கட்ட நகர்வு முஸ்லிம் மக்களை நோக்கியதுதான். இதனை உறுதிசெய்வதாக அம்பாறைச் சம்பவம் அமைந்துள்ளது.

அம்பாறையில் முஸ்லிம் மக்கள் மீது, அவர்களின் வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யக்கூடாது என்று பௌத்த பிக்குகள் கூறுமளவிற்கு இன்று நிலைமை வந்துள்ளது.

இந்த நிலைமையானது முஸ்லிம் மக்கள் தொடர்பில் சிங்களத் தரப்புகளின் மனோநிலை என்ன என்பதைக் கோடி காட்டியுள்ளது.

ஆக, எதிர்காலத்திலேனும் இலங்கையில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் , முதலில் தமிழ்- முஸ்லிம் இனங்களுக்கிடையே பலமான ஒற்றுமை ஏற்படவேண்டும். அந்த ஒற்றுமை சிறுபான்மை இனங்களுடன் மோதுவது இனிமேல் சாத்தியமாகாது என்ற செய்தியை சிங்களத் தரப்புக்குச் சொல்லி நிற்கும்.

இல்லை நாங்கள் எங்கள் பாட்டில்தான் செல்லப்போகிறோம் என்று முஸ்லிம் மக்கள் நினைத்தால் ஒரு பெரும் வன்முறைச் சம்பவம் சிங்கள- முஸ்லிம் மக்களிடையே ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

விதுரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# பொது அறிவு

- ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்ட முடியும் ?
  **ஒரே ஒரு முறை.**
- மின்தடையியை கண்டுபிடித்தவர் யார் ?
  **ஓம்.**
- முகப்பவுடரை கண்டுபிடித்த நாடு எது ?
  **இத்தாலி.**
- கிரிக்கெட் விளையாட்டு எங்கு தோன்றியது ?
  **இங்கிலாந்து.**
- கனநீரை கண்டுபிடித்தவர் யார் ?
  **யூரி.**
- சட்டையை கண்டுபிடித்தவர்கள் யார் ?
  **எகிப்து நாட்டவர்கள்.**
- காந்த துருவங்களை கண்டுபிடித்தவர் யார் ?
  **ரோஸ்.**
- கலிலியோ எந்த ஆண்டு தெர்மா மீட்டரை கண்டுபிடித்தார் ?
  **1593**
- மாரத்தான் ஓட்டப்பந்தயம் எத்தனை மைல் தூரத்தை கடப்பதாகும்?
  **26 மைல்**
- நைஜீரியா நாட்டில் எத்தனை மொழிகள் உள்ளன ?
  **420 மொழிகள்.**
- இந்தியாவின் மிக உயர்ந்த விருது என்ன ?
  **பாரத ரத்னா.**

# பெற்றோருக்கு கீழ்ப்படிவோம்



"அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்ற சான்றோர் வாக்கிற்கிணங்க எமது கண்கண்ட தெய்வங்கள் பெற்றோர் ஆவர். அவர்களைப் பேணிக் காக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் அனைத்து செயற்பாடுகளிற்கும் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பெற்றோர்களே அவர்களை வழிநடத்திச் செல்வார்கள். பெற்றோர்களே பிள்ளைகளிற்கு முன்மாதிரியாகத் திகழ்வார்கள். பிள்ளைகள் பெற்றோரை காலையும் மாலையும் வணங்குவார்கள். அவர்களுடைய சொல்லிற்கு மதிப்பளித்து கீழ்ப்படிவுடன் செயற்படுவார்கள்.

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" என சான்றோர்கள் கூறியிருப்பது யாதெனில் எமது அன்னையை தெய்வமாக போற்றி வணங்க வேண்டும் எனவும் தந்தை கூறும் விடயங்களை வேதவாக்காக கருதி செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர். அன்னையை ஓர் ஆலயமாகவும் அங்கு வீற்றிருக்கும் தெய்வமாகவும் சிறப்பித்து கூறுகின்றார்கள்.

ஒரு குழந்தை பிறப்பது முதல் இறப்பது வரை அது குடும்ப சூழலிலேயே வளர்க்கப்படுகிறது. அக் குழந்தைக்கு சகோதர உறவை பெற்றோரே ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். அதே போல் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு உறவும் பிள்ளைகளிற்கு பெற்றோராலே ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. தன் பிள்ளையை குறைவாக குறிப்பிடாமல் தன் பிள்ளையைக் காப்பாற்றுவாள். இவ்வாறு உயரிய குணம் தாய்மைக்கு உண்டு. பத்து பிள்ளைகளை தன் வயிற்றில் சுமந்து பெற்றாலும் அப் பத்துப் பிள்ளைக்கும் பாசத்தையும் அன்பையும் சரிசமமாகப் பங்கிட்டு வழங்குபவர். ஏற்றத்தாழ்வு பார்க்க மாட்டாள். வேறுபாடு காட்டமாட்டாள்.

இவ்வாறு உயர்ந்த மனப்பான்மையுடையவளே அன்னை. இத்தகைய அன்னையை நாம் போற்றி வழிபட வேண்டும். ஆனால் இன்றைய சமூகத்தில் எந்தப் பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றார்கள். பெற்றோரை அவமானத்திற்கு உட்படுத்தி அவர்களுடைய சந்தோசம், நிம்மதி அனைத்தையும் குலைத்து அவர்களை ஒரு சிறைக்கைதிகள் போல் ஒதுக்குப்புறமாகவும் முதியோர் இல்லங்களிலும் கொண்டு வந்து சேர்த்து விடுகிறார்கள்.

பெற்றோர்கள் எந்தக் காலத்திலும் தம் பிள்ளைகள் சீரழிந்து போக வேண்டும் என மனதளவில் கூட நினைக்க மாட்டார்கள். ஏனெனில் தாய்மையின் சிறப்பு அது. ஆனால் வளர்ந்தவுடன் பிள்ளைகள் அவர்களை தமக்கு ஒரு பாரமாக நினைக்கின்றனர். ஒரு தாயின் மூலமாகத்தான் நாம் இவ்வுலகில் ஜனனமானோம் என்பதையே மறந்து விடுகிறார்கள். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் தாய்மனது எவ்வளவு வேதனைப்படும் என்பதை அவர்கள் உணருவதும் இல்லை. யோசிப்பதும் இல்லை.

எதிர்வரும் காலங்களிலாவது இந்நிலை மாற்றப்பட வேண்டும். முதியோரில்லங்களின் எண்ணிக்கைகள் குறைக்கப்பட வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்திலாவது பிள்ளைகள் பெற்றோரின் முக்கியத்துவத்தை உணர்கின்றார்களா? அவர்களை மதித்து நடக்கிறார்களா? என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ந.அஜந்தா
எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமம்
ஆயிலியம் இல்லம்



ச.சர்மிளா
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்
அனுஷம் இல்லம்.

# பழமொழிகள்

அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
அஞ்சும் மூன்றும் உண்டானால், அறியாப்பெண்ணும் சமைக்கும்
அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.
அடக்கமே பெண்ணுக்கு அழகு.
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
அடாது செய்தவன் படாது படுவான்.
அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்.
அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்.
அடியாத மாடு பணியாது.
அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்.
அண்ணன் எப்போ சாவான் திண்ணை எப்போ காலியாகும்.
அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலும்.
அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



ஈழத்தமிழர்கள் கொல்லப்படும் போது சிரியா ஆர்ப்பாட்டம் செய்ததா?

கூட்டமைப்பு கட்சி ஆட்சி அமைக்க முடியாமல் திண்டாடுகிறதே?

சிரியா சின்னாபின்னம் ஆகிறதே?

சயன் — யாழ்ப்பாணம்

**சிரியா சின்னாபின்னம் ஆகிறதே?**

மனிதம் மரித்துவிட்டது என்பதை இந்த உலகம் ஒத்துக் கொண்டு விட்டது. கொத்துக் கொத்தாய் ஈழத் தமிழினம் செத்துக் கொண்டிருந்த போது உலக நாடுகள் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இப்போது சிரியாவிலும் இனச்சுத்திகரிப்பு நடக்கிறது. சர்வதேசம் மௌனம் காக்கிறது. என்ன செய்ய வல்லரசுகளின் அதிகாரப் பசிக்கு இரையாவது அப்பாவி உயிர்கள் மட்டுமே. சிரியாவில் பொதுமக்கள் கொல்லப்படுவதை உடன் நிறுத்தவேண்டும். இதுவே எமது அவா.

சியா — மாதகல்

**கவிஞர்களின் வாழ்வு எப்படிப்பட்டது? தாங்களும் ஒரு கவிஞனாமே?**

ஒரு பத்துக் காதலாவது கட்டாயம் இருக்கும். அதில் ஐந்து காதலாவது புட்டுக்கிட்டுப் போயிருக்கும். மீதி ஐந்தில் மூன்று சொல்லாத காதலாகவும் ஒன்று செல்லாக்காதலாகவும் இருந்திருக்கும். மிகுதியாக இருக்கும் ஒன்று தான் அவர்களின் வாழ்வு.

பிரசாத் — கரவெட்டி

**வாழ்க்கையில் முன்னேற மூன்று வழி சொல்லுங்கள்?**

உழைப்பு, உழைப்பு, உழைப்பு

சாமுவேல் — பருத்தித்துறை

**கூட்டமைப்பு கட்சி ஆட்சி அமைக்க முடியாமல் திண்டாடுகிறதே?**

என்ன செய்ய, ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் எண்டு எங்கள் பெரியவர்கள் சொன்னது வீண்போகுமே. வீட்டைக் கொண்டு நடத்துறத்துக்கு வீணையோ இல்லைச் சைக்கிளோ தேவைப்படுது. அதால திண்டாடினம். என்னை விட்டா ராசா இல்லை எண்டு என்ன காணும் செய்தினம். அதன் விளைவுதான் இது.

நந்தகுமார் — மானிப்பாய்

**அரசியல் நிலவரம் எப்படி இருக்கு?**

அதை ஏன் கேட்கிறீர்கள். பிணைமுறிச் சூறாவளியோட பதவி பறிபோய் விடுமோ என்று சிலருக்குக் கவலை. எப்படிக் கஷ்டப்பட்டாவது ஆட்சி அமைக்கணும். இல்லாவிட்டால் எதிர்க்கட்சிக் கதிரையிலே இருக்கவேணும் எண்டு சிலர். ஐயயோ அந்தக் கதிரையைக் குடுக்கமாட்டன்.

தமிழர் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை எண்டு எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சு போட்டு வாங்கின கதிரை அது பறிபோய் விடுமோ என்று ஒரு சிலருக்குக் குலைப்பன். இப்படி சுவாரசியமாப் போய்க்கொண்டிருக்குத் தம்பி.

சுதன் — குப்பிளான் / யுபா — கரவெட்டி

**எதிர்க்கட்சியான கூட்டமைப்பு ஏன் ஐ.நா. வுக்கு ஓடுகிறது?**

இது ஒரு நல்ல கேள்வி. எனக்கும் இப்படித் தோன்றியது. என்ன செய்ய எமது ஏக பிரதிநிதிகள் அவர்கள் என்றுதானே இப்போதும் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆமையைப் பிடிப்பார் மல்லாத்துவார் யாமது சொன்னா பாவம் என்பதே நமது நிலை.

ஆர்த்தி

**ஈழத்தமிழர்கள் கொல்லப்படும் போது சிரியா ஆர்ப்பாட்டம் செய்ததா?**

இழந்தவனுக்குத்தான் இழப்பின் வலி தெரியும். நாம் இழந்தவர்கள். உலகின் எந்த மூலையிலும் இன அழிப்பு நடந்தாலும் முதன் முதலாய்த் துடிப்பவன் தமிழனாகத் தான் இருக்கும். ஏனென்றால் இன அழிப்பின் கொடூரத்தின் உச்சத்தில் இருந்து மீண்டவன் தமிழன். எதையும் எதிர்பார்ப்பின்றி செய்வோம்.ஏனென்றால் வாழ்வது கொஞ்சக் காலம் அவ்வளவுதான்.

கரன் — மானிப்பாய்

**காதல் தோல்வி எப்படிப்பட்டது?**

அதன் வலியை வார்த்தைகளில் சொல்லி விட முடியாது. இருந்தும் நீங்கள் கேட்டதற்காகச் சொல்கிறேன். கதவு இடுக்கில் விரல் மாட்டுப்பட்டால் எப்படி இருக்கும். அப்படியும் ஏதாவது உணவை ஆசையாய்ச் சாப்பிடும் போது பல்லுடன் நாக்குக் கடிபடுமே அப்படியும் இருக்கும்.




சுபா — கரவெட்டி

**வியாசரே இந்தமுறை உங்கள் வாக்கு யாருக்கு விழுந்தது?**

யாருக்கு போட்டது என்பதைவிட யாருக்குப் போடவில்லை என்று சொல்கிறேனே.

- அரசுடன் சேர்ந்து நாடகமாடியவர்க்கு
- தமது அரசியல் இலாபங்களுக்காக தமிழ் மக்களின் தலைகளை அடகு வைத்தவர்களுக்கு
- தாம் துரோகியாய் இருந்துகொண்டு துரோகிகளை இனங்காணச் சொல்லி மக்களிடம் வேண்டுகோள் விடுத்தவர்க்கு
- ஒரு சில அதிகாரப் போக்குடையவரை பேச விட்டு வேடிக்கை பார்த்தவர்க்கு
- இதற்கு எல்லாவற்றிற்கும் மேலாக தேர்தல் நேரங்களில் மட்டும் நாடகமாடும் வேடதாரிகளுக்கு எதிராக மாற்றத்தை ஏற்படுத்தும் வாக்கு வியாசரின் வாக்கு.

## வியாசரின் வியாக்கியானம்



சமூக வலைத்தளங்கள்ல வாற படங்கள் வீடியோக்கல பாக்க வயிறு பத்தி எரியுது. அப்பிடியே முள்ளிவாய்க்காலை நினைவுபடுத்துது.

சிரியாவில் இன அழிப்பு நடக்குதெண்டு முதன் முதல் குரல் கொடுத்தது எங்கட தமிழ் சமூகம்தான் எண்டுறத நினைக்க பெருமையாக இருக்கு.

அது சரி எங்களுக்குத்தான் இழப்பு என்றால் என்ன எண்டு தெரியுமே. அதனால்தான் சிரியாவில் போர நிறுத்தச் சொல்லி யாழ்ப்பாணத்தில கனக்க இடத்தில ஆர்ப்பாட்டங்களும் கண்டனப் பேரணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்குது.

பிறர் பிள்ளை தலை தடவினா தன் பிள்ளை தானா வளரும் எண்டுவினம். தான் பட்ட வலியும், இழப்பும், வேதனையும் இன்னொருதர் படக்கூடாது எண்டு நினைச்சு எந்த இனம் நடக்குதோ அந்த இனத்துக்கு ஈடு வேறு ஏதும் இல்லை. நானும் தமிழன் எண்டு சொல்லிறதில பெருமைப்படுகிறன்.

ச்ச... என்ன உலகமடா இது. சிரியாவில் அந்த பச்சை மண்ணுகளை இப்படி மண்ணோட மண்ணாக்குறாங்களே.

அதிகாரப் போட்டியில் யார் பெரியவன் எண்டுறதப் பாக்க வேணுமெண்டா எங்கையாவது பாலைவனங்கள்லபோய் சண்டை பிடிச்சு சாகுங்களன்.

இப்படி மக்கள் வாழுற இடத்திலை உச்சக்கட்ட அதிகாரத்தை நிலைநாட்ட வெளிக்கிட்டு அநியாயமாக எத்தனை உயிர்கள் போயிட்டுது.போய்க்கொண்டிருக்குது.




## படிப்பினைகள்

புற அழுத்தங்களின் நிமித்தம்
அகமதுள் ஏற்படும்
பாரிய இடைவெளிகளில்
நின்றபடி...
பகுப்பாய்வு செய்ய முடிகின்றது
பலரது மனங்களின்
நடிப்பாற்றலை

ஒன்றுக்குள் ஒன்றாகி
உறவென்று வளர்ந்த பின்பு
நின்று முகம் வெறுத்து
ஒரு நிமிர்வொடு
நடையைக் கட்டுகின்றன
தங்களுக்கான வழியில்
நிறம் பூசிய முகங்கள்

சில விடயங்களை
கற்றுத் தேறுவதற்கு
கல்விச்சாலைகள்
தேவையற்றதாகிவிடுகின்றன
பரம வைரிகள்
பக்கத்தில் இருக்கும் வரை

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

## நற்பிரஜையாய் வாழவேண்டும்

வாழ்க்கை நீரோட்டத்துள்
வழுக்கி வீழ்ந்து விட்டால்
வருபவை எதிர்கொள்ள வேண்டும்
எதிர்நீச்சல் போடவேண்டும்
கரையேற வழிதேட வேண்டும்
கற்பனைகள் பலமாக வேண்டும்
கற்றவை உதவிட வேண்டும்
நற்சிந்தனை செய்துமே நாளும்
நல்லவை பேச வேண்டும்
குற்றங்கள் தவிர்க்க வேண்டும்
குப்பைகள் வீச வேண்டும்
அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும்
நாட்டை வளமாக்க வேண்டும்
நற்பிரஜையாய் வாழ வேண்டும்

மானந்தன்
அல்வாய்

## புதிய வதனம்

சாகாமல் சாதிக்கும்
சரித்திரமாய் ஆண்
செத்துக்கொண்டே
சாதிப்பது உன்னால்
நான் பெண்ணே
கறைபடிந்த
காயங்களுக்கு
மருந்திடுவாய்
நிறை வடிவம் பூண்டு
நிம்மதி குலைந்து
அரை குறையாய்
வாழ்விலும் அவள்
முகமோ தரிசனமாம்
இறை பக்தி அவன்
வாழ்க்கை அவளுக்காய்
என்று ஏமலித்து
எத்தனை பிறப்பெடுத்து
முகம் பார்த்து
தலைசீவி
அழகுபடுத்திப் பார்க்கிறது
பெண்ணவளால்
இவ்வுலகம் பாதி

நெடுந்தீவு சிறி

## புதுவரவு

காலம் கனிய வேண்டிப்
பார்த்திருக்கிறது விழிகள்
வேரை அறுத்த
கறையான்களாய்
வெளியில் உருப்பெறா
ஆயிரம் சாபங்களோடு
வாழ்தலின் அரை வயது
தேய்ந்து தொலைஞ்சாச்சு
உருப்பெறா ஒவ்வோர்
அத்தியாயமாய்
ஊனம் விழுந்த விழிகள்
உயிர் நனைந்து உடல்
கனத்துக் காய்கிறது
மறு கனவை மரணிக்கும்
நிதான கோசங்களாய்
ஒவ்வோர் புதுப்பித்தலும்
நான்கு அவருக்குள்
நசுக்கிய நீதிகளாய்
திணிக்கப்பட முயலும்
அதிகாரங்களுக்குள் அகப்படா
நீர்க்குமிழியாய் நீருடன் மீண்டு
மீண்டும் புதுநீராய்
வாசல் வரும்
ஆயிரம் சலனங்களோடு

யாழ்.வாகீஷ்

## கொடுமை கேளீரோ!

குண்டு மழையில்
உருக்குலைந்து போகிறது சிரியா
கண்டுகொள்ள ஆளிலையோ?

வண்டு வந்து தலையை சுற்றினாலே
வியந்து பார்க்கும் பிஞ்சுகளுக்கு
குண்டுவிழுமென்று தெரியுமோ?

தொப்புள் கொடியறுத்து
நொடிகூட ஆகுமுன்
குண்டில் மாய்ந்து போகும்
கொடுமை கண்டீரோ சிரியாவில்


சிரித்து விளையாடிய சிறிசுகள்
குண்டில் சிதறிக் கிடப்பதுண்டு
மனம் நெகிழாதோர்
மனம் ஒரு மனமோ?

அதிகார வர்க்கத்தின்
ஆணவப் போட்டிக்காய்
அப்பாவி உயிர்களை
அள்ளித் தின்பதுதான் நீதியோ?

கல்லையும் மண்ணையும்
கனிய வளத்தையும் உறிஞ்சும்
அட்டைகளாய் ஒட்டியிருக்க
ஆசை கொண்ட அதிகாரங்கள்
சொந்த நாட்டில்...
சொந்த நிலத்தில்...
சுதந்திரக் காற்றை சுவாசிக்காதபடி
கொட்டுகிறார் நச்சுவாயுவை
கொடுமை கேளீரோ...?

மாவை. நா.கஜேந்திரன்





# மௌனத்தின் தேடல்- 389



## புன்னகையும் பொய்யாகிப் போனது!

புன்னகையும் பொய்யாகிப் போனது
போலியான மனிதர்களால்
முகமூடியிட்டே மூச்சு விடுகிறான்
மற்றவர் முன்னே நடிப்பதற்காய்
ஆயுளுக்காய் சிரித்து காலம் போய்
அழிவுக்காய் சிரிக்கிறானே வேஷமாய்
பெண்மைக்குள் ஆண்மையா?
இல்லை
ஆண்மைக்குள் பெண்மையா?
பிரமன் படைப்பே பாவமானதே!
புன்னகைக்குள் வஞ்சம்கொண்ட
மனிதா- நீ
கல்லறையிலாவது கழட்டுவாயா?
உன் நிஜ முகமூடியை
போலி புன்னகை அன்பை!

தி.சுதர்சினி
மண்கும்பான்-04

## முகமூடி மனிதனா?

முகமூடி மனிதர்களா?
எங்கெல்லாம் உலவுகின்றனர்
பயமுறுத்தும் கோர வில்லனா?
அழகிய பெண்ணா?
அந்தந்தச் செயல்களைப்
புரிவதற்கான முகங்கள்
முகமூடியற்ற உண்மையான
நேர்மையான மனிதனைத்
தேடிப்பிடியுங்கள்
அவன்தான் மனிதன்

அபி குலமாம்பிகா
சங்கானை

## அகத்தின் அழகு

பால் வடியும் முகத்துடன்
பட்டையிட்ட நெற்றியுடன்
ஆதரவு ஆதரவு என
எம்மை அணுகியவர்
வாக்களித்தோம் உமக்கு
உம் புகழ் வானுயர
எம்மை நாடி வந்த
பிரச்சினை தீர்ந்துவிட
தேடி வந்ததும் தெரியவந்தது
உங்கள் செய்ந்நன்றி
மறந்த சுயரூபம்

ர.அர்ஜுனன்
சண்டிலிப்பாய்

## வேடதாரிகள்

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டி
உணர்வுபூர்வமாயன்று
மாணிக்கசுவாமிகள் பாடிய
மணியான வார்த்தைகள்
அகவன்மையை மறைத்து
முகமூடிகளைத் தரித்து
முகத்தில் புன்சிரிப்புடன்
குறுக்குவழி முறையில்
பொருள் தேடுபவர்களுக்கு
பொருத்தமான புத்திமதி

சு.வரதலிங்கம்
சாவகச்சேரி

## சிறுமை

உரிக்க உரிக்க
எரிவைத் தந்து
உருவம் சிறுக்கும்
சிறு வெங்காயமாய்
முகமூடி மனிதர்கள்
அகமதில் சிரிப்பும்
ஆழ்மனதில்
சூழ்ச்சியுமாய்
அவதிப்பட வைத்து
இவர்களுக்கென்றும்
கைவந்த கலை

க.நாகராசா
நுணாவில்

## முகமூடி

உள்ளே வஞ்சமொடு
நஞ்சினை வைத்து
நாவினிக்க நயமாகப் பேசும்
நல்லவன் வேஷம் போடும்
முகமூடி
ஏங்கி நிற்கும்
ஏழை இதயங்களுக்கு
இன்ப கனவை காட்டி
இரட்டை வேடம் போடும்
அரசியல்வாதிகளின் முகமூடி
பகல் வேஷக்காரரின்
பாமரரை ஏமாற்றும் முகமூடி
உண்மைத் தோற்றத்தை
உலகம் காண
இனியும் இங்கே
பொய்யான முகமூடி

சி.திவ்வியா
யா/ப.பெ.ம.வி.

## முகமூடி

அகத்தின் அழகை
முகத்தில் காட்ட
அடிமையாக்கும் உலகமிது
சூழலுக்கேற்ப
நிறம் மாறும்
உயிரினமாய்
முகம் மாறும் அகம் வேண்டும்
முகம் காட்ட
மறுப்போருலகில் வாழ

இணுவில்
வாகீசன்

## முகமூடி

உனக்குள் இருக்கும்
பொய்யான முகமூடியை விட
உன்னை உண்மையாகக் காட்டும்
கண்ணாடி கூட அழகுதான்

ஆ.நிருஷினி
யாழ்ப்பாணம்

# மௌனத்தின் தேடல் -390



**அன்பு வாசகர்களே !**

*உங்கள் எண்ணத்தில் தோன்றும்*
*கவிதைகள் மற்றும் வியாசர்*
*பதிலுக்கான கேள்விகளை*
*ஆசிரியர்*
*'மௌனத்தின் தேடல்'*
*சங்குநாதம்*
*இல3,2ம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு 07.03.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.*

*குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.*

*-ஆசிரியர் -*

சிறுகதை

பொன். தில்லைநாதன், பூநகரி.

# ஓயாத ஓய்வூதியர்



சின்னத்தம்பி விதானையார் என்றால் அவ்வூரில் தெரியாதவர்களே இல்லை என்கிற அளவுக்கு பிரபலமானவர். எல்லோரும் அவரை சின்ன விதானையார் என்று செல்லமாக அழைப்பதுண்டு. அவ்வூரில் நீண்டகாலம் விதானையாராய் (கிராமசேவகர்) இருந்து அரச சேவையில் ஓய்வு பெற்று ஒரு தசாப்தம் தாண்டி பவள விழா காணப்போகும் ஒரு ஓய்வூதியராக வாழ்ந்து வந்தார்.

சின்னத்தம்பி விதானையாருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தார்கள். சிறுவயதாய் இருக்கும் போதே விதிவசத்தால் பெற்ற தாயை இழந்துவிட்ட நிலையில் அவர் தனது சகோதரியின் உதவியோடு அவர்களை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கி நல்ல நிலை பெற உதவியவராவார். மூத்தவன் சுரேஸ், இளையவள் வாசுகி. கல்வியில் தேர்வு பெற்று வேலை தேடிக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த நிலையில் இருவருக்கும் ஒரே நாளில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

அண்ணன் சுரேஸ் மலைநாட்டில் உள்ள பாடசாலையொன்றிலும் வாசுகி உள்ளூரிலுள்ள கிராமப்புற பாடசாலையொன்றிலும் கடமையை ஏற்றுக்கொண்டார்கள். வாசுகி தன் கடமையை எவரும் குறை சொல்வதற்கு இடம்வையாமல் திருப்திகரமாகச் செய்து வந்தாள். அறிவும் அழகும் அவளின் கூடப்பிறந்த சொத்தாகும்.

திருமண வயதை எட்டி நிற்கும் வாசுகிக்கு பல வரன் கொடுக்க முண்டியடிச்சார்கள். ஆனால் அவள் கற்பித்த பாடசாலையில் பணிபுரியும் சரவணன் என்ற ஆசிரியர் அவள் மீது மையம் கொண்டு திருமணம் செய்ய முன்வந்தபோது வாசுகியின் தந்தையும் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தனது இசைவைத் தெரிவித்திருந்தார். நல்லதோர் முகூர்த்த நாளில் சுற்றம் சூழ வெகு சிறப்பாக திருமணம் நடந்தேறி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. விதானையாரும் மகள் , மருமகனுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருந்தார்.

நாளடைவில் சரவணனுக்கும் வாசுகிக்கும் இரு குழந்தைகள் உதயமானார்கள். மூத்தவன் சுரேன், இளையவள் மஞ்சுளா. ஓய்வூதியரான விதானையார் இரு பேரப்பிள்ளைகள் மீதும் அளவற்ற அன்பு செலுத்தி வந்ததோடும் அவர்கள் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அதீத நாட்டங்கொண்டவராக இருந்தமையால் பேரப்பிள்ளைகள் மீது சிறிய கண்டிப்பையும் செலுத்த வேண்டியிருந்தது.

ஆசிரியர்களாகக் கடமையாற்றிய இருவரின் வேலைப்பளுவும் வீட்டுப் பொறுப்புக்களும் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டாமல் இருந்தமையால் தன் பேரப்பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து கவலை கொண்டார். அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுத்து எந்நேரமும் ரீவிதான் தஞ்சமென பொழுதைக் கழிக்கும் தம் பேரப்பிள்ளைகள் மீது சற்றுக் கண்டிப்பைச் செலுத்தி வந்தமையால் அவர்கள் தம்முடைய நன்மைக்குச் சொல்கிறார் என்பதை மறந்து அம்மப்பா மீது சினத்தை வெளிப்படுத்தி நின்றமை பற்றி மிகுந்த வேதனைப்பட்டார்.

அன்றொரு நாள் நல்ல ஒரு விடயத்தையொட்டி புத்திமதி சொல்ல முற்பட்டபோது சரவணன் கோபப்பட்டவனாக "அம்மப்பா... நாங்கள் குழந்தைகளல்ல. நெடுக எங்களுக்கு ஓதிக்கொண்டிருக்காதையுங்கோ... எங்கட வேலையில நீங்க தலையிட வேண்டாம்" இப்படிக் கூறியதைக் கேட்டு விதானையார் அதிர்ச்சியடைந்தார். பெட்டிப் பாம்பாக அடங்கிக்கொண்டார். ஏன்? தன் மருமகன் சரவணன் குணத்தை நன்கு அறிந்த காரணத்தால். அவர் மேற்கொண்டு பேசியிருந்தால் வாலிப வயதை எட்டி நிற்கும் சுரேன் பொறுமை காக்கமாட்டான் என்பதை நன்கு அறிந்திருந்தும் ஊரெல்லாம் கட்டியாண்ட விதானையாரல்லவா. பொறுமையிழந்தவராய் " நீ என்னடா கதைக்கிறாய்? உன்னிலை ஒரு பிழையும் சொல்லமாட்டன். உன் அப்பா தந்த இடம்தான் உன்னை கதைக்க வைக்குது. நல்லாய் கதையடா நானும் கேட்க வேண்டுமென்ற விதிபோல் இருக்குது" "கிழடு நீ இங்கை இருக்கிறதெண்டால் பேசாமல் இருந்து அம்மா நேரா நேரத்துக்கு தாறதை திண்டிட்டுக்கிட. எங்களோடை வீண்கதை வேண்டாம்"

" என்ன பிரச்சினை இருவருக்கும் வாக்குவாதம்" கேட்டுக்கொண்டே சரவணன் உள்ளே வந்தான். " தம்பி உன்ரை மேன் என்னை கிழடு எண்டு பேசி உன்ரை வேலையை நீ பார்" என்று மதிப்பு மரியாதை இல்லாமல் கதைக்கத் தொடங்கியிட்டான். நீங்கதான் தம்பி இதுக்கு பதில் சொல்லவேணும்".

நான் என்ன பதில் சொல்லக் கிடக்கு. நீங்கள் இஞ்சை சரியாய் நடந்தால் அவனும் சரியாய் நடப்பான். இதை விளங்கிக்கொண்டால் சரி. வயது வந்த பிள்ளைகளோட அளந்து கதைச்சியெண்டால் எல்லாம் சரியாய் இருக்கும்.

சின்னத்தம்பி விதானையார் எழுபது வயதைத் தாண்டிய நிலையிலும்கூட உடல் உறுதியுடனும் மனவுறுதியுடனும் தன் கடமைகளைச் செய்து வந்தார். அதிகாலை எழுந்து தன் காலைக்கடமைகளை முடித்தபின் பூசை அறையில் பக்தி மயமாக கீர்த்தனைகளைப் பாடுவதில் ஈடுபடுவார். பின்னர் தன் ஓய்வு நேரத்தில் அக்கறையோடு செய்துவரும் வீட்டுத் தோட்டத்தில் நாட்டப்பட்டு பயன்தரத்தயாராகியுள்ள செடி வகைகளுக்கு நீர் ஊற்றி அவ்வேலைகளைச் செய்வதில் பெருவிருப்பம் கொண்டவராய் இருந்தார். வீட்டுத் தோட்டத்தில் இருந்து கிடைக்கும் காய்கறி வகைகளில் தம் வீட்டுத் தேவைக்கும் மிஞ்சியவற்றில் சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து அதன் வருமானத்தை ஆலயங்களுக்குக் கொடுப்பதிலும் ஏழைகளுக்கு வழங்கி மகிழ்வார். ஆலயங்கள் இவர் மீது அன்பும் அபிமானமும் உள்ளவர்களாக இருந்தார்கள்.

விதானையாரின் பேரப்பிள்ளைகளான சரவணனை உயர்தர வகுப்பிலும் மஞ்சுளாவை சாதாரண தர வகுப்பிலும் படித்துக்கொண்டிருந்த கால நாட்கள் நகர்ந்து பரீட்சைக்காலம் அண்மித்துவிட்டது. பரீட்சை நேரசூசியும் வந்துவிட்டதாக பேரப்பிள்ளைகள் பேச்சில இருந்து அறிந்து கொண்டார். அன்றைய தினம் வார இறுதி நாளாகும்.

பரீட்சைக்காகத் தம்மைத் தயார் செய்ய வேண்டிய சரவணனும் வாசுகியும் எந்தவிதச் சலனமும் இல்லாமல் அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கும் தொடர் நாடகங்களைப் பார்த்து விமர்சனம் செய்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வைப் பார்த்துக்கொண்டிருந்த விதானையாரின் பொறுமை எல்லை மீறியது. தன் மனதுக்குள் சிந்திக்கலாயினார். இந்தப் பிள்ளையள் எப்படி முன்னேற்றமாய் வாழப்போகுதுகள். எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் வளர்ந்து ஊர் சிரிக்க வைக்கவும் என்ர பேரப்பிள்ளையள் என்ட அவமானமும் எனக்கு வரும் தானே. வருவது வரட்டும். இதுக்கு ஒரு முடிவு காணத்தான் வேண்டும். பேசத் தொடங்கினார். நீங்கள் இருவரும் படிக்கிற பிள்ளையள் மாதிரிக் காணேல்ல. நாளைக்கு பரீட்சையில் வினாக்கள் ரீவி நாடகத்தைப் பற்றித்தான் வரப்போகுதோ? ரீவியை நிப்பாட்டுங்கோ. எழும்பிப் போய்ப் படியுங்கள் என்று அதட்டும் குரலில் கூறினார். மஞ்சுளா உடன் எழுந்து அறைக்குள் படிக்கப் போயிட்டாள். சரவணனோ கோபத்தோடு முறைத்துப் பார்த்த வண்ணம் போய் ரீவியின் சத்தத்தைக் கூட்டிவிட்டான். பொறுமையிழந்த தாத்தா கோபத்தோடு கையை ஓங்கியபடி அவன் அருகே சென்றார். கணப்பொழுதில் நிலைமை மாறியது. "சனியனே... எங்கட விடயத்தில தலை போடாதை என்று சொன்னால் கேட்கமாட்டாயா... படாரெண்டு தள்ளிவிட்டான். நிலை தடுமாறி நிலத்தில் விழவும் இதை அவதானித்த வாசுகி,

"என்னடா வேலை செய்தாய்" என பளார்... பளார் என சரவணன் கன்னத்தில் அறைந்தாள். வீடு போர்க்களமாய் மாறியது. இந்த நேரம் அங்கு வந்த சுரேன் தன் மகன் கன்னத்தில் பதித்த கைவிரல் அடையாளத்தைப் பார்த்ததும் ஒரு விசாரணையும் இல்லாமல் வாசுகியைத் தாக்கவும் நிலைமை மோசமடைய மஞ்சுளா ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள். தன் மாமனாரால்தான் இந்த நிலை ஏற்பட்டதென முடிவுகட்டி மாமனாரை வாய்க்கு வந்தபடி ஏசினான்.

நான் இதுக்கு ஒரு முடிவு கண்டேயாகவேண்டும். திடீரென்று தன் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்றான் சுரேன். எங்கு போனான் என்று யாருக்கும் புரியவில்லை. மறுநாள் காலையில வயோதிபர் காப்பகத்துக்காக இயங்கிக் கொண்டிருக்கும் ஹயஸ் வாகனம் சுரேன் வீட்டு வாசலில் வந்து நின்றது. நிலைமையை எல்லோரும் புரிந்து கொண்டனர். மஞ்சுளா விக்கி விக்கி அம்மப்பா... அம்மப்பா... என அழத் தொடங்கினாள். சரவணன் ஏதும் பேசாமல் தன்பாட்டில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். சுரேன் வாசுகியை அழைத்தான்.

" உன் அப்பாவுக்கு இஞ்சை இருக்கச் சரிவராது. அவரை வயோதிபர் நிலையத்துக்கு அனுப்ப எல்லா ஒழுங்கும் செய்து விட்டேன். நீ... ஏதும் பேசாதே. அவரது உடைமைகள் எல்லாவற்றையும் கொடுத்து அனுப்பி வை.

ஐயா... உங்களைப் பிரிந்து என்னால் நிம்மதியாக வாழ முடியுமா? அம்மா இறந்த பின் எனக்கு அம்மாவாய்... அப்பாவாய்... ஆசானாய் இருந்த என் அன்புத் தெய்வமே... தந்தையை கட்டிப் பிடித்து அழுதாள். கணவனின் கட்டுப்பாட்டை மீற முடியாத நிலையில் அனலிடைப்பட்ட புழுவாய்த் துடித்தாள்.

அழுகுரல் மத்தியில் கனத்த உள்ளத்தோடு ஓய்வில்லா ஓய்வூதியர் சின்னத்தம்பி விதானையார் சொர்க்கம் நோக்கி மூதாளர் பேணகத்திற்கு போய்க் கொண்டிருந்தார்.

அன்று மாலை நேரம் தனக்குப் பெண் கொடுத்த மாமனை அவரின் அருமை பெருமை தெரியாதவனாய், உணராதவனாய் காலி செய்துவிட்ட புன்முறுவலோடு வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டில் மயான அமைதி நிலவியது. நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. சுரேன் வீட்டுப் பூசை அறையில் தினம் தினம் கேட்டுக்கொண்டிருந்த புனித கீர்த்தனைகள் ஒலி அடங்கிப் போய்விட்டது. தூப நறுமணம் ஓய்ந்த நிலையில் வீட்டின் நறுமணம் ஓய்ந்த நிலையில் வீட்டின் பிரகாசமே மங்கிக் கொண்டேயிருந்தது.

விதானையார் அரும்பாடு பெற்று வளர்த்த காய்கறிச் செடிகள் நீரின் கவனிப்பாரின்றி வாடி வதங்கிக் கொண்டிருந்தது. ஒரு சில நாட்களில் தந்தையின் பிரிவால் வாடி வெதும்பி வெதும்பி நூலாய் இழைத்துவிட்டாள்.

ஒட்டுமொத்தத்தில் தான் எடுத்த முடிவின் தாக்கத்தை உணரத் தொடங்கினான். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதை உணர்ந்து கொண்டான் சுரேன்.

வீடு சோபையிழந்த நிலையில் பிள்ளைகளும் கவனிப்பாரற்று, கட்டுப்பாடற்று வளர்வதை சுரேன் முதன் முறையாக உணர்ந்தான். தன் மனைவி வாசுகியை அன்போடு அழைத்து தான் விட்ட பிழையை உணர்ந்து கொண்டதாகவும் தன்னை மன்னிக்கும்படியாகவும் மண்டியிட்டான். மகிழ்ச்சி பொங்க இருவரும் ஒரே முடிவை எடுத்துக்கொண்டு பிள்ளைகளுடன் தந்தையாரிடம் மன்னிப்புக்கோரி அழைத்து வரப்புறப்பட்டனர்.

மூதாளர் பேண வளாகத்திற்கு சென்று உரிய அனுமதியைப் பெற்று அங்கே உள்ளே சென்றனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி கனவா, நனவா என்று எண்ணினார்கள். முற்றிலும் சிவனடியார் போல உருத்திராக்கம், விபூதி அணிந்தவராய் பல வயோதிபர்களுக்கு தலைமை தாங்கி சிவபுராணத்தை ஆனந்தம் பொங்க பாடிக்கொண்டிருந்தார். தங்கள் எண்ணக் கருத்தை வெளிப்படுத்தி மன்னிப்புக்கோரி தங்களோடு வரும்படி இரந்து... கெஞ்சி வேண்டினார்கள் வருவார் என்ற நப்பாசையுடன்.

சட்டத்தின் பிடியில் நின்று ஊரெல்லாம் நல்லதையே செய்து நல்லபடி வாழ வழிகாட்டிய கட்டை இது. இந்த வைரமேறிய கட்டையை உங்கள் கோடரியால் பிளக்க முடியாது. நீங்கள் சென்று வரலாம். எனக்கு இங்கு நீண்ட பணி காத்திருக்கு. போய் வாருங்கள் எதுவும் பேசுவதற்கு முடியாத நிலையில் வெட்கித் தலைகுனிந்து அமைதியற்ற உள்ளத்தோடு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.





# அரைக்கிலோ அரிசி திருடியதற்காய் அடித்துக்கொல்லப்பட்ட ஆதிவாசி

**மதுவின் உடற்கூறு ஆய்வறிக்கை முழுவதுமாக வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கையின்படி, அவரின் வயிற்றில் ஒரு பருக்கை சோறுகூட இல்லை என்று தெரியவந்துள்ளது. சில காட்டுப்பழங்களும் வாழைப்பழத்துண்டு ஒன்றே ஒன்று மட்டுமே அவரின் வயிற்றுக்குள் இருந்துள்ளது. பல நாட்கள் பட்டினியாகக் கிடந்துள்ளதால், அவரின் எலும்புகளும் தசைகளும் மிகவும் பலவீனமான நிலையில் இருந்துள்ளன.**

கேரள மாநிலம் அட்டப்பாடியில் ஆதிவாசி இளைஞரான மது. 16 பேர் கொண்ட கும்பலால் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம், உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுவை முக்காலிக்கு அழைத்து வருவதற்கு முன், காட்டுக்குள் வைத்து அவரை சித்திரவதை செய்துள்ளனர். மதுவுக்கு நேர்ந்த கொடுமைகளை அறிவதற்கு முன், அட்டப்பாடி பகுதியைப் பற்றித் தெரிந்து கொள்வதும் அவசியம். கோவை மாவட்டத்துக்கு மிக அருகில் உள்ள பகுதி அட்டப்பாடி. "ஆனைக்கட்டி" என்ற தமிழக எல்லையைத் தாண்டினால் "அட்டப்பாடி" வந்துவிடும். தமிழகத்துக்குள் பவானி ஆறு நுழையும் பகுதி இது. "சைலன்ட் வேலி" இங்கேதான் உள்ளது. மன்னார் காடு சற்று பெரிய நகரம்.

அட்டப்பாடி, வெள்ளந்தி மனிதர்கள் நிறைந்த பூமி முழுவதும் இருளர், பணியர் போன்ற ஆதிவாசி மக்கள் நிறைந்த பகுதி. 175 ஆதிவாசிக் குடியிருப்புகள் உள்ளன. தமிழ் பேசும் ஆதிவாசிகளும் இங்கு வசிக்கின்றனர். இந்த மக்களின் ஒட்டிய வயிறே இந்தப் பகுதி மக்களின் வறுமைக்குச் சான்று. குடித்துக் குடித்தே இறந்த மக்கள் அதிகம். அதனால், கேரளத்தில் அட்டப்பாடிக்கு மட்டும் மதுவிலக்கு அமுலில் உள்ளது. யானைதான் இவர்களின் சாமி. "அந்தப் பக்கம் சாமி இருக்கும் போகாதீர்கள்" என்ற வார்த்தை இந்த பூமியைச் சேர்ந்தவர்களுக்கே சொந்தம். சொல்லப்போனால், அட்டப்பாடி பூமியும் மது போன்றோருக்குத்தான் சொந்தம்.

மது, அரிசி திருடியதாகச் சொல்லப்படுகிறது. மனநிலை பிறழ்ந்த அவருக்கும் குடும்பத்துக்கும் தொடர்பு அறுந்து 10 வருடங்கள் ஆகின்றன. காட்டுக்குள் உள்ள குகைதான் அவரின் வாழ்விடம். அரிசி காணாமல்போனதையடுத்து, காட்டுக்குள் இப்படி ஒருவர் இருப்பதாக வனத்துறையினர்தான் 16 பேர் கொண்ட கும்பலுக்குத் தகவல் அளித்துள்ளனர். இதையடுத்து அந்தக் கும்பல் காட்டுக்குள் போயிருக்கிறது. மது அப்போது சமையல் செய்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் அந்தக் கும்பல் தாறுமாறாகத் தாக்கியுள்ளது. கொடூரத்தின் உச்சம்தான் அவரைக் கட்டி வைத்து செல்ஃபி எடுத்தது.

மதுவின்மேல் அரிசி மூட்டையையும் ஏற்றி நான்கு கிலோமீற்றர் தொலைவுக்கு அந்தக் கும்பல் நடந்தே கூட்டி வந்துள்ளது. வறுமை காரணமாக மது பாதி நாட்கள் பட்டினியில்தான் கிடந்துள்ளார். வறியவனை வலியவர்கள் சேர்ந்து அடிக்க, உள்ளுறுப்புகளில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், நடந்தே வந்ததும் அவரை மிகவும் சோர்வுக்குள்ளாக்கியுள்ளது. கூடவே, வனத்துறையினரின் ஜீப்பும் வந்துள்ளது. அதில், ஏற்றிக்கொண்டு வந்திருந்தால்கூட மது இறந்திருக்கமாட்டார் எனச் சொல்லப்படுகிறது.

நடந்துவரும்போது மதுதாகத்தால் "வெள்ளம்... வெள்ளம்" (தண்ணீர்) எனக் கேட்டிருக்கிறார். அப்போது வனத்துறையினர் தண்ணீர் கொடுப்பதுபோல் கொடுத்து போத்தலைக் காட்டிவிட்டு தண்ணீர் கொடுக்காமல் ஏமாற்றியுள்ளனர். இப்படி, வழியெங்கிலும் ஒரு சொட்டு தண்ணீர்கூட கொடுக்காமல் தண்ணீர் போத்தலைக் காட்டுவதும் தண்ணீரைக் கீழே ஊற்றுவதுமாக தாகத்துடனேயே அவரை அழைத்து வந்துள்ளனர். "வெள்ளமாடா வேணும்... நக்கிக் குடிடா!" என்று கூறியவாறு வனத்துறையினர் தண்ணீரைக் கீழே கொட்டினார்கள். இந்தக் கும்பல் நடத்திய அராஜகத்தின் முடிவு, அப்பாவி இளைஞரின் பலி!

மது கொல்லப்பட்ட வழக்கில், அவரைக் கைகட்டிய நிலையில் செல்ஃபி எடுத்தவர் முக்காலியைச் சேர்ந்த உபைத் உம்மர் என்பது தெரியவந்துள்ளது. மதுவை அடிக்கும் வீடியோவை இணையத்தில் பரப்பியவரும் இவர்தான்... இந்தக் காட்சிகளைப் பார்த்து மக்கள் கொந்தளித்ததும் அதை அழிக்க முயன்றிருக்கிறார். அதற்குள் ஆயிரக்கணக்கானோர் ஷேர் செய்திருந்ததால், அவரால் அழிக்க முடியவில்லை.

மதுவின் உடல் சுமார் 3 மணி நேரம் உடற்கூறு ஆய்வு நடந்தது. அவரின் உடல் முழுவதும் காயம் இருந்துள்ளது. தலையிலும் பலத்த காயம் காணப்பட்டுள்ளது. மார்புக்கூடு இரண்டாக உடைந்துள்ளது. மதுவின் உள்ளுறுப்புகள் தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த அறிக்கை வந்தபின், மேலும் சில உண்மைகள் தெரியவரலாம்.

மதுவின் உடற்கூறு ஆய்வறிக்கை முழுவதுமாக வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கையின்படி, அவரின் வயிற்றில் ஒரு பருக்கை சோறுகூட இல்லை என்று தெரியவந்துள்ளது. சில காட்டுப்பழங்களும் வாழைப்பழத்துண்டு ஒன்றே ஒன்று மட்டுமே அவரின் வயிற்றுக்குள் இருந்துள்ளது. பல நாட்கள் பட்டினியாகக் கிடந்துள்ளதால், அவரின் எலும்புகளும் தசைகளும் மிகவும் பலவீனமான நிலையில் இருந்துள்ளன. வியாழக்கிழமை மது அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். வெள்ளிக்கிழமை திருச்சூர் மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டது. சனிக்கிழமை அவரின் உடல் உடற்கூறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

ரூ.200 மதிப்புள்ள அரிசி திருடியதற்காக மதுவை அந்தக் கும்பல் காட்டுக்குள் சென்று பிடித்தது. அப்போது, அவர் சமையல் செய்துகொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த அரிசி உணவை சமைத்து மது உண்டிருந்தால்கூட அவரின் வயிற்றில் ஒரு பருக்கை சோறாவது எஞ்சியிருந்திருக்கும். கடைசி வரை காய்ந்த வயிற்றுடன் அவர் உயிரை விட்டதுதான் வேதனையிலும் வேதனை!

# சூரியன் இல்லாத பூமி எப்படியிருக்கும்

தினமும் காலையில் எழுந்ததும் என்ன செய்வீர்கள்? கண்களைத் தேய்த்தபடியே வெளியே சென்று வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு உள்ளே வந்து நமது வேலையைத் தொடங்குவோம்.

இருட்டிலே இருந்து விட்டு வெளிச்சத்தைப் பார்ப்பது நமக்கு ஒருவித புத்துணர்ச்சியை அளிக்கும். தினமும் அந்த வெளிச்சத்தைத் தரக்கூடியது சூரியன். திடீரென சூரியன் காணாமல் போய் விட்டால் என்ன நடக்கும்? வெளிச்சம் இருக்காது? அவ்வளவு தானே என்றுதான் உடனே தோன்றும். கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

சூரியன் திடீரென காணாமல் போனாலும் நீங்கள் கவலைப் படத் தேவை இல்லை, முதல் எட்டரை நிமிடங்களுக்கு. ஏனெனில் ஒளி சூரியனிலிருந்து பூமியை வந்தடைய எட்டரை நிமிடங்கள் ஆகும்.



சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களையும் தன்னுடைய புவியீர்ப்பு விசையினால் தன் வசம் வைத்திருக்கிறது சூரியன். புவியீர்ப்பு விசையும் ஒளியின் வேகத்திலேயே (ஒளியை விட வேறு எதுவும் வேகமாகப் பயணிக்க முடியாது. எனவே, அதைவிடச் சிறிது குறைவாய் வைத்துக் கொள்வோம்) பயணிக்கக் கூடியது என்பதால் அதுவும் பூமியை வந்தடைய எட்டரை நிமிடங்கள் ஆகும்.

எனவே, முதல் எட்டரை நிமிடங்கள் நீங்கள் சூரியனைப் பார்க்க முடியும் வழக்கம்போல. அதன் பின்னர்தான் கொஞ்சம் கொஞ்சமாகக் குழப்பங்கள் அதிகரிக்கத் தொடங்கும்.

சட்டென பூமியை இருள் சூழ்ந்து கொள்ளும். ஏற்கனவே உங்களுக்கு இரவாக இருந்தால் நிலவின் தோற்றம் மறைந்து விடும். நிலவின் தோற்றம் மட்டுமல்ல் சூரியனின் ஒளியை பிரதிபலிக் கக்கூடிய ஏனைய கோள்கள், சூரியக் குடும்பத்தில் உள்ள எந்த ஒரு பொருளும் கண்ணுக்குத் தெரியாது.

புவியீர்ப்பு விசை இழப்பினால் கோள்கள்தான் சென்று கொண்டிருக்கும் பாதையிலேயே இவ்வண்டத்தில் நேர்கோட்டில் நொடிக்கு பதினெட்டு மைல் வேகத்தில் பயணிக்கத் தொடங்கும். ஒருவேளை இரு கோள்கள் அருகருகே வந்து ஒன்று மற்றொன்றின் ஈர்ப்பு விசையினால் ஈர்க்கப்பட்டு மோதிக் கொள்ளலாம். இல்லையெனில் நேர்கோட்டில் அதன் பயணத்தை மேற்கொள்ளலாம்.

சூரியனின் முக்கிய அம்சமே உஷ்ணம்தான். பூமியின் வெப்பநிலை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து உறையத் தொடங்கும். பூமி முழுவதுமாக உறைய பல மில்லியன் வருடங்கள் ஆகலாம். ஆனால், பூமியின் மேற்பரப்பில் முதல் ஒரு வாரத்திலேயே 0 பாகை செல்சியஸ்க்கும் கீழே சென்றுவிடும். ஒரு வருடத்தில் மைனஸ் நூறு பாகை செல்சியஸ்க்குச் சென்றுவிடும்.


ஆனால், பூமியின் உட்கருவில் உள்ள உஷ்ணம் காரணமாக சில மில்லியன் வருடங்களுக்கு மைனஸ் இருநூற்று நாற்பது பாகை செல்சியஸிலேயே நிலை கொண்டிருக்கும். கடும் குளிர் காரணமாக வளிமண்டலத்தில் இருக்கும் வாயுக்களும் உறைந்து திடமாகி பூமியில் விழக்கூடும்.

ஒளி இருந்தால்தானே ஒளிச்சேர்க்கை (photosynhesis) நடைபெறும்? ஒளிச்சேர்க்கை நடைபெற்றால்தான் தாவரங்கள் உயிர்வாழ முடியும். பூமியில் உள்ள 90 சதவிகித தாவரங்கள் சில மணித்துளிகளில் இறந்துவிடும்.

அண்டத்திலுள்ள காஸ்மிக் கதிர்கள் நேரடியாக வந்து பூமியைத் தாக்கும். எனவே, மனிதர்களுக்கும் பிற விலங்குகளுக்கும் பலவகையான பாதிப்புகள் ஏற்படக்கூடும். பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கான எந்த அடிப்படை ஆதாரங்களும் இருக்காது.

இவை எல்லாம் நடந்தபின் பூமியும் இவ்வண்டத்தில் இலக்கின்றி சுற்றித் திரியும் ஒரு பாறை மட்டுமே. இவ்வளவையும் சிந்தித்தால் உங்கள் மனம் என்னாவது அதனால்தான் வேண்டாமென்றேன். ஆனால், கவலைப்படத் தேவை இல்லை இவை எதுவும் இன்னும் பல பில்லியன் ஆண்டுகளுக்கு நடக்காது. தைரிமாய் இருங்கள்.

அண்ணார்ந்து பாருங்கள் சூரியன் இருக்கிறது.



# மனிதம் மரித்துப்போன சிரியாவிலிருந்து
# ஒரு தாயின் கதறல்

சிரியாவைப் பற்றி நாள்தோறும் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. நாள்தோறுமா என யோசிக்க ஆரம்பித்தால்.. சில மாதங்களாக என்று தோன்றுகிறது. ஏன் சில ஆண்டுகள் என்று கூட சொல்லலாம். ஒவ்வொரு முறையும் #SaveSyria, #Save Humanity ஹேஷ்டேக்குகள் இணையத்தில் வலம் வருகின்றன.

நீங்கள் படிக்கப்போவது ஒன்றும் அவ்வளவு மோசமானது அல்ல, ரணமானது அல்ல, கனத்த இதயத்தைக் கொண்டோர் மட்டுமே படிக்க வேண்டியது அல்ல. காரணம் சிரியாவில் நடைபெற்றுக்கொண்டிருப்பதென்பது நம்மால் கற்பனை கூட செய்ய முடியாத அளவுக்கான பெருஞ்சோகம். அவர்களைக் காக்க அரசு இல்லை என்கிறீர்களா?. அதை நிகழ்த்துவதே அரசுதான். இன்று நிம்மதியாய் இறந்துவிடுவேனா என்கிற ஊர்ஜிதமில்லாத வாழ்வு. வாழ்வதென்பது உலகெங்கும் கொடுமைதான். அதனினும் கொடுமை, நிச்சயமற்ற வாழ்வு. அதுதான் சிரியாவில் ஒவ்வொரு நொடியும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு நிமிடமும், குரூரமாக ஓர் உயிர் பறிபோகின்றது. அப்படி இந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்துவிட்டன. எந்த இறைவனும் அவர்களை காக்க முன்வருவதில்லை. இறைவன் ஒருவன் இருந்தால், அவர்கள் வேண்டுவது எல்லாம் ஒரு ஷணத்தில் நிகழும் நிம்மதியான மரணம் மட்டுமே. இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிமிடம் கூட அங்கு கொலைகள் நிகழ்த்தப்பட்டு கொண்டிருக்கலாம்.

"என் குழந்தையின் மரணத்துக்காகக் காத்திருக்கிறேன் அப்படி அவன் இறந்துவிட்டால் இந்த வலிகளிலிருந்து தப்பித்துக்கொள்வான். பசி என அழுதுகொண்டிருந்த அவனுக்குச் சமைத்துக்கொண்டிருந்தேன். சமையல் முடிவதற்குள் இப்படிக் காயம்பட்டுக்கிடக்கிறான். அவன் சீக்கிரம் சாகட்டும். செத்தால் நிச்சயம் சொர்க்கத்துக்குத்தான் செல்வான். அங்கே அவனுக்கு நல்ல உணவு கிடைக்கும்" என்று குத்துயிரும் கொலையுயிருமாகக் கிடக்கும் மகனைப் பார்த்து அழுகிறாள் தாயொருத்தி. அந்தக் குழந்தையின் நிலையைப் பார்த்து, "காயம்பட்டுள்ள இவனுக்கு என்ன சிகிச்சை அளிப்பது என்றே தெரியவில்லை" என மருத்துவர் ஆற்றாமையில் புலம்புகிறார்.

குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்ட வீடுகளும், புகை மூட்டத்துக்கு நடுவே அழுதுகொண்டே நடந்தவற்றை விபரிக்கும் குழந்தைகளும் என சிரியாவிலிருந்து வெளியிடப்படும் வீடியோக்கள் அங்கு மனிதர்களால் நடத்தப்பட்ட பேரழிவினைக் காட்டுகின்றன. இதைச் செய்வது மனிதர்கள் தானா என்ற கேள்வியும் ஒவ்வொரு முறையும் எழுகிறது. ஒரு குழந்தை குண்டுவெடிப்பு நிகழும் போது, உயிரினைப் பாதுகாத்துக்கொள்ள, வீட்டுக்கு அடியில்போய் எப்படி அமர்ந்துகொள்வேன் என்று தன் அழுகைக்கு நடுவே விபரிக்கிறது. நம் நாட்டில், வீதியில் செல்லும்போது வாகனம் எதிரே வந்தால், இந்தப் பக்கம் கையினைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று குழந்தைக்குச் சொல்லிக்கொடுப்பது போல, குண்டு வீசப்பட்டால், இப்படி ஒளிந்துகொள்ள வேண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டால் இப்படி ஓட வேண்டும் என்று சிரியாவில் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

சிரியாவின் கௌட்டா பகுதியில், சிரிய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து பொழிந்துவரும் குண்டு மழையினால் கொல்லப்பட்ட 500 பேரில் 121 பேர் குழந்தைகள் எனச் சுட்டுகிறது செய்தி நாளேடுகள். அதன் வீடியோதான் தற்போது வைரலாகி வருகிறது. 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில், ஓர் அறை முழுக்க, உடலில் எந்தக் காயமும் இல்லாத குழந்தைகள் இறந்துகிடக்கும் வீடியோ ஒன்று வைரலானது. இரசாயன குண்டு வீசப்பட்டதுதான் அந்தக் குழந்தைகளின் இறப்புக்கான காரணம்.

"கிட்டத்தட்ட 2011 ஆம் தொடங்கி இன்றுவரை தொடரும் சிரியப் போரில் 14,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். போர் தொடங்கியது முதல், இரண்டு வருடங்களுக்கு கொல்லப்பட்டவர்களில் 9 சதவிகிதமாகயிருந்த குழந்தைகளின் எண்ணிக்கை, 2013 இற்குப் பிறகு, கொல்லப்பட்டவர்களில் நான்கில் ஒருவர், ஒரு குழந்தை என்கிற மோசமான எண்ணிக்கைக்கு உயர்ந்துள்ளது" என்கிறது ஒரு புள்ளிவிபரம்.

> "என் குழந்தையின் மரணத்துக்காகக் காத்திருக்கிறேன் அப்படி அவன் இறந்துவிட்டால் இந்த வலிகளிலிருந்து தப்பித்துக்கொள்வான். பசி என அழுதுகொண்டிருந்த அவனுக்குச் சமைத்துக்கொண்டிருந்தேன். சமையல் முடிவதற்குள் இப்படிக் காயம்பட்டுக்கிடக்கிறான். அவன் சீக்கிரம் சாகட்டும். செத்தால் நிச்சயம் சொர்க்கத்துக்குத்தான் செல்வான். அங்கே அவனுக்கு நல்ல உணவு கிடைக்கும்"

கடந்த பல வருடங்களாக மிகத் தீவிரமாக சிரியா உள்ளிட்ட மத்தியக் கிழக்கு நாடுகளில் மாற்றி மாற்றி வீசப்பட்ட குண்டுகளில் கொல்லப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தாண்டும். அந்தக் குண்டுகளில் இரசாயனக் குண்டுகளும் அடக்கம். ஆனால், இதற்கு காரணம் சிரியா மட்டும்தானா?

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை ஒழிக்க அமெரிக்கா ஏவிய குண்டுகள் 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் வீசிய குண்டுகளின் எண்ணிக்கை முறையே 30,743 மற்றும் 32,801 என்கிறது ஒரு புள்ளிவிபரம். கடந்த வருடம் சிரியாவில் தனது 400 தளபாடங்களை இறக்குவதற்கான அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்கா ஏன் இத்தனை குண்டுகளை வீச வேண்டும் என்பதையும் அவற்றில் கொல்லப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் தெரிந்துகொள்ள முதலில், மத்திய கிழக்கில் நடைபெறும் போரின் அடிப்படைப் பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். சிரியா மட்டுமல்ல மொத்த மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் சண்டையுமே இடியப்பச் சிக்கல்.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த அஸ்ஸாதிற்கு எதிராக திரண்ட மக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது, அஸ்ஸாதின் படை. அஸ்ஸாதின் ஆயுதத்தை கையில் எடுத்தது ஒரு குழு. இந்தக் குழுவினை கல்ஃப் நாடுகளும், இன்னும் பல குழுக்களும் ஆதரிக்க, அல்-கொய்தாவும் சிரியாவில் ஒரு கிளையினை ஏற்படுத்தியது. ஈரான் ஒரு புறம் அஸ்ஸாதினை ஆதரிக்க, ஈரானைப் பிடிக்காத கல்ஃப் நாடுகள், ஈரானின் செல்வாக்கினை தடுப்பதற்காக, துருக்கி வழியாக கிளர்ச்சியாளர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், பணத்தையும் வழங்கத் தொடங்கியது.

ஈரான், லெபனானைச் (வடக்கில் சிரியாவையும், தெற்கில் இஸ்ரேலையும் கொண்ட நாடு) சேர்ந்த ஒரு கிளர்ச்சிக் குழுவை சிரியாவின் அஸ்ஸாதை ஆதரிக்க அனுப்பியது. இதனால், கோபமடைந்த கல்ஃப் நாடுகளின் சவுதி அரேபியா நேரடியாக ஜோர்தானின் மூலம், கிளர்ச்சியாளர்கள் குழுவை இன்னும் அதிக பணம் மற்றும் ஆயுதங்களைக் கொடுத்து ஆதரிக்கத் தொடங்கியது.

இவை ஒருபுறமிருக்க சிரிய அரசு மற்றும் அதனை ஆதரிக்கும் ரஷ்யா, மற்றொரு புறம் சிரியாவை எதிர்க்கும் அமெரிக்கா, அமெரிக்காவினால் ஆதரிக்கப்படும் கிளர்ச்சியாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள், முன்னாள் அல்லது தற்போதும் கூட மறைமுகமாக அமெரிக்காவால் ஆதரிக்கப்படுவதாகச் சொல்லப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ் . அமைப்பு, இவர்கள் எல்லோரையும் எதிர்க்கும் குர்திஸ் போராளிகள் என்று இது ஒரு பெரிய சண்டை.

ஆனாலும், ஊடகங்கள் பெரும்பாலும் அமெரிக்காவின் கைகளில் இருப்பதால், அமெரிக்கா வீசிய குண்டுகளினால் இறந்த, பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் பெரும்பாலும் வெளியிடப்படாது. அதே நேரத்தில், சிரிய அரசு போடும் குண்டுகளை வைத்து, உலகம் முழுக்க சிரிய அரசினை மட்டுமே காரணம் காட்டி, பட்சாதாபத்தை ஏற்படுத்தி, தான் தப்பிக்க நினைக்கிறது அமெரிக்கா. இங்கு நிச்சயமாக சிரிய அரசினை யாரும் ஆதரிக்கவில்லை. ஆனால், அந்தக் குழந்தைகளின் குருதிக்கறை அமெரிக்காவின் கைகளிலும் படிந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிரியாவின் கௌடா பகுதியில் ஐந்து மணிநேரம் எந்தக் குண்டுகளும் வீசப்படாது என்று ரஷ்யாவின் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். வெறும் ஐந்து மணிநேரம் நீங்கள் உயிர் பயத்திலிருக்கத் தேவையில்லை என்று 'கொடை'யினை வாரி வழங்கியிருக்கிறார்கள். எவ்வளவு கருணை?!

ஈழத்தில் இனப்படுகொலை நடந்தபோது, இலங்கையை ரஷ்யாவும், அமெரிக்காவும் ஆதரித்தது என்பது இங்கு நாம் நினைவு கூறவேண்டியது. அதாவது, வல்லரசுகளுக்கு நடுவே நடக்கும் வளங்கள் மற்றும் ஆதிக்கத்திற்கான போட்டிகளுக்காகத்தான் உலகம் முழுக்க அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். இனப்படுகொலையை, அதுவும் அடிப்படைத் தொடர்புள்ள ஓர் இனம் அழிக்கப்படுவதை அருகிலிருந்து பார்க்கும் சாபம் பெற்றவர்களாகிய நமக்கு உலகில் எங்கு மக்கள் கொல்லப்பட்டாலும், கனெக்ட் ஆகி மனம் வருந்துவது இயல்புதான். ஆனால், அந்த மக்கள் யாராலும் கொல்லப்படக் கூடாது. அந்த மக்களின் நிலம் அதன் வளமும் அந்த மக்களுக்கே சொந்தம். ரஷ்யாவும் அமெரிக்காவும் ஏன் சிரியாவுமே கூட அதனை சொந்தம் கொண்டாடக் கூடாது' என்பதே நமது கோரிக்கையாக இருக்க வேண்டும்.

சிரியா கிட்டத்தட்ட ஒரு தலைமுறை குழந்தைகளை குண்டுகளுக்கும், போரினால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கும் பலி கொடுத்திருக்கிறது. அந்தக் குழந்தைகளுக்கு ஓர் இயல்பான 'குழந்தைப் பருவம்' என்றால் என்ன என்றே தெரியாமல், அந்தச் சூழலிலேயே வளர்ந்திருக்கிறார்கள். இந்தப் போரினில் தப்பித்து அகதியாகப் பயணப்படும் குழந்தைகள் அனுவிக்கும் சமூக, மன அளவிலான பிரச்சினைகள் என்பது தனிக்கதை.

தற்போது வரை மொத்தப் நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதி உருக்குலைந்திருக்கும் சிரியாவினை மீட்டுருவாக்கம் செய்ய 180 பில்லியன் செலவாகும் என்று கணக்குச் சொல்கிறது உலக வங்கி. போரினால் உயிரிழந்திருக்கும், தன்னுடைய மொத்தக் குழந்தைப் பருவத்தையும், பால்யத்தையும் இழந்திருக்கும் குழந்தைகள், அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தங்கை என்று சொந்தங்களை இழந்திருக்கு குடும்பங்களை எப்படி மீட்டுருவாக்கம் செய்ய முடியும்?

■ ஜூனியர் விகடன்

# தேர்தல் தந்த பாடம்

**"நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதை நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஏற்றுக் கொண்டுள்ளார். சில உள்ளூராட்சி சபைகளில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளதானது,"**

ஆங்கிலத்தில் : **Arthur Wamanan**
வழிமூலம் : **Ceylon today**
மொழியாக்கம்: நித்தியபாரதி



பெப்ரவரி 10 அன்று நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறானது தேசிய அரசாங்கத்தின் நிலை என்ன என்பது தொடர்பாக முழு நாட்டிற்கும் குழப்பத்தை ஏற்படுத்திய அதேவேளையில், வடக்கிலுள்ள தமிழ் அரசியல் வட்டாரங்களும் இத்தேர்தல் பெறுபேறு தொடர்பாக ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிட்ட தென்னிலங்கையின் முக்கிய இரு கட்சிகளும் மட்டுமல்லாது வடக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்பாராத அளவிற்கு பின்னடைவைச் சந்தித்துள்ளது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடமாகாணத்திலுள்ள 56 உள்ளூராட்சி சபைகளில் 40 சபைகளில் வெற்றி பெற்றுள்ளது.

ஆனால், யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகர சபை உட்பட பல்வேறு முக்கிய உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தோல்வியடைந்துள்ளது. அத்துடன் சில உள்ளூராட்சி சபைகளில் கூட்டமைப்பு வெற்றி பெற்ற போதிலும் உள்ளூராட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்குத் தேவையான பெரும்பான்மைப் பலத்தை பெற்றிருக்கவில்லை.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதை நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் ஏற்றுக்கொண்டுள்ளார். சில உள்ளூராட்சி சபைகளில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளதானது, இதுவரை காலமும் வடமாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருந்த செல்வாக்கு அச்சுறுத்தலைச் சந்தித்துள்ளது என்பதை நோக்க முடியும்.

போர் முடிவுற்ற பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாகக் கருதப்படுகிறது. நீண்ட காலமாக, இக்கூட்டமைப்பானது அதிக ஆசனங்களைத் தக்கவைத்திருக்கும் சிறுபான்மைக் கட்சியாகக் காணப்படுகிறது.

30 ஆண்டுகளாக, தேசிய அரசியலானது இனப்பிரச்சினை மற்றும் உள்நாட்டு யுத்தம் போன்றவற்றில் அதிக கவனத்தைக் குவித்திருந்தது. தமிழ் அரசியல் சக்திகள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மற்றும் புலிகளுக்கு எதிரான என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தன.

தமிழர் தரப்பிடமிருந்து சமரசங்களை எட்டுவதற்கான ஒவ்வொரு நகர்வுகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலையிட்டனர். இதனால் புலிகள் அமைப்பே தமிழ் மக்கள் தொடர்பான தீர்மானத்தை எட்டுவதில் அதிகாரத்தைக் கொண்டிருந்தன. மக்களின் கவனமும் கூட தேசிய பிரச்சினைக்கான தீர்வையே மையப்படுத்தியது. இப்பிரச்சினை தொடர்பாகவும் அரசியல் தொடர்பாகவும் தமிழ் அரசியல்வாதிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே தமிழ்மக்கள் தமக்கான தலைவர்களைத் தெரிவு செய்தனர்.

தேசிய பிரச்சினையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டே தமிழ் மக்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்தனர். தமிழ் மக்கள் தேர்தல்களில் வாக்களிக்கும் போது தமக்கான நாளாந்த வாழ்வை மற்றும் அக்காலத்திற்கான தமது தேவைகளையோ கருத்திற் கொள்ளவில்லை. போருக்குப் பின்னர் இந்த மக்களின் தேவைகளும் விருப்பங்களும் மாற்றமுற்றன.

போர் முடிவடைந்தாலும் கூட இந்த யுத்தம் பாரிய அழிவை ஏற்படுத்தியிருந்தது. வடக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் இறுதிக்கட்ட யுத்தத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து பல மாதங்களாக மன்னார் மற்றும் வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக முகாம்களில் வாழ்ந்தனர்.

அவர்கள் தமது உடைமைகளை தமது சொந்த இடங்களில் விட்டுவிட்டு தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடவேண்டிய நிலையேற்பட்டது. இறுதிக்கட்ட யுத்தத்தில் பலர் காணாமற் போனார்கள். தமது அன்புக்குரியவர்கள் இன்றும் உயிருடன் வாழ்வதாக காணாமற் போனவர்களின் உறவுகள் நம்புவதுடன் அவர்களைத் தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

தற்காலிக முகாம்களில் வாழ்ந்த இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் சில மாதங்களின் பின்னர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்ற போதிலும் கூட, இவர்கள் பழைய வாழ்வை வாழமுடிய வில்லை. பல குடும்பங்கள் யுத்தத்தால் சிதறுண்டுள்ளனர். பல பெண்கள் தமது குடும்பங்களைத் தலைமை தாங்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. குறிப்பாக தமது கணவன்மார் போரில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமற்போன மற்றும் ஊனமுற்றவர்களின் மனைவிமார்கள் தமது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

வேறு விதமாகக் கூறினால், போர் முடிவடைவதற்கு முன்னர் அரசியற் தீர்வுகள் தொடர்பாக கவனம் செலுத்திய மக்கள், போர் முடிவடைந்த பின்னர் தற்போது தமது அடிப்படைத் தேவைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர்.

நாளைக்கு எதை உண்பது எனவும், தமது பிள்ளைகளுக்கான புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை எவ்வாறு வாங்குவது என்பதிலும் படுக்கையில் கிடக்கும் தமது அன்புக்குரியவர்களுக்குத் தேவையான மருந்தை எவ்வாறு வாங்குவது என்பது தொடர்பாகவும் தமிழ் மக்கள் கவலை கொள்கின்றனர்.

போரின் பல்வேறு கட்டங்களிலும் காணாமற்போன தமது உறவுகளை பலர் இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றனர். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபடுகின்ற அதேவேளையில், மக்களின் தேவைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதை விட அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக அரசாங்கம் கூடிய அக்கறை செலுத்துவதாக வடக்கிலுள்ள மக்கள் கருதுகின்றனர்.

மறுபுறத்தே, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் ஆகியோருக்கு இடையில் நிலவும் பனிப்போரும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான உணர்வலைகளை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகிறது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் ஆசிர்வாதத்துடன் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தியடைந்தது. இதனால் இவ்விரு தரப்பிற்கும் இடையில் விரிசல் ஏற்படத் தொடங்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முன்னர் அங்கம் வகித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரசிற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமை தொடர்பில் அதிருப்தியடைந்த வடக்கில் வாழும் இளைஞர்களின் ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது.

2015இல் இடம்பெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை கூட்டமைப்பின் மீது காண்பிக்காவிட்டாலும் கூட, அதற்குப் பின்னரான கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ் மக்கள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

ஆவா போன்ற குழுக்களின் எழுச்சி வடமாகாணத்தில் பாரியதொரு பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக யாழ் குடாநாட்டில் ஆவா குழுவினர் தமது குற்றச் செயல்களை பெருமளவில் மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் குழுக்கள் அரசியல் ரீதியாக தூண்டப்படாவிட்டாலும் கூட, இவர்கள் பொலிஸாரின் மீது தாக்குதலை மேற்கொள்வதுடன், மக்களை அச்சுறுத்துவதுடன் திருட்டுச் சம்பவங்களிலும் ஈடுபடுகின்றனர். மேலும், தமிழ் இளைஞர்கள் பலரும் போதைப் பொருட்கள் மற்றும் மது போன்றவற்றைப் பாவிப்பதன் காரணமாக சமூகப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிர கவனம் செலுத்தாமையே தற்போது இவ்வாறான குற்றச் செயல்கள் கைமீறிப் போனமைக்கான பிரதான காரணமாக உள்ளது.

இலங்கை அரசாங்கம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மென்போக்கை கடைப்பிடிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும், சில முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் காலம் தாழ்த்துகின்ற போதிலும், தம்மால் முன்வைக்கப்பட்ட வேறு பல கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாக கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதிக்கப்பட்ட குடும்பங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்துள்ளார். மேலும், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுக்குச் சொந்தமான சில ஏக்கர் நிலப்பரப்பானது கடந்த இரண்டரை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தால் மீண்டும் நில உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் போன்ற முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இலங்கை அரசாங்கம் அக்கறை காண்பிக்கவில்லை என்கின்ற குற்றச்சாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

எனினும், இவ்வாறான விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக வேகமாகக் கருத்திற் கொள்வதுடன் இதற்கேற்ப தனது நிலைப்பாட்டை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.



# நெய்மர் காயத்தினால் அவதி சம்பியன்ஸ் லீக்கில் விளையாடுவாரா?



பட்ட காலிலே படும் என்பது நெய்மருக்குப் பக்காவாகப் பொருந்தும். கடந்த ஞாயிற்றுக் கிழமை Ligue 1 தொடரில் மார்சிலிக்கு எதிரான போட்டியின் போது நெய்மர் காயமடைந்தார். அனல் பறக்கும் ஆட்டம் இல்லை. ஆக்ரோஷமான டேக்கிள் இல்லை, ஆனாலும் அவர் கீழே விழுந்தார். வலது காலின் முன்பாதப் பகுதியை எசகுபிசகாக தரையில் ஊன்றி விட, வலியால் துடித்தார். களத்துக்குள் பிசியோ வந்தார். பெயின் கில்லர் பயனளிக்கவில்லை. ஸ்ட்ரெச்சர் வந்தது. நிலைமை சீரியஸ். ஆம், நெய்மரின் முன்பாதத்தில் எலும்பு முறிவு (Metatarsal fracture), போதாக் குறைக்குக் கணுக்காலில் தசைப் பிடிப்பு.

களத்திலிருந்து நெய்மர் ஸ்ட்ரெச்சரில் சென்றபோது யாரும் இவ்வளவு சீரியஸ் என்று நினைக்கவில்லை. அடுத்தடுத்து வந்த தகவல்கள் பயமுறுத்துகின்றன. மான்செஸ்டர் சிட்டிக்காக விளையாடிய பிரேசில் வீரர் கேப் ரியல் ஜீசஸ், கடந்த ஆண்டு ஜுலையில் Metatarsal fracture-இல் பாதிக்கப்பட்டார். காயம் குணமடைய இரண்டு மாதங்களானது மட்டுமல்ல, அதன் பின் அடுத்தடுத்து அவர் காயத்தால் அவதிப்பட்டார். இங்கிலாந்தின் டேவிட் பெக்காம், வெய்ன் ரூனி இருவரும் இந்தக் காயத்தில் சிக்கினர். ஆறு வாரங்கள் அவர்கள் கால்பந்தைத் தொடமுடியவில்லை. காயம் குணமடைந்ததும் பெக்காம் (2002), வெய்ன் ரூனி (2006) இருவரும் அவசர அவசரமாக உலகக்கோப் பைக்குத் திரும்பினர். கிட்டத்தட்ட நெய்மரின் நிலைமையும் அதுவே.

எப்படிப் பார்த்தாலும் உலகக் கோப்பைக்கு இன்னும் முழுமையாக மூன்று மாதங்கள் இருக்கின்றன. நெய்மர் அதற்குள் பரிபூரணமாக குணமடைந்துவிடுவார் என நம்புகின்றனர் பிரேசில் ரசிகர்கள். ஆனால், அவர் விளையாடும் பி.எஸ்.ஜி.கிளப்ரசிகர்கள், மார்ச் 6 ஆம் திகதி பாரிஸில் உள்ள பார்க் டெஸ் பிரின்சஸ் மைதானத்தில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் லீக் ரவுண்ட் ஆஃப் 16 செக்கண்ட் லெக் ஆட்டத்தில், ரியல் மாட்ரிட்டை எதிர்த்து நெய்மர் களமிறங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இவ்வளவு ஏன்..." எதிரணியில் நெய்மர் இருந்தால் நன்றாக இருக்கும்' என்பது ரியல் மாட்ரிட் பயிற்சியாளர் ஜினாடின் ஜிடான் கருத்து.

சான்டியாகோ? பெர்னபுவில் நடந்த முதல் லெக் ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் 3-1 என வென்று விட்டது. பி.எஸ்.ஜியின் சொந்த மண்ணில் நடக்கும் ரிட்டர்ன் லெக் ஆட்டத்தில் நெய்மர் இருந்தால்தான் கதைக்காகும் என்பது பி.எஸ்.ஜி ரசிகர்கள் எதிர்பார்ப்பு. நெய்மர் போன்ற ஒரு நட்சத்திர வீரர் இல்லாமல், நடப்புச் சம்பியன் ரியல் மாட்ரிட்டை வீழ்த்துவது அவ்வளவு எளிதல்ல. பார்சிலோனாவிடமிருந்து ரூ.1,800 கோடி கொடுத்து நெய்மரை வாங்கியி ருக்கிறது பி.எஸ்.ஜி. அவ்வளவு விலை கொடுத் தும் சம்பியன்ஸ் லீக் தொடரின் முக்கியமான கட்டத்தில், அணியின் முக்கிய வீரர் ஆடாமல் இருப்பதை பி.எஸ்.ஜி. நிர்வாகம் விரும்பவில்லை.

நெய்மர் 100 சதவிகிதம் ஒத்துழைக்க முடியா விட்டாலும் பரவாயில்லை, முடிந்தளவு களத்தில் ஒத்துழைத்தால் போதும், இரண்டாவது லெக்கில் வென்று, காலிறுதிக்கு முன்னேறி விடலாம் என்பது பி.எஸ். ஜியின் கணக்கு. ஏனெனில், சம்பியன்ஸ்லீக்வரலாற்றில்பிஎஸ்ஜிஇதுவரை/இறுதிப் போட்டிக்கு முன்னேறியதில்லை.

நெய்மர் எத்தனை சீசன்கள் பி.எஸ்.ஜியில் இருப்பார் எனத் தெரியாது. எனவே, அவர் இருக்கும் போதே முடிந்தவரை சம்பியன்ஸ் லீக்கில் முத்திரை பதிக்க வேண்டும் என்பது அந்த கிளப் விருப்பம். Ligue 1 ரைட்டில் அடிப்பது அவர்களுக்கு ஒரு விடயமே அல்ல. இப்போதே 16 புள்ளிகள் வித்தியாசத்தில் பி.எஸ்.ஜி. முதலிடத்தில்தான் இருக்கிறது. அதனால் அவர்கள் இலக்கு எல்லாம் சம்பியன்ஸ் லீக் மீதே!

இன்னும் காயத்தின் வீரியம் குறித்தோ, குணமாகும் காலம் குறித்தோ மருத்துவத் தரப்பில் அதிகாரபூர்வமான அறிவிப்பு வரவில்லை. எப்படியும் காயம் குணமடைய ஆறு வாரங்கள் வரை ஆகலாம்' என நெய்மரின் தந்தை தெரிவித்துள்ளார். முன் பாதத்தில் ஏற்பட்ட இந்த எலும்பு முறிவுக்குப் பெரிதாக சர்ஜரி ஏதும் தேவையில்லை என மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தாலும், ஆறு வாரங்கள் முழுமையாக அவர் ஓய்வெடுக்க வேண்டியது அவசியம்.

நெய்மரின் காயத்தை பி.எஸ்.ஜி. மட்டு மல்ல, ஒட்டுமொத்த பிரேசிலும் உன்னிப் பாகக் கவனித்து வருகிறது. அவசர அவசரமாக களத்துக்குத் திரும்பி மீண்டும் காயமடைந்து விட்டால் என்ன செய்ய என்ற அச்சமும் பிரேசில் ரசிகர்களுக்கு இருக்கிறது. காரணம், உலகக் கோப்பை. சம்பியன்ஸ் லீக்கை விட உலகக் கோப்பை பெரிது. ரஷ்யாவில் ஜுன் மாதம் நடக்கவுள்ள உலகக் கோப்பைக்கு பிரேசில் நெய்மரை பெரிதும் நம்பியிருக்கிறது.

பிரேசிலில் 2014 இல் நடந்த உலகக் கோப்பையிலும் நெய்மர்தான் பிரேசிலின் ஆபத்பாந்தவன். கொலம்பியாவுக்கு எதிரான காலிறுதியில் முதுகுத்தண்டில் அடிபட்டு, நெய்மர் ஸ்ட்ரெச்சரில் சென்றபோது பிரேசில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த கால்பந்து உலகமும் கலங்கியது. நெய்மர் இல்லாத பிரேசில் அணி அரையிறுதியில், ஜேர்மனியிடம் செமத்தியாக வாங்கியது. உலகக் கோப்பை வரலாற்றிலேயே மோசமான தோல்வி அது. இந்தமுறை அப்படி எதுவும் நடந்துவிடக் கூடாது என்பது பிரேசிலியர்கள் விருப்பம். ஆனால், பி.எஸ்.ஜியின் கணக்கு வேறு!

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : நீர்க்குமிழி
இசை : வி.குமார்
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்
வரிகள்: "உவமைக் கவிஞர்" சுரதா



ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா
கண் மூடினால் காலில்லா கட்டிலடா
பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை
தொகுப்பார் சிலரதை சுவைப்பதில்லை
தொடங்குவார் சிலரதை முடிப்பதில்லை

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா...

# புதிதாய் சிந்திப்போம்
# இளநீர் கோம்பைக்குள் மரம் வளர்ப்போம்

தமிழ்நாடு திருவாரூரில் உள்ள கலைமணி என்ற இளைஞர் திருவாரூர் சுற்றிலும் உள்ள பள்ளிக்கூடம், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் மரக் கன்றுகளை நட்டு வருகிறார். நடுவது மட்டுமல்லாமல் அதனைத் தொடர்ந்து பராமரித்தும் வருகிறார்.

இவர் இதுவரை 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியிருக்கிறார். இதற்காக மரக் கன்றுகளை உற்பத்தி செய்ய பொலித்தீன் பைகளை இதுவரை பயன்படுத்தி வந்தார். இப்போது அதற்கு மாற்றாகத் தேங்காய் இளநீர் குடுவையைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

இது பற்றி அவர் கூறும்போது,

"பிளாஸ்ரிக் தவிர்ப்பது இன்றைய சூழ்நிலையில் அவசியமான ஒன்றாக இருக்கு. அந்த வகையிலதான் இந்த முயற்சியும். நர்சரி கார்டன்ல அதிகமாக பொலித்தீன் பைகளை உபயோகப்படுத்துகிறோம். அதற்கு மாற்றாக பொலித்தீன் இல்லாமல் என்ன முறைகளைப் பயன்படுத்தலாம் எனச் சின்னதாக யோசிக்குபோது இந்த ஐடியா கிடைச்சது. ஒரு இளநீர்க் கடையைக் கடந்து செல்லும்போது அங்கு கொட்டிக் கிடக்கும் இளநீர்க்குடுவைகளைப் பார்த்தேன்.





அங்கதான் இந்த ஐடியா வந்தது.

வெட்டிப்போடப்பட்ட இளநீர்க் குடுவைகளைக் கண்டதும் ஒரு சிந்தனை வந்தது. அருகில் சென்று அந்தக் குடுவையை எடுத்து இதில் கன்று வளர்ப்பதற்கான அமைப்பும் இடமும் உள்ளதா? எனப் பார்த்தேன். இருக்கென்று தோன்றியது. இளநீர் அடிப்பக்கம் தட்டையாகவும், மண்ணில்வைப்பதற்கு ஏதுவாகவும் இருக்க வேண்டும். செடி வளர்ந்த பிறகு வேர் வெளியே வரும் படியும் அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு பிறகு தேவையான அளவு சத்தான மண்ணை வைத்தல் செடி வளருவதற்கு ஏதுவாக இருக்கும். செம்மண், வண்டல்மண், மக்கின சாணி இவை அனைத்தையும் நிரப்பித் தண்ணீர் ஊற்றி இரண்டு நாட்கள் வைத்துக் கொள்ள வேண்டும்" என்றார்,

"ஏற்கனவே விதை இட்டு முளைத்த சிறிய செடியை இளநீர்க்குடுவையில் ஊன்றிவிடலாம். அவை ஓரளவு வளர்ந்த பிறகு அவற்றை அப்படியே மண்ணில் புதைத்து விடலாம்" எனக் கூறினார்.

இதன்மூலம் எந்தெந்தப் பொருட்களில் பிளாஸ்ரிக்கை குறைக்க வேணுமோ அதை யெல்லாம் உடனே செய்ய வேண்டும். அதை முயற்சி செய்யும் போது பூமிக்கு ஒரு நல்ல விடயம் செய்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்" என முடித்தார் .

இப்போது இந்த இளநீர் ஐடியா வாட்ஸ் அப்பிலும் மற்ற சமூக வலைத்தளங்களிலும் வைரலாகி வருகிறது.

இலங்கையில்கூட டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகமானதுடன் சமீபத்தில் டெங்கு நோயினால் பலர் இறந்துள்ளனர். டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு மிக முக்கிய காரணம் இந்தத் தேங்காய் மட்டைகளும் இளநீர்க் கோம்பைகளும்.

எனவே நாமும் இவ்வாறு சிந்திப்போம். எமது அடுத்த சந்ததிக்காய் பூமியை வளப்படுத்தும் வேலை யில் இறங்குவோம். புதிது புதிதாய் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

# வன்மமடைதல்

(நிமிடக்கதை)

அன்பான சங்குநாத வாசகர்களுக்கு இனிய ஞாயிறு வணக்கம். ம்...மனசே சரியில்லை. ஏன் இந்த மனிசர் இப்பிடி இருக்கினம்? ஏதோ ஆறறிவு உள்ளவை புத்திஜீவிகள், படிச்ச மனிசர் எண்டெல்லாம் பெரிய வார்த்தைகளாலை புகழ்ந்து தள்ளினம். ஆனால் கேவலம் இந்த நாய்ப் பிறப்பெடுத்திருக்கிற ஜிம்மிக் குட்டிக்கு இருக்கிற ஈர நெஞ்சு இந்தப் பெரிய மனிசருக்கு மருந்துக்கும் இல்லையே. எங்கை பிழை நடக்குது. பெத்தவையிலோ வளர்த்தவையிலோ படிச்சவையிலோ பதவி கொடுத்தவையிலோ இல்லை, எல்லாத்துக்கும் மேலே படைத்த கடவுளிலையோ....ம்...பெரியவரோடே ஒரு அம்மம்மாக்காரி ஓராறு கண்ணீர் வடித்துப் புலம்பிறதைக் கேக்க...உள்ளுக்குப்பாருங்கோ....நீங்களே அதை கேளுங்கோ... பாவம் பெரியவர் இன்னும் சாப்பிடக்கூட இல்லை. அவரும் மனுசன்தானே. எவ்வளவு தூரம் பெரியாக்களுக்குச் சொல்லுறது சொற்புத்தியும் இல்லை சுய புத்தியும் இல்லை... பெரியவர் ஏதோ சொல்லுறார்.

"சின்னம்மா... தவமிருந்து பெத்ததோ வயிறுநொந்து பெத்ததோ வலியெடுத்துப் பெத்ததோ வலிக்காமல் பெத்ததோ... எல்லாம் பிள்ளைதான். எனக்கு நல்லா விளங்குது"

சின்னம்மா மூக்கைச்சீறி முந்தானையிலை துடைக்கிறா.

"ஐயா... நாங்கள் படிக்காத ஏழையள்தான். அதுக்காகப் பிள்ளையள் படிக்காமல் இருக்கிறதே. வாத்திமாரை தெய்வமா மதிக்கிற பண்பும் பணிவும் எங்களிட்டை இருக்கையா. முன்னமும் ஒரு முறை பெடியன்ரை சேட்டைக் கழற்றி முதுகிலை இருக்கிற தழும்பைக் காட்டி அழுதுபோட்டு வந்தனான். நேற்றுக் காலிலை காற்சட்டைக்குக் கீழ இரண்டு கோடு இழுத்து விட்டுக் கிடக்கு. ஐயோ வயிறு பத்தி எரியுது"

பெரியவர் பெருமூச்சு விடுறார். சின்னம்மாக்கா தொடருறா.

"நான் பிள்ளைப் பெத்துப் பார்க்கப் போன டாக்குத்தர் வீட்டிலை பேரனையும் கூட்டிக் கொண்டு போனனான். அவர் கோபத்தோடை என்ன ஏது யார் எவர்...? எண்டெல்லாம் விசாரிச்சுப் போட்டு மேலிடத்துக்கு அறிவிக்க வேணும் எண்டவர். ஐயோ... வேண்டாம் எண்டு நான் மறிச்சுப் போட்டன்.

பெரியவர் குறுக்கை இடைமறிக்சுக் கதைக்கிறார்.

"வேண்டாம் ஆச்சி... கள்ளம் கபடமில்லாத உன்ரை மனம் கொதிச்சு வார்த்தைகளை அள்ளி வீசாதை. அது தெய்வவாக்கு. பலிச்சாலும் பலிச்சிடும். சில மனிதர்கள் தங்கடை இயலாமையை இப்படித்தான் பிள்ளைகள் மேலை தீர்க்கிறது. பெரிய பிள்ளைகள் என்றால் எதிர்ப்புக் காட்டுங்கள். சின்னஞ் சிறுசுகள் என்ன செய்யும். கேட்கக்கேட்கக் கஷ்டமாத் தான் இருக்கு. சரியான விசாரணைகள் இல்லாமல் ஒரு பிரச்சினையை, முரண்பாட்டைத் தீர்க்க முடியாது. தீர்க்கவும் கூடாது. மற்றவர்கள் பெரும்பான்மையாக சொல்லுறதை உண்மையென்று ஏற்று, தப்புச் செய்யாத பிள்ளைக்குத் தண்டனை தொடர்ந்து வழங்கினால் அவரின்ரை மனம் காய்ச்சுப் போகும். காலப் போக்கிலை அவன் ஒரு சமூகவிரோதியாக, வன்முறையாளனாக, அடங்காப்பிடாரியாக மாறி விடுவான். அன்பாலும் அரவணைப்பாலும் பிள்ளைகளை வழிக்குக்கொண்டு வாற பொறுமை, சகிப்புத்தன்மை, கற்பித்தல் நுட்பம், புதிய புதிய உத்திகள் ஒவ்வொரு ஆசிரியரிடமும் நிறைந்து காணப்பட்டால் கற்பித்தல் மிக அற்புதமாகவும் விரும்பக் கூடிய விதமாகவும் அமையும்...ம்...பேரனைப் பின்னேரம் கூட்டிக்கொண்டு வா.. நான் அவனோட கதைக்கிறன்...

பெரியவர் மீண்டும் பெருமூச்சுவிடுறார். சின்னம்மா தொடருறா...

"ஐயா... உங்களுக்குச் சொன்னது கொஞ்சம் ஆறுதலாக் கிடக்கு. இனியும் இப்பிடி நடந்தால்..." பெரியவர் கையை உயர்த்தி அமைதி காட்டிறார். சின்னம்மாக்கா பைப்பிலை முகத்தைக் கழுவித் துடைச்சுப் போட்டுப் போறா.

பெரியவர் கதிரையில சாஞ்சு படுத்துக் கொண்டு யோசிக்கிறார்...ம்...பிள்ளைகள் வன்மமடையாமல் காப்பாற்ற வேணும் கடவுளே ...அம்மாளாச்சி ஒரு நல்ல வழியைக் காட்டு. ம்...பசியும் இல்லை, நித்திரையும் வராது போலை... வாறன்... சரிஞ்சு படுப்பம்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்

# ரஜினி செம ரகளை
## பா.ரஞ்சித் பகிரும் ரகசியங்கள்



டீஸர் சிறப்பா வந்திருக்கு ப்ரோ... பாக்குறீங்களா?" - அன்போடு கேட்கிறார் இயக்குநர் பா.இரஞ்சித். ரஜினியுடன் இரண்டாவது இன்னிங்ஸையும் வெற்றிகரமாக முடித்துவிட்ட திருப்தி அவரது முகத்தில் தெரிகிறது. டீஸரைப் பார்த்துவிட்டு ரஞ்சித்துடன் நடத்திய உரையாடல் இங்கே!

'கபாலி' முடிச்சதுக்கு அப்புறம் என்ன பண்ணலாம்னு யோசிச்சுட்டிருந்தப்ப, 'அப்பா உங்களை மீட் பண்ண நினைக்கிறார்'ன்னு சௌந்தர்யா சொன்னாங்க. சாரை மீட் பண்ணேன். 'கபாலி கொடுத்த புத்துணர்ச்சியில நான் இன்னும் எட்டுப் படம் பண்ற அளவுக்கு எனர்ஜியா இருக்கேன் டைரக்டர் சார். திரும்பவும் நாம சேர்ந்து படம் பண்ணலாம்'னு சொன்னவர் 'கபாலி இரண்டாம் பாகமே பண்ணலாமா?'ன்னு கேட்டார். 'சரி சார்'னு சொல்லி அதுக்காக வொர்க் பண்ணேன். ஆனா, இந்தக் 'கபாலி' கதை வேற ஒரு களத்துல பயணிக்கணும்னு சார்கிட்ட சொல்லிட்டு மும்பைக்குக் கிளம்பிட்டேன். அங்க இருக்கிற கேங்ஸ்டர்களைப் பத்தி தெரிஞ்சிக்க நிழல் உலக தாதாக்களைச் சந்திச்சேன். ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய குடிசைப் பகுதியான தாராவியை முழுசா ஆராய்ச்சி பண்ணேன். மும்பைத் தெருக்கள்ல சும்மா சுத்திட்டிருந்தேன். இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக நகரம், எங்க போனாலும் பெரிய பெரிய கட்டடங்கள்... அதன் காலடியில சுற்றி இருக்கிற குடிசைப்பகுதிகள்... இதெல்லாம் பாக்குறப்ப அது எனக்கு வேறொரு பரிமாணத்தையும் பார்வையையும் கொடுத்தது. கேங்ஸ்டர் கதையை விட்டுட்டு அந்த மக்களோட வாழ்க்கையையும் அவங்க பிரச்சினையையும் பதிவு பண்ணணும்னு நினைச்சேன். அவங்க சந்திக்கிற பிரச்சினை இந்தியப் பெருநகரங்கள்ல வாழ்கிற எல்லா விளிம்பு நிலை மக்களுக்கான பிரச்சினையாகவும் இருந்தது. அதன் அடிப்படையில அங்க இருக்கிற தமிழ் மக்களோட தொடர்ந்து உரையாடினேன். அந்த பாதிப்புல முற்றிலும் வேறொரு கதையை உருவாக்கிட்டு சார்கிட்ட போனேன். அது தான் 'காலா'."

**கபாலி இரண்டாம் பாகத்துக்காகக் காத்திருந்த ரஜினி, காலா கதையைக் கேட்டுட்டு என்ன சொன்னார்?**

80-கள்ல மும்பையில் வாழ்ந்த ரௌடிகள், அவங்களுக்குள்ள இருக்கிற மோதல்கள்னு கேங்ஸ்டர் கதையைத்தான் எழுதிட்டு வருவேன்னு சார் எதிர்பார்த்தார். ஆனா, நான் கொண்டுபோனது ஒரு எமோஷனல் குடும்பத் தலைவனோட கதை. ஒரு அப்பா, அவருக்கு நான்கு மகன்கள், கணவன் மனைவி, காதல், பேரன் பேத்திகள், வயதான நண்பர்கள். இப்படின்னு கதை சொல்லிட்டுப் போறப்போ... சார், தலையாட்டி சிரிச்சுக்கிட்டே "இப்படி ஒண்ணை நான் எதிர்பார்க்கவே இல்லையே டைரக்டர் சார். ஆனா, நல்லா இருக்கு.. மேல சொல்லுங்க"ன்னு தாடியைத் தடவிக்கிட்டே கேக்க ஆரம்பிச்சதும் எனக்கு அவ்ளோ சந்தோஷம். ஏன்னா இந்தக் கதையை அவர் ஏத்துக்குவாரான்னு ரொம்பத் தயங்கினேன். எப்படி இரண்டாவது படமும் ரஜினி உங்களுக்குக் கொடுத்தார்னு சிலபேர் கேக்குறாங்க. ஒருவாட்டி நானே சார்கிட்ட அதைக் கேட்டேன். 'உங்க வொர்க், உங்ககிட்ட இருக்கிற நேர்மை. இது ரெண்டுதான் உங்களோட படம் பண்ண வெச்சது. இனியும் வைக்கும்'னு சொன்னார். அவரோட நம்பிக்கையைக் காப்பாத்தியிருக்கேன்னு நம்புறேன்."

**'காலா' பெயர்க் காரணம் என்ன?**

படத்துல கரிகாலன் அவருடைய பேர். அதுல காலன் அப்படிங்கிற பேரைத்தான் சுருக்கிக் காலான்னு வெச்சிருக்கோம். திருநெல்வேலி மாவட்டத்துல வழிபடப்படுற சிறுதெய்வங்கள்ல காலா சாமியும் ஒருத்தர். ரஜினி சார் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவராக நெல்லைத் தமிழ் பேசுபவராக இருப்பதால் இந்தப் பேர் பொருத்தமா இருந்துச்சு. அதே நேரத்துல இந்தி மொழியில காலான்னா கறுப்புன்னு அர்த்தம். கறுப்பு என்பது உழைக்கும் மக்களின் வண்ணம். படத்துலேயும் கறுப்பு நிறம் ஒரு குறியீடா பயன்படுத்தப்பட்டிருக்கிறதால காலாங்கிற பெயர் பலவகையில இந்தக் கதைக்குத் தொடர்புடையதா இருக்கும்னு அதை டைட்டிலா வெச்சோம்."

**காலா எங்களுடைய கதை தான் என்று சிலர் சொல்கிறார்களே?**

இது எந்தத் தனிநபரின் கதையும் இல்ல, தனிநபரைப்பற்றிய கதையும் இல்ல. மக்களின் வாழ்வியலைப் பற்றிப் பேசுற படம். அதுவும் தாராவி. குறிப்பிட்ட மக்களின் கலாசாரத்தை மட்டும் பிரதிபலிக்கிற பகுதி கிடையாது. பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மராத்தி, இந்தி, நெல்லைத் தமிழ், தெலுங்குன்னு பல்வேறு மொழிகள் பேசுற, சாதியடையாளங்களை வலுவாக முன்னிறுத்துகிற பல்வேறு இனக்குழுக்கள் வாழுற பகுதி. திருநெல்வேலில இருக்கிற தமிழர்கள் பெரும்பான்மையாக அங்க இருக்காங்க. இந்த எல்லாத் தரப்பினரையும் மையமா வெச்சு கற்பனையைக் கலந்து நானா எழுதினதுதான் காலா. சொல்லப்போனா இந்தக் காலா கதாபாத்திரத்துக்கு இன்ஸ்பிரேஷன் எங்க தாத்தாதான். அவர் பேர் பஞ்சாட்சரம். எங்க ஊர்ல முக்கியமான ஆள். தான் வாழ்ந்த நிலத்தின் மீது ரொம்பப் பற்றுதலோட இருந்தவர். எங்க குடும்பம், குழந்தைங்ககிட்ட, அவர் நண்பர்கள் கிட்ட அவ்ளோ அன்பா இருப்பார். ஊர்ல ஜனங்களுக்கு ஒரு பிரச்சினைன்னா அந்த வயசுலயும் எதுக்கும் பயப்படாம முன்னாடிபோய் நிப்பார். ஒரு பிரமிப்பான மனுஷனான அவரைப் பாத்துதான் வளர்ந்தேன். காலா கதாபாத்திரத்தை அவரை அடிப்படையா வெச்சுத்தான் உருவாக்குனேன்."

**தயாரிப்பாளர் தனுஷுடன் பணிபுரிந்த அனுபவம் சொல்லுங்க?**

'அட்டகத்தி' கதை எழுதிட்டு தனுஷை அணுகலாம்னுதான் இருந்தேன். அந்தச் சூழல்ல முடியலை. 'காலா' கதையை ரஜினி சார் ஓகே பண்ணதும் தனுஷை மீட் பண்ணி கதை சொல்லச் சொன்னார். தனுஷ் தீவிரமான ரஜினி ரசிகர். கதையைக் கேட்கக் கேட்க செம்மையா என்ஜாய் பண்ணார். எந்தெந்தக் காட்சிகள்ல ரசிகர்கள் ரசிப்பாங்கன்னு சொல்லி எக்சைட் ஆனார். இந்தப் படத்தை இவ்ளோ சீக்கிரம் எடுத்து முடிச்சு ரசிகர்கள்கிட்ட கொண்டு சேர்க்கிறோம்னா தயாரிப்பாளர் தனுஷ் அவர்களோட ஒத்துழைப்பு மிக முக்கியமானது."

**கபாலியில் ரஜினி நடிப்பு பல பரிமாணங்களை உள்ளடக்கி இருந்தது. 'காலா'வில் எப்படி?**

'காலா'வில் இன்னும் அதிகமாகவே எதிர்பார்க்கலாம். 'கபாலில ஆரம்பம் முதலே தன் கடந்த கால நினைவுகளைச் சுமந்துகிட்டு ஒருவிதமான சோர்வுடனும், இறுக்கத்துடனும் விரக்தி மனநிலையிலேயே கபாலி கடைசிவரை இருப்பார். ஆனா இதுல ரஜினி சார், காலா சேட்டுங்கிற கதாபாத்திரத்துல ரகளை பண்ணியிருக்கார். அடிப்படையில் காலா ரொம்பப் பிடிவாதமான ஆள். யார் எதிரே நின்னாலும் தனக்கும் தன் மக்களுக்கும் இதுதான் தேவைன்னா அதுல ரொம்ப உறுதியா நின்னு போராடுற ஒரு மனிதன். இன்னொரு பக்கம் தன் மனைவியோட ரொமான்ஸ், மகன்கள்கிட்ட தன் காதல் கதைகளைப் பேசி நெகிழுறது, பேரப்பிள்ளைகளோட கிரிக்கெட், ஃபுட்பால் விளையாடுறது, ஊர் மக்களை வழிநடத்துற தலைவன், எதிரிகள் கிட்ட காட்டுற மூர்க்கம்னு ரஜினிசார் செம சுப்பரா நடிச்சிருக்கார். படப்பிடிப்புக்கு வெளிய அவர் சாதாரணமா எப்படிப் பேசுவாரோ, அவரோட உடல்மொழி எப்படி இருக்குமோ அதைத்தான் திரையில் கொண்டு வந்திருக்கார். ஒரு மனுஷனுக்குள்ள இருக்கிற ஒட்டுமொத்த எமோஷனையும் காலா சேட்டுகிட்ட பார்க்கலாம். ரஜினிசார் ரொம்ப இயல்பா நடிச்ச படங்கள்ல 'காலா'வுக்கு ஒரு முக்கியமான இடம் இருக்கும். ஸ்டைலுக்கு மட்டுமல்லாம அவருடைய நடிப்புக்குன்னு ஒரு இடம் இருக்கில்ல, அது இந்தப் படத்துல முழுமையடைஞ்சிருக்குன்னு நினைக்கிறேன்.

**கபாலி படத்தில் ரஜினியின் மனைவியாக ராதிகா ஆப்தே கலக்கியிருப்பாங்க. இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடி யார்?**

காலாவின் மனைவியாக செல்விங்கிற கதாபாத்திரத்தில் ஈஸ்வரி ராவ் நடிச்சிருக்காங்க. ரொம்ப எமோஷனலான கதாபாத்திரம். நிச்சயம் பேசப்படும். ஏன்னா அந்தச் செல்வியை எல்லா வீடுகளிலும் பொருத்திப் பார்த்துக்கலாம். சகிப்புத்தன்மையுடன் ஒரு குடும்பத்தை நிர்வாகம் செய்ற, கணவனையும், நான்கு மகன்களையும் மருமகள்களையும், பேரப்பிள்ளைகளையும் கட்டி மேய்க்கிற ஒரு பெண்மணி.

'கபாலி'யைப் பற்றி நியாயமாகச் சொல்லப்பட்ட விமர்சனங்களை முன்வைத்து சில விடயங்கள்ல வேலை பண்ணியிருக்கோம். அதுல ஒண்ணு, 'கபாலியில் வில்லன் கதாபாத்திரம் இன்னும் வலுவா இருந்திருக்கலாம்'கிற விமர்சனம். அந்த வகையில் 'காலா'வில் வில்லனாக நானா படேகர். ரஜினி சாரும், நானாஜியும் போட்டி போட்டு நடிச்சிருக்காங்க. காலாவுக்கு நண்பனா வாலியப்பன்ங்கிற கரக்டர்ல சமுத்திரக்கனி நடிச்சிருக்கார்.

அஞ்சலி பாட்டில், சம்பத், அருள்தாஸ், சாயாஜி ஷிண்டே, 'வத்திக்குச்சி' திலீபன்னு நிறைய கதாபாத்திரங்கள். அவங்க இயல்பா எப்படிப் பேசிப் பழகுவாங்களோ அந்த உடல்மொழியைத்தான் எல்லோருடைய நடிப்புலயும் கொண்டு வந்திருக்கோம். இவங்க தவிர படத்துல முக்கியமான கரக்டர்ல ஹுமா குரேஷி நடிச்சிருக்காங்க.

'கேங்க்ஸ் ஆஃப் வாசிப்பூர்' எனக்கு ரொம்பப் பிடிச்ச, நிறைய வாட்டி பார்த்த படம். அந்தப் படத்துலதான் ஹுமா குரேஷியைப் பார்த்தேன். 'காலா' படத்துல சரீனாங்கிற கதாபாத்திரத்துக்கு அவங்க கரெக்ட்டா இருப்பாங்கன்னு தோணுச்சு. கதையில ரஜினி சாருக்கும் அவங்களுக்கும் உள்ள உறவு ரொம்பவே சுவாரஸ்யமானது.

காலா பெரும்பாலும் செட் போட்டு எடுக்கப்பட்ட படம் என்பதால் உண்மைக்கு எந்த அளவு நெருக்கமாக இருக்கும்?"

இதுவரையிலான என்னுடைய படங்கள் லைவ் லொகேஷனில் எடுக்கப்பட்டவைதான். ரஜினி சாரைக் கூட்டிட்டு வந்து தாராவிலதான் ஷூட் பண்ணோம். படப்பிடிப்பு நடக்கிற இடத்தைச் சுற்றி ராத்திரி, பகல்னு மக்கள் கூட்டம் கட்டுப்படுத்த முடியாதபடி இருந்தது. ஆனாலும், தாராவியிலேயே எடுத்ததாக வேண்டிய காட்சிகள்ல நான் உறுதியா இருந்தேன். அதனடிப்படையில் நாலுநாள் ரஜினிசார் தொடர்பான காட்சிகள் எடுத்துட்டு அப்புறம் பதினைந்துநாள் அங்க ஷூட் பண்ணோம். சென்னைக்கு வந்து தாராவி மாதிரி செட் போட்டோம். தாராவி எப்படி இருக்கோ, மும்பையில இருக்கிற ஸ்லம்ஸ் எப்படி இருக்கோ அதேமாதிரியான டூல்ஸ், மெட்டீரியல்ஸ வெச்சு 25 கோடி ரூபாய் செலவுல ஒரு ஊரையே கிட்டத்தட்ட உருவாக்கியிருக்கோம். எது செட், எது ரியல் தாராவின்னு பார்வையாளர்களால எளிதில கணிக்க முடியாத மாதிரி கலை இயக்குநர் ராமலிங்கம் வேலை பண்ணியிருக்கார். உண்மைத் தன்மையுடனும் அதேசமயம் கலை நயத்துடனும் அவர் செஞ்ச வேலை இந்தப் படத்துக்கு மிகப்பெரிய பலம். படம் ரியலிஸ்டிக்கா இருக்குன்னா அதுக்கு இன்னொரு முக்கிய பலம் ஒளிப்பதிவாளர் முரளி.

**ரஜினியின் அரசியல் பிரவேசத்தை மையமாக வைத்து காலாவில் வசனங்கள் எழுதப்பட்டுள்ளதா?**

'காலா' கதையை ரஜினி சாரிடம் சொல்லும்போதிலிருந்து, படப்பிடிப்பு நடந்து முடியும்வரை அவருக்கு அரசியலில் களமிறங்கணும்ங்கிற ஆர்வம் இருந்த மாதிரி எனக்குத் தெரியல. அரசியலுக்கு வருவேன்னு அவர் அறிவிக்கிறதுக்கு முன்னாடியே எழுதப்பட்டு, படமாக்கப்பட்டிருக்கிற ஒரு படம் இது. அவருடைய அரசியல் நுழைவை இந்தப் படம் வலுப்படுத்தினால் அது ஒரு தற்செயல் நிகழ்வுதான்."

**படத்தின் இசை, பாடல்கள் எப்படி வந்திருக்கிறது?**

கபிலன், உமாதேவி, அருண்ராஜா காமராஜ் பாடல்கள் எழுதியிருக்காங்க. இவங்க தவிர்த்து, 'கேஸ்ட்லெஸ் கலெக்டிவ்'வில் பாடல்கள் பாடிய அறிவு ஒரு பாட்டு எழுதியிருக்கார். காதல் பாடல், குடும்பப் பாடல், ரஜினி சார் ரசிகர்களுக்கான பாடல்னு எல்லா விதமான உணர்வுகளையும் இசை வடிவங்கள்ல கொண்டு வர்ற தருணங்கள் படத்தில் உண்டு.

புதுவிதமான சில இசைக் கருவிகளை வெச்சு சந்தோஷ் பண்ணியிருக்கிற மியூசிக் அருமையா இருக்கும். மெட்ராஸ்ல இருக்கிற விளிம்புநிலை மக்களுக்கு கானா பாடல்கள் மாதிரி பாம்பே விளிம்புநிலை மக்கள் ராப், ராக் வகைப் பாடல்களை அதிகமாக பாடுவாங்க. முதல்பாடலே அப்படியொரு பாடல்தான். 'மெட்ராஸ்' படத்துல டான்ஸ் குரூப் இருந்த மாதிரி இதுல ராப் குரூப் இருக்கு. கதையில் சில முக்கியமான இடங்கள்ல அவங்களைப் பயன்படுத்தியிருக்கேன். ஒரு வாழ்க்கைமுறையை அதன் அசலான அடிப்படைகளுடன் கொண்டு சேர்க்கிற முயற்சிகள்தான் இவை எல்லாமே."

**அடுத்த படத்துக்கான கதை, களம் முடிவு பண்ணிட்டீங்களா?**

கதை எழுதி முடிச்சாச்சு. இன்னும் மற்ற விடயங்கள் முடிவு பண்ணலை. ஆனால் என்னுடைய எல்லாப் படங்களும் அரசியல் படமாகத்தான் இருக்கும்ங்கிறதுல யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம்."

# சிரியா போரும் மனிதவுரிமை மீறல்களும்!

சவுதி அரேபியாவில் நடந்த 'வாய்ஸ்' நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுமி ஒருத்தி அரேபிய மொழியில் பாடல் ஒன்றைப் பாடுகிறாள், சுற்றியுள்ள அனைவரும் மௌனமாகின்றனர். அந்தச் சிறுமியின் குரலும், அந்தப் பாடலின் வரியும் பல கேள்விகளை நம் முன் வைக்கிறது. இதோ அந்தப் பாடல்.

"என் நாடு என்னைப் போலவே
மிகச்சிறியது
எங்கள் நிலம் எரிந்து
கொண்டிருக்கிறது
வெடிகுண்டு சத்தத்தால் எங்கள்
புறாக்கள் பறப்பதில்லை
எங்கள் வானம் கனவு
கண்டுகொண்டிருக்கிறது அந்த
நாட்களைக் கேட்டு
எங்களது குழந்தைப் பருவத்தை
திருப்பித் தாருங்கள்"

என்ற வலி நிறைந்த வரிகளுடனான பாடலை அவள் தொடருவாள். அந்தப் பாடலின் வரிகள் அவளை தடுமாறச் செய்து ஒரு கட்டத்தில் கண்ணீரில் நிறுத்துகிறது.

அந்த நிகழ்ச்சியின் பெண் நடுவர் ஒருவர் ஓடிச் சென்று ஏன் அழுகிறாய்? தொடர்ந்து பாடு என்று அவளுடன் சேர்ந்து அந்தப் பாடலை பாடி முடிப்பார்.

பாடல் முடிந்தவுடன் நீ ஏன் அழுதாய் என்று அந்த நடுவர் கேட்க, அதற்கு அவள் சிரிப்புடன், கைகளால் கண்ணீரை துடைத்துக் கொண்டே நான் சிரியாவைச் சேர்ந்தவள் என்று கூறுவாள்.

சுற்றியுள்ள அனைவரும் அவளை உற்சாகப்படுத்துவார்கள். சிரியாவைச் சேர்ந்த ஏழு வயதான க்ஹினா என்ற சிறுமிதான் அந்தப் பாடலை பாடியவர். அந்த வீடியோ காட்சி மிக பிரபலமானது.





க்ஹினா மட்டுமல்ல சிரியா வைச்சேர்ந்த குழந்தைகள் பலரும் நாள்தோறும் அவர்களது மண்ணில் நடைபெறும் அவலங்களை நமக்குக் கொண்டுவர மரணத்தின் வாயி லில் நின்று கொண்டு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

சிரியாவில் நடக்கும் உள்நாட்டு போரினால் மனித உரிமைகள் எவ்வாறு மீறப்படுகிறது என்பதை சற்று பின்நோக்கி பார்க்க வேண்டியுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர், சிரிய உள்நாட்டுப் போர் காரணமாக துருக்கிக்கு தப்பிச் செல்ல முயன்ற அய்லான் என்ற சிறுவன் துருக்கி கடற்கரையில் இறந்து கிடந்தான். அக்காட்சி உலகையே கலங்கச் செய்தது.

2016-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வான்வழித் தாக்குதலால் தரைமட்டமான கட்டடத்திலிருந்து மீட்கப்பட்ட ஓம்ரான் பலத்த காயத்துடன் நாற்காலியில் குழப்பம் அடைந்த நிலையில் அமர்ந்திருந்தான். அந்தத் தருணத்தில் அவன் ஏதும் பேசவில்லை. அவனுக்காக நாம் இணையத்தில் பேசினோம்.

பானா அலபெட் என்ற சிரிய சிறுமி ஊஞ்சல் ஆடுவதில்லை. மரணக் கயிற்றில் தான் ஆடிக்கொண்டிருக்கிறாள் ஒவ்வொரு நாளும் சிரிய போரில் அவள் எப்படி உயிர் பிழைக்கிறாள் என்பதை தனது டுவிட்டர் . @AlabedBana பக்கத்தில் பதிவிட்டு வருகிறாள். ஒரு சில நாள் அவளைக் காணவில்லை. ஒருவேளை வெடிகுண்டுக்கு பானா பலியாகிவிட்டாளா என அவளை டுவிட்டரில் பின் தொடர்பவர்கள் தேடிக் கொண்டிருந்தார்கள். பின் சில நாள் கழித்து பானா அலபெட் தான் உயிருடன் இருப்பதாக டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டாள். சிரியாவின் நிலைமை குறித்து இன்றும் தொடர்ந்து பதிவிட்டு உலக நாடுகளிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறாள் பானா...

ஓம்ரான், அய்லான், பானா அலபெட்

தொடர்ந்து சிரியாவின் நிலையை அந்நாட்டுக் குழந்தைகள் இன்றும் நமக்கு கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

### சிரியாவில் என்ன நடக்கிறது?

உண்மையைக் கூற வேண்டும் என்றால் மத்தியதரைக் கடலின் கிழக்கு ஓரமாக அமைந்துள்ள நாடு (சிரியா) தனது சொந்த நாட்டு மக்களை குண்டுகளாலும், வான் வழித் தாக்குதலும் கொன்று குவித்து வருகி றது. ஆட்சி அதிகாரத்துக்காக நான்கு பக்கங்களிலும் சிரியா சூறையாடப்பட்டு வருகிறது.

சுமார் 30 வருடங்கள் சிரியாவை ஆட்சி செய்தவர் ஹஃபெஸ் அல் அஸாத். எதிர்க்கட்சிகளுக்கு சட்ட அங்கீகாரம் ஒருபோதும் கிடையாது என்று வெளிப்படையாகவே 1990இல் அறிவித்தார். அவ்வப்போது சட்ட விரோதமாகச் செயற்பட்டாலும் மக்களின் ஆதரவு பெற்றவராகத்தான் ஹஃபெஸ் விளங்கினார். இதனால் 1991 வருட தேர்தலில் 99.98 சதவிகித வாக்களித்து இவரை நான்காம் முறையாக நாட்டுத் தலைவராக்கினார்கள் சிரியா மக்கள்.

இவரது இரண்டு மகன்களில் ஒருவனான பஸ்ஸெல் அல் அஸத் என்பவர்தான் அந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதி என்று மக்கள் நினைத்திருக்க, கார் விபத்தில் அவர் உயிரிழந்தார். பின் அவரது சகோதரர் பஷர் அல் ஆசாத் சிரியாவின் ஜனாதிபதியானார்.

இவருக்கெதிராகத்தான் சிரிய கிளர்ச்சி படைகளும், ஐ.எஸ். இயக்கமும், போர்த் தொடுத்து வருகின்றன.

இந்த சண்டையில் ஒருபக்கம் குர்திஷ் இனத்தவரும் உள்ளனர். பெரும்பான்மையான சன்னி முஸ்லிம்கள் வசிக்கும் சிரியாவில் ஷியா முஸ்லிமான பஷார் அல் ஆசாத் ஆட்சி செய்வதை எதிர்த் தரப்பு விரும்பவில்லை என்பதும் சிரிய உள்நாட்டுப் போருக்கு முக்கிய காரணம் ஆகும்.

சிரிய அரசின் செயலால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர், ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்தன் காரணமாக சிரியாவில் ஐ.எஸ். இயக்கம் நன்கு கால் ஊன்ற வழி செய்தது.

சிரியாவில் நடக்கும் உள்நாட்டு போரால், ஜேர்மனி, அமெரிக்கா, பிரிட்டன், வளைகுடா நாடுகள், பெல்ஜியம், கனடா, ஸ்பெயின் இப்படிப் பல நாடுகள் சிரியாவுடனான தூதரக உறவைத் துண்டித்துக் கொள்ள ஈரான், ரஷ்யா, சீனா சிரிய அரசின் நண்பர்களாக உள்ளன.

பஷார் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யா சிரியாவின் உள்நாட்டுப் போரில் தலையிடுகிறது என்றால் அமெரிக்கா அமைதியாக இருக்குமா என்ன? வழக்கம் போல ஐ.எஸ். இயக்கத்தை அழிக்கிறோம் என்று சிரிய கிளர்ச்சிப் படைக்கு ஆதரவு அளித்து வருகிறது. பிறகென்ன சிரியாவில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேல் தினமும் இரத்த ஆறு ஓடுகிறது.

சிரியாவின் உள்நாட்டுப் போருக்கு ஐ.நா. தனது தூதுவர்களை அனுப்பி முடிந்தளவு சமரசம் செய்ய முயற்சித்தது. இதற்கு சிரிய அரசு சற்றும் செவி சாய்க்கவில்லை. விளைவு அமைதி தூதுவன் மௌனத் தூதுவன் ஆகிவிட்டான்.

வைத்தியசாலைகள், பாடசாலைகள் என மனிதாபிமானமற்ற முறையில் குண்டுகள் வீசப்பட்டு வருகின்றன. தொடர் சண்டையால் தெருக்களில் ஆங்காங்கே கேட்பாரற்ற நிலையில் பிணங்கள் கிடக்கின்றன (குழந்தைகள் உட்பட).

போரில் குடும்பத்தையும், நண்பர்களையும் இழந்த சிரிய குழந்தைகள் கையில் பொம்மை, கால்பந்துடன் தெரு ஓரங்களில் சுற்றித் திரிகிறார்கள்.

இதில் கொடுமையான செய்தி என்னவென்றால் ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து நடக்கும் போரினால் உள்நாட்டிலே அகதிகளாக இருக்கும் நிலைக்கு சிரிய மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

வான்வழித் தாக்குதலால் கட்டடங்களின் இடிபாடுகளில் சிக்கிய சிறுவர், சிறுமிகளை மீட்டுச் செல்லும் மீட்புப்படையினர்.

உள்நாட்டுப் போரில் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போ (கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி) தனது அடையாளத்தை முற்றிலுமாக இழந்து நிற்கிறது.

மனிதர்கள் குண்டுகளால் கொல்லப்படும் இடத்தில் விவசாயம் உயிரற்றுக் கிடப்பதால் சிரியாவின் உணவுக் கலாசாரம் வரலாற்றில் முற்றிலுமாக அழிக்கப்பட்டு வருகிறது.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரில் கடந்த ஆறு வருடங்களில் 5 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இன்னும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

30 இலட்சத்துக்கு அதிகமானவர்கள் துருக்கி, லைபனான், ஜோர்தான், எகிப்து, ஈராக் போன்ற அயல் நாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர். பல சிரிய குழந்தைகள் துருக்கியில் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளதாக பிபிசி செய்தி நிறுவனம் தெரி வித்தது.

தொடர்ந்து குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்படும் வான்வழித் தாக்குதலில் குடிநீர் குழாய்கள் உடைக்கப்பட்டதால் பத்து இலட்சத்துக்கு அதிகமான மக்கள் குடிநீர் இல்லாமல் தவித்து வருவதாக யுனிசெப் அமைப்பின் சிரிய பிரதிநிதிகள் கூறியுள்ளனர். அது மட்டுமல்லாது போர் தீவிரவமாக நடைபெறும் பகுதிகளில் மக்கள் உணவு தண்ணீரின்றி தவித்து வருகின்றனர்.

கடந்த ஒரு வாரமாக சிரியாவில் உள்நாட்டுப் போர் உச்சத்தை அடைந்துள்ளது. ஏராளமான மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன..

தற்போது கிளர்ச்சியாளர்களிடம் கடைசி பகுதியாக உள்ள கவுடாவில் சிரியா - ரஷ்ய கூட்டுப் படைகள் இறுதி யுத்தத்தை நடத்தி வருகின்றன. சிரியாவில் மீறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி தோழமை மனித உரிமை அமைப்பின் இயக்குநர் தேவநேயன் கூறியதாவது,

"சிரியாவை பொறுத்தவரை அங்கு அடிப்படையில் உயிர் வாழ்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதனுடன் அங்கு இருப்பவர்களுக்கு உயிர் வாழ்வதற்கான உத்தரவாதமும் மறுக்கப்படுகிறது.

இதுதான் சிரியா மக்களின் இன்றைய நிலை. அதுவும் சமீப காலங்களில் கொடூரமான முறையில் அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

குறிப்பாக சிரியாவில் வைத்திய சாலைகள், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் போன்றவைதான் அதிகமாக தாக்கப்பட்டுள்ளன. பெண்களும், குழந்தைகளும் அதிக எண்ணிக்கையில் உயிரிழந்துள்ளனர்.

நவீன காலகட்டத்தைப் பொறுத்தவரை போருக்கென்று சில அறநெறிகள் உண்டு. அந்த அறநெறிகள் எல்லாம் இரண்டாம் உலகப் போரில் மீறப்பட்டது. ஆனால் இரண்டாம் உலகப் போரைவிட கொடூரமான முறையில் சிரியாவில் அறநெறிகள் மீறப்பட்டிருக்கிறது.

தோழமை மனிதவுரிமை அமைப்பின் இயக்குநர் தேவ நேயன், அறநெறிகள் மீறப்பட்டிருக்கிறது என்றால், எந்த மத அடிப்படைவாதமும் மனி தர்களைக் கொல்ல அனுமதிப்பதில்லை. ஆனால் சிரியாவில் போரை நடத்துவது மதத்தை உள்வாங்கிக் கொண்டவர்கள்தான். இதனால் இவர்கள் மதவெறியர்களா? என்றகேள்வி எழுகிறது.

இரண்டாவதாக சிரி யாவில் நடக்கும் இந்தக் கொடுமைக்கு துணை போகும் பன்னாட்டு அரசையும் (அமெரிக்கா, ரஷ்யா) கண்டிக்க வேண்டிய தேவையிருக்கிறது. உலக அமைதி, மனிதவுரிமை பாதுகாப்பு இவற்றுக்கு தலைமையாக இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையும் சிரியா விவகாரத்தை சரியாகக் கையாளவில்லை என்று தான் கூற வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புகளும் சக்தி வாய்ந்த நாடுகளுக்கு சாதகமாக நடந்து கொள்கிறது. பாதிக்கப்படுபவர்களுக்கு இல்லை. ஐ.நாவினுடைய சாசனமே பாதிக்கப்பட்டவர்கள் பார்வையிலிருந்து மனித உரிமை பேச வேண்டும். ஆனால் அதை செயற்படுத்த ஐ.நா. தவறிவிட்டது.

மூன்றாவது, மனிதாபிமான அடிப்படையில் செய்யப்படும் உதவிகள் கூட போரினால் பாதிக்கப்பட்ட சிரிய மக்களுக்கு கிடைக்கவில்லை. இயற்கைப் பேரிடர் ஏற்பட்ட சூழ்நிலையில்தான் சிரிய மக்கள் உள்ளனர். ஆனால் உலக நாடுகள் இதனை கவனிக்கத் தவறியிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை மனித உரிமைக்கான சாசனம் அத்தனையும் சிரிய உள்நாட்டுப் போரில் உலக நாடுகள் தரையில் போட்டு மிதித்து விட்டன.

இறுதியாக மனித உரிமைக்கான சட்டங்கள், திட்டங்கள் இருப்பதை விட மனித உரிமைக்கான கலாசாரத்தை வளர்க்க வேண்டும். அப்போதுதான் மனித உரிமைக்கான பாதுகாப்பு கிடைக்கும் என்பதே மனித உரிமை நாளில் நான் எதிர்பார்ப்பது. இது சிரியாவுக்கு மட்டுமல்ல அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும்" என்று கூறினார்.

நம் கண்முன்னே சிரியா அழிந்து கொண்டிருக்கிறது. உலக நாடுகளின் மௌனம் உடையும்வரை சிரியாவில் இந்த அவலம் தொடர்கதையாக இருக்கப் போகிறது. சிரியா தன் வரலாற்றை அழித்துக் கொண்டே பிற நாடுகளுக்கு வரலாறாக மாறப் போகிறது. மனிதம் தழைக்கட்டும் மற்றுமொரு சிரியா இனி உருவாகாமல் இருக்கட்டும்.

**த ஹிந்து: குணசேகர்**

# facebook

## சீனாவில் நடந்த கொள்ளை

சீனாவில் நடந்த ஒரு வங்கி கொள்ளையின் போது கொள் ளையர்கள் துப்பாக்கியுடன் அனை வரையும் மிரட்டினர். இந்த பணம் அரசுக்கு சொந்தமானது . ஆனால் உங்கள் உயிர் உங்களுக்கு சொந் தமானது அனைவரும் அசையா மல் படுத்துவிட்டார்கள்.

மனதை மாற்றும் முறை என் பது இதுதான். **"This is called "Mind Changing Concept" Changing the conventional way of thinking."**

அங்கே ஒரு பெண் கொள்ளை யர்களின் கவனத்தை திருப்ப அநா கரிகமாக நடந்தாள். அப்பொழுது கொள்ளையர்களில் ஒருவன் . இங்கு நடக்க போவது கொள்ளை. பலாத்காரம் அல்ல என்று மிரட்டி அமர வைத்தான்.

இதைத்தான் செய்யும் தொழில் களில் கவனம் தேவை என்று சொல்கிறோம் **"Being Professi onal & Focus only on what you are trained"**

கொள்ளையடித்துவிட்டு வீட்டி ற்கு வந்தவுடன் கொள்ளையர் களுள் ஒருவன் கேட்டான் வாருங் கள் சீக்கிரம் பணத்தை எண்ணி விடலாம் என்று. மற்றொருவன் சொன்னான் பொறு, அவசரம்வேண் டாம். பணம் நிறைய இருக்கிறது நேரம் செலவாகும் அரசே நாம் எவ்வளவு கொள்ளை அடித்தோம் என்று நாளை செய்திகளில் சொல்லி விடும்.

இதைத்தான் படிப்பை விட அனுபவம் சிறந்தது என்போம்.

**"This is called "Experience." Nowadays, experience is more important than paper qualifi cations!"**

வங்கியின் மேலாளர் இச்சம்ப வத்தை பொலிஸாரிடம் சொல்ல முனைந்த போது அவனுடைய மேல் அதிகாரி தடுத்து அவனிடம் கூறினார். வங்கியில் கொள்ளை போனது 20 கோடிதான். நாம் மேலும்30கோடி பதுக்கிவைத்து மொத் தமாக ஐம்பது கோடி கொள்ளை போய் விட்டது என்று சொல்லி விடுவோம்" என்றார்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பது இது தான் . **This is called Swim along with the tide.... Converting an un favourable situation to yours.**


இதை கேட்ட மற்றொரு அதி காரி வருடம் ஒரு கொள்ளை இவ் வாறு நடந்தால் மிக நன்றாக இருக் கும் என்றார் கலியுகம் என்பது இது தான். **This is called Killing boredom World. Personal happiness is.**

மறுநாள் செய்திகளில் வங்கி யில் 100 கோடி கொள்ளை போய் விட்டது என்று அறிவிக்கப்பட்டது. கொள்ளையர்கள் அதிர்ந்து போய் பணத்தை எண்ண தொடங்கினர்.

எவ்வளவு எண்ணியும் அவர் களால் இருபது கோடிகளுக்கு மேல் போக முடியவில்லை. கொள்ளை யர்களில் ஒருவன் எரிச்சல் அடை ந்து நாம் உயிரை பணயம் வைத்து இருபது கோடி கொள்ளையடித் தோம்.

ஆனால் இந்த வங்கி அதி காரி சிரமம் இல்லாமல் எண்பது கோடி கொள்ளை அடித்து விட்டனர். படிப்பின் அவசியம் புரிகிறது இப்பொழுது. இதற்கு தான் படித்தி ருக்க வேண்டும் ."என்றான்.

## எவ்வளவு பொறுப்பாக இருந்தாலும் நல்ல பெயர் கிடையாது



ஒரு நாய் கடைக்கு வந்துச்சு.. கடைக்காரர் விரட்டி விட்டார்.. திரும்ப திரும்ப அந்த நாய் கடைக்கு வந்துச்சு... என்னடா பெரிய தொல்லையா போச்சுன்னு வெளிய வந்து பார்த்தா அந்த நாய் வாயில ஒரு சீட்டும் பணமும் இருந்துச்சு...

கடைக்காரர் ஆச்சர்யமாகி அந்த சீட்டை எடுத்து அதில் உள்ள சாமான்களை போட்டு, மீதி பணத்தையும் அதே பை யில் நாய் கழுத்தில் மாட்டிவிட்டார். நாய் திரும்பி நடக்க ஆரம்பிச்சுது.

கடைக்காரர் சுவாரசியமாகி நாய் பின்னாலே நடக்க ஆரம் பித்தார். அந்த நாய் தெருவை கடந்து மெயின் ரோட்டிற்கு வந்தது.

அப்போது ரெட் சிக்னல்.. அந்த நாய் ரோட்டை கடக்காமல் நின் றது. பச்சை லைட் விழுந்தவுடன் ரோட்டை கடந்தது.

கடைக்காரருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அது பின்னாலே அதன் வீடு செல்ல முடிவெடுத்தார். அந்த நாய் ஒரு பேருந்து நிறுத் தத்தில் நின்றது..

ஒரு குறிப்பிட்ட பேருந்து வந்த வுடன் நாய் பேருந்தில் ஏறியது. கண்டக்டரும் நாய் வாயில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஒரு டிக்கெட் கொடுத்தார்.

இரண்டு நிறுத்தங்கள் கடந்து நாய் பேருந்தில் இருந்து இறங் கியது. கடைக்காரரும் அதன் பின் னால் இறங்கினார்.

நாய் ஒரு தெருவை கடந்து ஒரு வீட்டின் முன் நின்று கதவை தட்டியது. கதவு திறந்து ஒரு ஆள் வந்தார்...

நாயின் கழுத்தில் உள்ள பையை கழட்டி விட்டு நாயை அடித்தார். கடைக்காரர் ஓடி சென்று நிறுத்துங்க? ஏன் அடிக்கிறீங்க? அது எவ்வளவு பொறுப்பா கடைக்கு போயிட்டு, சிக்னல் மதிச்சு, பஸ்ல டிக்கெட் எடுத்துகிட்டு வருது அதை போய் அடிக்கிறீங்களே ...?

அதுக்கு அந்த ஆள் சொன்னார் வீடு சாவிய எடுத்துட்டு போகாம வந்து கதவ தட்டுது பாருங்க.. நாய்க்கு கொஞ்சம் கூட பொறுப்பே இல்லன்னு.


**நீதி :** நமக்கு மேல உள்ள முத லாளிங்க மேனஜர் எல்லாரும் இப்படி தான். நீ எவ்வளவு தான் பொறுப்பா இருந்தாலும் உனக்கு நல்ல பெயரே கிடைக்காது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1346

Search for people, places and things — Nagendram Home

### அனோஜன்

தலைக்கு செட்டைய பார்த்தீங்களா பேஸ்புக் தொடங்கிட்டு அறிவுபூர்வமா புக் படிக்கிறாரு



நாமதான் பேஸ்புக்ல வெட்டியா கெடக்கோம்

### அனுஜன்

கழட்டி விடப்படுவோம் என்று தெரிந்தும் நம்முடன் இருப்பது...



செருப்பு மட்டுமே...

### ஆரணி


சீரியஸான... படபடப்பான... அங்க, இங்க திரும்பமுடியாத செக்யூரிட்டி வேலை என்பது...



வீட்டுக்காரம்மா நம்மை பூால் பொங்கிடாம பாத்துக்க நிக்க வைப்பதுதான்

### ஆகாஷ்

இப்போலாம் சாப்பிட வீட்டுக்குப் போறோமோ இல்லையோ



சார்ஜ் போட கரண்டா போயிடுவோம்

### ஆதர்ஷ்

இங்க பகலெல்லாம் தூக்கம் வருது இரவு தூக்கம் வரல



ஒருவேளை அமெரிக்காவில பிறந்திருந்தா சரியாய் இருந்திருக்குமோ, என்னமோ...

### ஆதித்யா

ஹலோ மாப்ள... போன மாசம் தங்கச் சங்கிலி வாங்கித் தந்தேனே... இந்த மாசம் என்ன வேணும்?



அதை அடகுக்கடையிலிருந்து மீட்டுத் தாங்க மாமா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 122

# நோயுற்றவர்களின் உரிமைகள் மீறப்பட்டால்...



நோயாளர்களின் உரிமைகளை மதித்து நடப்பது மருத்துவக் குழுவின் கடமையாகும். அதே போல் நோயாளர்களுக்கும், அவர்களின் உறவினர்களுக்கும் சில முக்கியமான கடமைகள் இருக்கின்றன.

**அவையாவன:**

- சகநோயாளர்களை மதித்து நடத்தலும், அவர்களுக்கு இடையூறு செய்யாது இருத்தலும்.
- உங்கள் உடற்சுகத்திற் கவனமெடுத்து நீங்கள் நோயாளியாவதைத் தவிர்ப்பதன்மூலம் சுகாதாரத்துறைக்கு ஏற்படும் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ளல்.
- இன்னொரு நோயாளியின் சுகம்பற்றி மருத்துவக் குழுவிடம் வினவுவதைத் தவிர்த்தல். காரணம்: ஒவ்வொரு நோயாளியின் நோய்நிலை சம்பந்தமான தகவல்கள், அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட வேண்டும். இந்த நோயாளியின் நேரடியான அனுமதி இல்லாமல் அந்தத் தகவல்களை வெளிப்படுத்தும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை.
- வைத்தியசாலையை அசுத்தம் செய்யாது தூய்மையாகப் பாதுகாத்தல்
- தமது நோய்நிலை பற்றிய போதிய விளக்கம் ஏற்படாத விடத்து மருத்துவக் குழுவுடன் நேரடியாக நீங்கள் பேசி, நிலைமையைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல், மூன்றாம் நபரினூடாக உங்கள் சுகம் பற்றி அறிய முயற்சிப்பது நல்லதல்ல.
- மருத்துவத்துறையின் மேம்பாட்டிற்கு உங்கள் பங்களிப்புக்களை வழாங்குதல்.
- வைத்தியசாலையின் சட்ட விதிகளை மதித்து நடத்தல்.



ஒவ்வொரு துறையிலும் எமக்கு இருக்கும் உரிமைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். அத்துடன் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எம்மால் இயன்றவற்றைச் செய்துதான் ஆகவேண்டும். உரிமை என்ற பேச்சை எடுப்பதற்கே அச்சப்படும் ஒருநிலை காணப்படுகிறது. எமது உரிமைகள் மீறப்படுவதாக நாம் உணரும்பொழுது அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அச்சப்படவோ வெட்கப்படவோ வேண்டியதில்லை.

உரிமைகளை மறுப்பவன் தான் உண் மையிலே மனித குலத்தின் முன் வெட்கப்பட வேண்டியவன்.

மருத்துவத்துறையிலே நோயாளர்களின் உரிமைகள் பற்றிப் பேசுவது மருத்துவக் குழுவுக்கும் நோயாளர்களுக்கும் இடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாக அமைந்துவிடக்கூடாது. உண்மையிலே அதுஒரு பரந்துபட்ட புரிந்துணர்வை ஏற்படுத்தி மருத்துவக் கவனிப்பு முறைகளை மேம்படுத்தும் ஓர் உந்து சக்தியாகவே அமைய வேண்டும். நோயாளர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. இவற்றைச்சட்ட வரையறைக்குள் அடக்கிவிட முடியாது.

ஒவ்வொரு நோயாளியும் குணப்பட்டுச் செல்லும்பொழுது அவனும் அவனது குடும்பமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் மகிழ்ச்சி அடையும்.

ஒரு நோயாளி இறந்து விட்டால் அவனது குடும்பத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள் மனமும் அழும்.

ஆனால் தொடர்ந்து அழுது கொண்டிருக்க முடியாது. காரணம்: அடுத்த நோயாளியைப் பார்க்க வேண்டும் என்ற கடமை இருக்கும். எத்தனையோ மரணங்களையும் துயரங்களையும் பார்த்துவிட்ட காரணத்தால் நோயாளிகள் தமது அறிவுரைகளைக் கடைப்பிடிக்காத பொழுது,



அவர்களுக்கும் அதே கதி நேர்ந்துவிடுமோ என்று மருத்துவக் குழுவின் மனம் பதைபதைக்கும்.

இவ்வாறான மன உணர்வுகளை எந்தச் சட்டக்கோவையினுள் உள்வாங்குவது? மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத்துறைகளிலும் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குப் புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வும், கூட்டு முயற்சியும் அவசியமாகும்.

நோயாளர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்ற சிந்தனை எழுந்தால் அது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அந்த நிலையை மாற்ற ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

**ஆரோக்கியம் பொருந்திய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு மக்களின் பங்களிப்பு என்வாறு அமைய வேண்டும்?**

ஒவ்வொருவரும் அடிப்படையிலே ஒரு சுயநலவாதியாக அதாவது ஒவ்வொருவரும் தனது உடல் உளநலத்திலும் சுகத்திலும் கவனமும் அக்கறையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனி நபரும் உடல் உள நலத்துடன் இருந்தால் மட்டுமே அவர் தனது குடும்ப நலனிலே பூரணமாக அக்கறை செலுத்த முடியும். அவருடைய குடும்பம் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே அவனால் அவனது சமூக நலன் பற்றி முழுமனதுடன் சிந்திக்க முடியும். எனவே ஒவ்வொருவரும் தனது ஆரோக்கியத்தை பேணிக் கொண்டால் ஆரோக்கியம் பொருந்திய சமூகம் தானாக உருவாகும். நம் முன்னோர்கள் உடம்பை இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிலுடன் ஒப்பிட்டிருக்கிறார்கள். எனவே இந்த கோயிலை நல்ல முறையில் பேணிப் பாதுகாத்துக் கொள்வது எமது முதற் கடமை ஆகும்.

**ஒவ்வொருவரும் தனது உடல்நலத்தை பேணிக் கொள்வதற்கு அடிப்படையிலே அவர்கள் என்ன செய்ய வேண்டும்?**

தினமும் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை குளித்தல் வேண்டும். தினமும் குறிப்பிட்ட அளவு நேரம் தனது மனத்துக்கு சந்தோசமும் அமைதியும் தரக்கூடிய விடயங்கள் சம்பந்தமாக சிந்திக்க வேண்டும். அல்லது அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். உடல் நிறையை அவர்களுக்கு இருக்க வேண்டிய நிறை வரையறைக்குள் பேணிக் கொள்ள வேண்டும். தினமும் சிறிது நேரமாவது களைத்து வியர்வை சிந்தக் கூடியளவு வேலை செய்ய வேண்டும். உடலுக்கும் மனதுக்கும் போதியளவு ஓய்வு கொடுக்க வேண்டும். ஒவ்வொரு உணவையும் ¼ பங்கு மாப்பொருள், ¼ பங்கு பழம், ¼ பங்கு புரதம் ¼ பங்கு மரக்கறி எனத் திட்டமிட வேண்டும். மதுவுக்கு அடிமையாயிருத்தல், புகைத்தல் போன்ற தீய பழக்கங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உடலையும், உடைகளையும், சுற்றாடலையும் சுத்தமாக பேண வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்